
குழந்தை வைத்தியம்

தோஷங்கள்
மாந்தம்
கணம்
அச்சரம்
வலிப்பு

கரப்பான்
அக்கி
குடல் ஏற்றம்
அம்மை
ஈரல் நோய்கள்



மருந்தும் மாந்திரிகமும்

தாமரை நூலகம், சென்னை - 26.

சித்தர்

குழந்தை வைத்தியம் மருந்தும் மாந்திரிகமும்

பதிப்பாசிரியர்
மே. சீ. சுப்ரமணியம்

வெளியீடு

தாமரை நூலகம்
7, என்.ஜி.ஓ. காலனி, 3வது தெரு,
வடபழனி, சென்னை - 600 026.
தொலைபேசி எண் : 044 - 23620249

குழந்தை வைத்தியம்

தாமரை வெளியீடு எண்	:	30
முதல் பதிப்பு	:	அக்டோபர் 1987
இரண்டாம் பதிப்பு	:	ஜனவரி 1997
மூன்றாவது பதிப்பு	:	மார்ச் 2017

நூலைப்பற்றி....

நூலின் பெயர்	:	குழந்தை வைத்தியம்
பதிப்பாசிரியர்	:	மே.சீ. சுப்ரமணியம்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என்.ஜி. காலனி, வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	:	மார்ச் 2017
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	21 செ.மீ. x 14 செ.மீ.
தாளின் தன்மை	:	16 கி. வெள்ளைத்தாள்
எழுத்துக்கள்	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	118
பிரதிகள்	:	1000
பைண்டிங்	:	செக்ஷன்
நூலின் விலை	:	ரூ. 50.00
அச்சிட்டோர்	:	கிரியேடிவ் ஆப்செட் சென்னை - 600034

முன்னுரை

குழந்தை மருத்துவத்தில் எல்லாப் பகுதிகளையும் உள்ளடக்கி ஒரு நூலை வெளியிட வேண்டும் என்ற நீண்ட நாளைய ஆவலின் விளைவே இந்த நூல்.

குழந்தைகளுக்கு உண்டாகும் நோய்கள் என்ன என்று கண்டு பிடிப்பதே மிகச் சிரமம். அதிலும், சில நோய்களைக் கண்டு பிடிப்பதற்குள் போதும் போதும் என்றாகி விடும். குடம் ஏற்றம், உரம் விழுதல், ஈரல் குலைக்கட்டி நோய், இவைபோன்ற நோய்களைக் கண்டுபிடித்து சிகிச்சை செய்யப் பெரும்பாலான டாக்டர்களால் முடிவ தில்லை. இதனால் குழந்தைகளுக்கு ஆபத்தும் நேரிடுகிறது. இந்த நூலில் இவை போன்ற நோய்களைப் பற்றிச் சுருக்கமாகக் கூறப் பட்டுள்ளன.

குழந்தை வைத்தியத்தில் சித்த மருத்துவ முறைகளில் மாந்திரிகமும் ஒரு பகுதியாக இருந்தது. தற்போது அது புறக்கணிக்கப் பட்டபோதிலும் அதில் பலன் இருப்பதாகக் கருதுபவர் சட்டதிட்டங்களின் படி சாத்தியமானால் பயன்படுத்திக் கொள்ளட்டும் என்பதற்காகச் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த நூலில் இன்னும் எவ்வளவோ சேர்க்கப்பட வேண்டும் என்பதை உணர்கிறோம். விட்டுப்போன விஷயங்களும் இருக்கலாம். படிப்பவர் எடுத்துக்காட்டினால் சேர்த்துக் கொள்ள முயல்கிறோம். சமுதாயத்திற்கே உதவக்கூடிய இதுபோன்ற ஒரு நூலில் பலரின் பங்கும் இருப்பது முறையே அன்றோ.

பதிப்பகத்தார்.

சென்னை

19-8-1987

பொருளடக்கம்

குழந்தை வைத்தியம்

இன்றைக்கு டாக்டர்களின் வரவேற்பறைகளில் காணப்படும் நோயாளிகளில் மிக அதிகமான பேர் குழந்தைகள் தான்! குழந்தையின் உயிரோடு விளையாடலாமா? உடனே டாக்டரிடம் கொண்டு போய்க் காண்பியுங்கள் என்று பெரியவர்கள் அக்கம் பக்கம் வசிப்பவர்கள் ஆலோசனை கூறுவது சாதாரணம்.

குழந்தை மருத்துவத்தில் மேல்நாட்டு "அல்லோபதி" வைத்திய முறை மிக முன்னேறியிருப்பதாகவும் இன்றைக்கு சிசு மரணவிகிதம் மிகவும் குறைந்திருப்பதாகவும் பெருமை பேசிக் கொள்கிறார்கள். உண்மைதான் ஆனால் அதற்கு மேல் நாட்டு மருத்துவ முறை மட்டுமே காரணமா என்பது பரிசீலனை செய்ய வேண்டிய விஷயம்.

பொதுவாக இன்றைக்கு மனிதனின் சராசரி ஆயுள் குறைந்து வருகிறது என்பதும், முன்பு இருந்ததை விட மனிதர்கள் பலம் குறைந்தவர்களாவும் சகிப்புத் தன்மை, தாக்குப் பிடிக்கும் சக்தி குறைந்தவர் களாகவும் இருக்கிறார்கள் என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதற்குப் பல காரணங்கள்.

பால்ய விவாகம்

இந்திய சமுதாயத்தில் பல தலைமுறைகளாக பால்ய விவாகம், குழந்தைத் திருமணம், அனுசரிக்கப்பட்டு வந்தது. சக்தியற்ற பெற்றோர்களுக்கு சக்தியற்ற குழந்தைகளாகப் பிறந்து பரம்பரை க்ஷீணம் அடைந்ததற்கு முக்கியமான காரணம் இது.

இருந்தபோதிலும் குடும்பப் பழக்க வழக்கங்கள் ஆரோக்கிய மான மனோபாவங்கள் காரணமாக இந்தக் குறை ஓரளவு தவிர்க்கப் பட முடிந்தது மூன்று தலைமுறை நான்கு தலைமுறைகள் பால்ய விவாகம் செய்து கொண்டவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் கூட எழுபது எண்பது வயதாகியும் கண்ணும் பல்லும் உறுதியாக விளங்கு கிறவர்களைக் காண்கிறோம்.

அந்தக் காலத்தில் கர்ப்பிணிப் பெண் சந்தோஷமாக இருக்க வேண்டும். நல்லதையே நினைக்க வேண்டும் நல்லதையே செய்ய வேண்டும் என்றெல்லாம் விதிமுறைகள் இருந்தன. அந்தக் காலப் பெண் கோவிலுக்குப் போவாள், இராமாயணம் படிப்பாள். இந்தக் காலப் பெண் சினிமாவிற்குப் போவாள், நவீனங்கள் படிப்பாள். விளைவு என்ன? இவளுடைய மனம் சதா காலமும் சலனங்களுக்கும் ஆசைகளுக்கும் உட்பட்டதாகவே இருக்கும். பிறக்கும் குழந்தைகள் சிறு வயது முதலே காம உணர்வு மிக்கவர்களாக இருப்பினும் ஆச்சரியப்பட முடியாது. இதன் விளைவாக சந்ததிகள் பலம் குன்றியவர்களாகத் தோன்றுவதற்கும் வாய்ப்பு இருக்கின்றதல்லவா?

எண்ணெய்ப் பிள்ளை

இரண்டாவதாக குழந்தை வளர்ப்பு முறைகளிலும் பெரிய வேறுபாடு ஏற்பட்டு விட்டது. சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னால் ஒரு வீட்டில் குழந்தை பிறந்ததென்றால் பிறந்த குழந்தையை எண்ணெய்ப் பிள்ளை என்று தான் சொல்வார்கள். அது எண்ணெயில் ஊறிக்கொண்டே இருக்கும். தாய்க்கும் சத்தான உணவுகள் கொடுக்கப்படும். இந்தக் காலத்தில் குழந்தை மேல் எண்ணெய் பட்டாலே ஆகாது என்கிறார்கள்.

குழந்தையின் மெல்லிய சர்மத்தின் மூலமாக போஷாக்குப் பொருள்கள் செலுத்தப்பட முடியும் என்பது நமது நம்பிக்கை. இந்திய வைத்திய முறை பெரியவர்களுக்கும் கூட தைலங்கள் பற்றுக்கள் மூலமாக மருந்துப் பொருள்கள் உடம்பில் செலுத்தப்பட முடியும் என்பதைக் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் மேல்நாட்டு வைத்திய முறை இதை ஏற்றுக் கொள்வதில்லை. அதைப் பிறகு கவனிப்போம்.

பிறந்த குழந்தைக்கு வழிய எண்ணெய் பூசிச் சுலபமாகச் சீரணமாகக் கூடிய புரதம் உடைய பச்சை பயிற்றின் மாவு போன்றவற்றால் தேய்த்துக் குளிப்பாட்டுவார்கள். கோழி முட்டையின் வெள்ளைக் கருவை உள்ளே கொடுத்து மஞ்சள் கருவால் உடம்பு தேய்த்துக் குளிப்பாட்டுவதும் உண்டு. இதனால் ஜீரண உறுப்புகளைத் தொடாமலேயே குழந்தைக்கு வளர்ச்சியும் சக்தியும் அளிக்கக் கூடிய பொருள்கள் உடம்பில் சேர ஏதுவாயின.

குழந்தை மருத்துவம் என்று வரும்போது பிறந்த சிசுவிற்கு எண்ணெய் புகட்டுவது போன்ற 'அநாகரிகமான முறைகளையும் கடைபிடிக்க வேண்டுமா என்று சிலர் கேலியாகக் கேட்கலாம். எண்ணெய் புகட்டுவது பரிகசிக்கத்தக்க செயல் அல்ல. அதனால் பிறந்த குழந்தையின் குடலுக்கு தாயின் குடலிலிருந்து வந்து சேர்ந்திருக்கக் கூடிய நாக்குப்பூச்சி, கீரிப்பூச்சி, கொக்கிப்புழு போன்றவற்றின் முட்டைகள் யாவும் அடியோடு வெளியேற்றப்படுகின் றன. அதனால் அக்குழந்தைக்கு வரக்கூடிய எத்தனையோ பிற்கால நோய்களி லிருந்து அது காப்பாற்றப் படுகிறது அது மட்டுமல்லாமல் குழந்தையின் குடலுக்கும் இரைப்பை முதலான ஜீரண உறுப்பு களுக்கும் நல்ல சக்தி ஊட்டப்படுகிறது. அதனால் ஈரல் குலைக்கட்டி நோய் போன்ற அபாயகரமான வியாதி ஏற்படாமல் தடுக்கப்படுவதுடன் அந்தக் குழந்தை நீண்டகாலம் ஜீரண உறுப்புகள் சம்பந்தப்பட்ட நோய் கள் ஏதும் இல்லாமல் வாழ்வதற்கும் வழி வகுத்துக் கொடுக்கிறது.

துவளை தேய்த்தல்

அதுமட்டுமல்ல குழந்தைக்குத் துவளை தேய்த்துக் குளிப்பாட்டுவது வழக்கம். மஞ்சள் கிழங்கு, ஜாதிப்பத்திரி திருநீற்றுப் பத்திரி இலைகள் அப்பக்கோவை இலை, கழுதைலத்தி, முதலிய வற்றை வைத்து அரைத்துப் பூசுவார்கள். இவற்றின் மருத்துவ குணம் நல்ல தடுப்பு சக்தியையும் பரிமளமான நறுமணத்தையும் உண்டாக் கும். இக்காலத்தில் வியர்வை நாற்றம் சகிக்க முடியாதபடி குழந்தை கள் வளர்ந்து பெரியவர்களாவது இதனால் தடுக்கப் படுகிறது.

புகை போடுதல்

அடுத்தபடியாக பூப்போன்ற துண்டால் குழந்தையின் உடலைத் துடைத்தவுடன் புகை போடுவார்கள். சாம்பிராணித் தூள் மஞ்சள் தூள், பாம்புச்சட்டை, தேள் கொடுக்கு மணிகள், செம்மறியாட்டின் ரோமம், சில வீடுகளில் மாட்டுக் கொம்பு சீவிய துண்டுகளைக் கூட புகைபோட உபயோகிப்பார்கள். இதனால் குழந்தையின் உடம்பில் ஈரம் உலர்கிறது. நீர் கோர்த்துக் கொண்டு சளி தும்மல் வராமல் தடுக்கப்படுகிறது. விஷங்களுக்கு எதிர்ப்பு சக்தியானது உடம்பில் அணு அணுப்பிரமாணமாக ஏற்றப்படுகிறது.

இந்த நல்ல முறைகளையெல்லாம் இன்றுகைவிட்டு விட்டோம். இன்று குழந்தைகளுக்குத் தடுப்பு சக்தி உண்டாவுதற்காகச் சொட்டு மருந்து கொடுக்கப்படுகிறது. நல்லது தான் ஆனால் மூன்று நாள் குழந்தைகளுக்குக் கூட ஊசி போடுகிறார்களே அதைத் தான் நம்மால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை.

நாட்டு மருந்துகள் நல்லவையா ?

பொதுவாக எல்லா நோய்களுக்கும் ஆண்டிபயாடிக்ஸ் (எதிர் உயிர்ச் சத்து) என்ற மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. அதாவது கிருமிகளால் உண்டாகும் நோய்களை அவற்றை அழித்துக் குணப்படுத்தும் முறை. இந்த மருந்துகள் எல்லாமே பின் விளைவு களை உண்டாக்கக்கூடியவை. நோய்க் கிருமிகளை அழிப்பதற்காக மருந்தைச் செலுத்துகிறோம் நோய்க் கிருமிகள் பூராவையும் அழிந்த பிறகு அதிகமாக உள்ள மருந்து என்ன செய்யும்? அது உடம்பில் உள்ள உயிர் வாழ்க்கைக்கு ஆதாரமான அணுக்களையே தாக்கி அழிக்கவும் தொடங்கி விடலாம் அல்லவா? இதைத் தான் பின் விளைவு என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட பின் விளைவு களினால் மனித இனம் பலவீனமாகப் போவதற்கும் வாய்ப்பு உண்டு.

பொதுவாக ஜனங்களுக்கு நாட்டு மருத்துவ முறைகளில் நம்பிக்கை இல்லாமல் போனதாலேயே டாக்டரிடம் போகிறார்கள். ஆனால் நாட்டு மருந்துகள் என்று சொல்லப்படுகின்ற மருந்துகளை உபயோகப்படுத்தும் சித்த ஆயுர்வேத யுனானி மருத்துவ முறைகளில் உபயோகப்படுத்தப்படும் மருத்துவ சரக்குகள் எல்லாம் இயற்கை யிலிருந்து கிடைப்பவை. பெரும்பாலும் தாவர வர்க்கத்திலிருந்து பெறப்படுபவை. எளிதாக ஜீரணமாகக் கூடியவை எல்லாவற்றையும் விட மிக முக்கியமாக உடலுக்கு எவ்விதக் கெடுதலும் செய்யாதவை. அப்படி இருந்தும் ஜனங்களுக்கு இம் மருத்துவ முறைகளின் மேல் நம்பிக்கை இல்லாமல் போனதன் காரணமென்ன ?

வைத்தியம் தெரியாதவர்களும் சரியான பயிற்சியும் அனுபவமும் இல்லாதவர்களும் மருந்துகளைக் கையாண்டது முக்கியமான காரணம் அடுத்த படியாக வைத்தியன் நோயாளியின் மனதில் நம்பிக்கை உண்டாகச் செய்வதன் மூலம் தான் நோயைக்

குணப்படுத்த முடியும். அதற்குத் தகுந்த தோற்றமும் ஒழுக்கமும் பேச்சும் பாவனைகளும் உடையவர்களே வைத்தியத் தொழிலைச் செய்ய வேண்டும். இயற்கையாக வைத்திய ஞானம் உடையவர் களுக்கு இத்தன்மைகள் தாமாக வந்துவிடும்.

இன்றைக்கு இந்திய மருத்துவ முறைகளின் சிறப்பு மேல் நாட்டவர்களாலும் உணரப்படுகிறது. மேல் நாட்டு வைத்தியத்தால் தீர்க்க முடியாத நோய்களைத் தீர்த்து வைக்கும் அமிர்த சஞ்சீவிகள் இந்திய மருத்துவ முறையில் உள்ளன என்பது ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. இந்திய அரசாங்கமும் தமிழ் நாட்டு அரசாங்கமும் சித்த ஆயுர்வேத யுனானி முறைகளை ஆதரித்து வருகின்றன. இந்த விழிப்பு பெயரளவிலோ அல்லது சில குறிப்பிட்ட துறைகளில் மட்டுமோ அடங்கி விடாமல் எல்லாத் துறைகளிலும் பரவலாக ஆதரிக்கப்படும் நிலை ஏற்பட வேண்டும்.

செவிலியர் பயிற்சி

அடுத்தபடியாக ஒரு முக்கியமான விஷயம், சென்ற தலை முறையில் வாழ்ந்த மருத்துவச்சிகள் எனப்படும் செவிலியர் பிரசவம் பார்ப்பது முதல் பிறந்த சிசுக்களுக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவது மருந்து புகட்டுவது புகைபோடுவது முதலான வேலைகளையும் கவனித்துக் கொண்டார்கள். இந்தக் காலத்தில் அதையெல்லாம் செய்வதற்குத் தெரிந்தவர்கள் யார் இருக்கிறார்கள் என்று கேட்கலாம்.

குழந்தையைக் குளிக்க வைப்பது கூட ஒரு முக்கியமான வேலைதான். கண், காது, மூக்கில் எண்ணெய் விடுவது சாதாரணமான வேலையல்ல. தெரியாதவர்கள் செய்யக்கூடாது. அதே மாதிரி கை கால்களை நன்றாக நீவி விட்டும் மார்பு குறுகி விடால் இதமாகத் தேய்த்துக் கொடுத்தும் இடுப்புத் தசைகளுக்கு வலிவு உண்டாகிற முறையில் பிடித்து விட்டும் இப்படியெல்லாம் குழந்தையைக் குளிப்பாட்டுவதையே ஒரு கலையாகச் செய்து வந்த செவிலியர்கள் இந்த நாட்டில் இருந்து வந்திருக்கிறார்கள். ஆண், குழந்தைகளானால் மார்புக் காம்புகளைப் பிடித்து அழுத்தி உள்ளே இருக்கும் கொழுப்புப் பொருளை வெளியேற்றி விடுவார்கள். பெண் குழந்தைகளுக்கு அப்படி செய்யமாட்டார்கள். இவையெல்லாம்

எங்கோ நாட்டுப் புறங்களைத் தவிர மற்றப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குத் தெரியாத விஷயங்களே! இவற்றையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது சித்த ஆயுர்வேத முறைகளில் பாடம் சொல்லிக் கொடுத்து டாக்டர்களைத் தயார் செய்வதைப் போல் இம்முறைகளின் படிப் பிரசவம் பார்க்கவும் குழந்தைகளைப் பேணவும் பயிற்சி பெற்ற செவிலியர்களைத் தயார் செய்வதும் அரசாங்கத்திற்கும் மருத்துவ வல்லுனர்களுக்கும் கடமையாகும் என்பதை எடுத்துக் காட்டவேண்டிய அவசியம் உண்டாகிறது.

முதலுதவி சிகிச்சைகள் செய்வதற்குக் கூடப் பயிற்சிகள் பட்டம் வழங்குதல் எல்லாம் இருக்கும்போது நாட்டிற்கு நல்ல ஆரோக்கியமான குடிமக்களைத் தயார் செய்து கொடுக்கும் இந்தத் துறையைப் பற்றியும் அதிகமான கவனம் செலுத்த வேண்டியது மிகவும் முக்கியம்.

பிரசவம் பார்க்கும் (Midwife) பயிற்சி பெறுகிற பெண்களுக்கு குழந்தை வளர்ப்பு பற்றிய பயிற்சிகளும் அளித்துக் குழந்தை பிறந்த் பிறகு குறைந்தது ஒரு வருட காலம் வரை அவர்களுடைய பராமரிப்பில் இருக்கும்படியாகச் செய்வது நல்ல திட்டம். அதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும்.

குழந்தை அழுதால்

குழந்தையின் உடல்நிலை ஆரோக்கியமாக இருக்கும் வரை அது அழுவதில்லை அதனால் குழந்தை அழுகிறதென்றாலே அதன் ஆரோக்கியம் உடல் நலம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

சாதாரணமான முறையில் நன்றாகப் பிறந்த குழந்தைக்கு இரண்டு வகை நோய்கள் தான் வர முடியும். முதலாவதாக ஜீரண உறுப்புகள் சம்பந்தப்பட்ட நோய்கள். இரண்டாவது மூச்சு சம்பந்தப் பட்ட நோய்கள்.

குழந்தையின் வயிற்றில் காற்றுத் தங்குவதால் வயிறு உப்புசமாகி வயிற்று வலியும் ஏற்படலாம். அஜீரணத்தினால் உணவு சீரணமாகாமல் வலி ஏற்படலாம். குடலில் அழுக்கு சேர்வதால் மலம் கழியாமல் வயிற்று வலி ஏற்படலாம். அஜீரணக் கோளாறால் பேதியும் ஏற்படலாம்.

குழந்தை ஓயாமல் மெதுவாக அழுது கொண்டிருந்தால் அஜீரணம் மந்தம் ஏற்பட்டிருக்கிறது என்று அர்த்தம். வீல் வீல் என்று கத்தினால் வயிற்றை வலிக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம். வயிற்றின் மேல் கொஞ்சம் விளக்கெண்ணெய் தேய்த்து நீவி விடுவது வசம்பைச் சுட்டு அரைத்துக் குழைத்துத் தொப்புள் மேல் பூசிவிடுவது இதற்கு சாதாரண வைத்தியம். இதனால் காற்று வெளியேறி விடும் கழியாமலிருந்த மலம் கழிந்து விடும். சில நிமிஷங்களில் குழந்தை அழுவதை நிறுத்தி விடும். குழந்தை அதிகமாகக் கத்தினால் ஆசனத் துவாரத்தில் மெல்லிய சோப்புத் துண்டை விளக்கெண்ணெயில் நனைத்து வைத்து மலம் கழியச் செய்யலாம்.

குழந்தைக்குப் பேதியானால் கீழாநெல்லி இலைகளை உறுவி ஒரு சங்கு மோரில் அரைத்துக் கொடுத்தால் போதும். இரண்டு மூன்று வேளை கொடுத்தவுடன் நின்றுவிடும். நிற்காவிட்டால் வைத்தியரிடம் காட்டுவது நல்லது.

குழந்தைக்கு உஷ்ணம் ஏற்பட்டு மூத்திரம் போகும்போது எரிச்சல் உண்டாவதாலும் அழலாம். இதற்கும் வயிற்றின் மேலும் தொப்புள் மேலும் விளக்கெண்ணெய் தேய்த்து நீவி விட்டாலே போதும்.

நோய் ஏன் வருகிறது ?

குழந்தையின் உடல், உறுப்புகள் எல்லாமே மிக மிக மென்மை யானவை சிசுவாக இருக்கும்போது குழந்தைக்கு ஏற்படும் ஜீரணக் கோளாறுகளுக்கெல்லாம் தாய் உண்ணும் உணவே காரணம். குறைந்தது ஒரு மாத காலம் வரை தாயார் சுலபமாக ஜீரணமாகக் கூடிய சத்துள்ள உணவு வகைகளை மிதமாகச் சாப்பிட வேண்டும்.

சில நாட்களுக்குத் தாய்க்குப் பத்திய உணவு கொடுத்து வருவார்கள். தாய்க்கு வாய்புக் கோளாறு ஏற்படக் கூடாதென் பதற்காக நடகாயம் என்ற லேகியம் கொடுப்பார்கள். இதெல்லாம் குழந்தைக்கு ஜீரணக் கோளாறு ஏற்படக் கூடாதே என்பதற்காகத் தான். தாய்க்கு இலேசாக வயிறு கனமாக இருந்தால் கூடக் குழந்தை நோயால் துன்புறப் போகிறது என்பதை நிச்சயமாகத் தெரிந்து கொள்ளலாம்.

உளுந்து வடை போன்ற கனமான ஆகாரம் சாப்பிட்டவர்கள் குழந்தையை முத்தமிடக் கூடாது. குழந்தையின் வாயிலோ வயிற்றிலோ ஊதக் கூடாது என்று சொல்வார்கள். ஒரு வயது ஒன்றரை வயதான குழந்தைக்குக் கூட இது பொருந்தும். இதனால் காற்று கூட குழந்தையின் ஆரோக்கியத்தைப் பாதிக்கும் என்பது தெரிகிறதல்லவா ?

சில குடும்பங்களில் குழந்தை பிறந்த பதினாறாவது நாள் அல்லது வேறு நாளில் உணவுப் பண்டங்களையெல்லாம் படைத்து வைத்துப் பூஜை செய்வார்கள். இந்த உணவுகளின் ஆவி குழந்தை மேல் படவேண்டும் என்பது தான் நோக்கம்.

குளிர்ந்த காற்று வீசினால் வெளியே மழை அல்லது பனி பெய்தால் குழந்தைக்குச் சளி பிடித்து விடுகிறது கர் கர் என்று மூச்சு விட்டுக் கொண்டு குழந்தை திணறவும் ஆரம்பித்து விடுகிறது. சளியினால் காய்ச்சலும் வரலாம். ஆரம்ப நிலையில் இதற்கு வைத்தியம் சாம்பிராணியும் மஞ்சள் தூளும் கலந்து புகை போடுவது. வெற்றிலை துளசி அல்லது கர்ப்பூரவல்லிச் சாறு இரண்டு மூன்று சொட்டுகள் வீதம் உள்ளுக்குக் கொடுப்பது. கர்ப்பூரவல்லி அல்லது வெற்றிலையில் இலேசாக எண்ணெய் தடவிச் சூடு பிடிக்கச் செய்து குழந்தையின் மார்பிலும் முதுகிலும் போடுவது.

குழந்தைகளுக்கு வரும் சாதாரணமான நோய்களுக்குக் கடுமையான வைத்தியம் செய்யாமலிருப்பதே நல்லது.

உறை மருந்து

முன் காலங்களில் - இப்போது எங்காவது ஒரு சில குடும்பங்களில் தாய்மார்கள் உறைமருந்து என்று சிறுபெட்டி வைத்திருப்பார்கள்.

கை அகலத்தில் உறைக்கின்ற கல் ஒன்று இருக்கும் அதில் வென்னீர், வெற்றிலைச்சாறு, துளசிச்சாறு, ஓமகஷாயம், இஞ்சிச்சாறு முதலியவைகளில் ஏதாவது ஒன்றை விட்டு இரண்டு தடவை அல்லது சில தடவை உறைப்பார்கள்.

உறைந்த அந்த விழுதை தேன் அல்லது சர்க்கரை சேர்த்துக் கொடுப்பார்கள்.

கடுக்காய், சித்தரத்தை, சுக்கு, சாதிக்காய், மாசிக்காய், வசம்பு முதலிய ஆறு கடைச் சரக்குகள் தான் உரை மருந்துப் பெட்டியில் இருக்கும்.

தயார் செய்தல் :

நெல்லைப் புழுக்கவைப்பதற்காக வேகவைக்கும் போது இந்த ஆறு கடைச்சரக்கையும் வெள்ளைத் துணியில் முடிந்து மேலே வைக்கவும். அரைவேக்காடு ஆனதும் (காய்களை அழுத்தினால் அழுந்துகின்ற பதத்தில்) எடுத்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

அனுபானம் :

வாயு, சளி இருந்தால் வெந்நீரில் கொடுக்கலாம் சளி, மப்பு இருந்தால் வெற்றிலைச்சாறு, துளசிச்சாறு, தேன் ஆகிய ஏதேனும் ஒன்றில் கொடுக்கலாம்.

வயிற்றுப்போக்கு, வயிறு மந்தம் இருந்தால் ஓமக்கஷாயம், தேன் முதலியவற்றில் தரலாம் மந்தமான காய்ச்சல் வாந்தி இருக்கும்போது இஞ்சிச்சாற்றிலோ தேனிலோ கொடுக்கலாம்.

உறைமருந்துகளை 'காரமருந்து' என்றும் சில பகுதிகளில் சொல்லப்படும் அதனால் தித்திப்பாக ஆக்கிக் கொடுக்க வேண்டும்.

குழந்தை பிறந்த பத்துப்பதினைந்து நாட்களில் இருந்து ஐந்து ஆறு வயது வரை கொடுக்கலாம் சிறு குழந்தைகளுக்கு ஒன்று இரண்டு உறைப்பு போதும் ஐந்து வயது குழந்தைக்கு பத்து பதினைந்து உறைப்பு போதும்.

பொதுவாக ஆறு சரக்குகளையும் உறைத்துக் கொடுப்பது தான் வழக்கம்.

வயிற்றின் அழற்சி, கடுப்புடன் சீதமாக மலம் வெளியாதல், ரத்தப்போக்கு இருந்தால் சுக்கை உறைக்காமல் கொடுக்கலாம்.

தொண்டை, வாய்ப்புண், வரட்டு இருமல், வயிறு வேக்காளம், இருக்கும்போது சித்தரத்தை கொடுக்கக்கூடாது.

மலச்சிக்கல் உள்ள குழந்தைகளுக்கு சாதிக்காயை கொடுக்காமல் இருக்கலாம் அல்லது அளவை குறைத்துக்

கொடுக்கலாம் தூக்கமும் மயக்கமும் இருந்தால் இது அவசியம் கூடாது தூக்கம் தேவை என்றால் அதிக உறைப்பு சேர்க்கலாம்.

தோஷம் என்பது என்ன ?

காற்றும் மூச்சும் கூட குழந்தை உடல் நலத்தைப் பாதிக்கும் என்று கண்டோம் அவை தவிர குழந்தைகளின் உடல் நலத்திற்கு ஊறு செய்யக்கூடிய சில்லறை தேவதைகளும் இருப்பதாக நம்பப் படுகிறது. ஆவிகள், தேவதைகள் காற்று, கறுப்பு என்தெல்லாம் மூட நம்பிக்கைகள் என்று சொல்கிறார்கள். ஆனால்,

டெலிவிஷன் பெட்டியில் படத்தைப் பார்ப்பதற்கு முன்னால் அந்தப் படம் வானவெளியில் காற்று அல்லது ஈதரில்-ஏதோ ஒன்றில் இருந்ததாகச் சொன்னால் மறுக்க முடியுமா? நம்முடைய கண்ணுக்குத் தெரியவில்லை என்பதாலேயே அப்படி எதுவும் இல்லை, கிடையாது என்று மறுத்துவிடுவது அறியாமை என்பதை இது புலப்படுத்த வில்லையா ? நமது மூதாதையர் அறிவு ஆராய்ச்சிக்கு உபயோகப் படுத்தக்கூடிய கருவிகள் இல்லாத ஒரு காலத்தில் தங்களுடைய மனதையும் சிந்தனையையும் இயற்கையில் நுட்பமாகக் கண்ணுக்கு புலப்படக் கூடியவையும், புலப்படாதவையும் ஆன விஷயங்களைப் பற்றி நிறைய ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள் அவற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு இன்றைய சமுதாய மக்களுக்கு அறவே சக்தியில்லை என்றே சொல்லி விடலாம். முதலாவதாக அத்தகைய ஆராய்ச்சிகள் செய்வதற்கு வலிவான உடல் வேண்டும். மனதில் உறுதி வேண்டும். கட்டுப்பாடான வாழ்க்கை வாழ வேண்டும் எதைக் கண்டும் அஞ்சாத துணிச்சல் வேண்டும் கடவுளை உபாசிப்பதானாலும் சரி சாத்தானை உபாசிப்பதானாலும் சரி. இவையெல்லாம் இருந்தால் மட்டுமே முடியும்.

இவற்றில் எதுவுமே இல்லாத சிலர், இவை சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியின் முதல் படியில் கூட காலடி எடுத்து வைக்கத் தயாராக இல்லாதவர்கள் பேயாவது பிசாசாவது சாமியாவது பூதமாவது, என்று வெறும் பேச்சுப் பேசுவதால் பயன் இல்லை.

சில்லறை தேவதைகளால் குழந்தைகளுக்குப் பிணிகள் நேருகின்றன என்ற கருத்தை அடியோடு தள்ளி விடுவதற்கில்லை.

இந்தத் துறையில் ஆராய்ச்சி செய்யச் சக்தியுள்ளவர்கள் பிறக்கும் வரை இருப்பதை அப்படியே காப்பாற்றி வைப்பது நல்லதென்று நினைக்கின்றோம் அப்படி செய்வதால் ஏதோ சிலர் சமுதாயத்திற்கு அல்லது மற்ற மனிதர்களுக்குக் கெடுதல் செய்யாமல் இயன்றவரை நன்மை செய்யக் கூடியவர்கள் தோன்றவும் கூடும். அதனாலேயே இந்த நூலில் பாலாரிஷ்ட தோஷப் பகுதியும் மாந்திரீக சிகிக்சை முறைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பாலாரிஷ்ட நோய்கள்

குழந்தைகளுக்கு மருத்துவம் செய்வது என்பது மிக அரிய கலையாகும் குழந்தைகளின் நோயின் தன்மையினை மருத்துவரே முழுமையாக அறிந்தாக வேண்டியுள்ளது.

பொதுவாக மருத்துவ முறையில் நான்கு படிகள் அமைகின்றன. அந்த நான்கு படிகளையே இக்காலத்தில் நான்கு ஆண்டு மருத்துவக் கல்வியாக அமைத்து கற்பிக்கப்படுகிறது.

என்ன நோய் என்பதை அறிவது முதற்படி. பெரியவர்களாக இருந்தால் அவர்கள் மூலமே கேட்டு அறிந்து கொள்ளலாம். அதன் பிறகு சோதனை அனுபவம் ஆகியவற்றின் மூலம் உறுதிப் படுத்திக் கொள்ளலாம். குழந்தைகளைப் பொறுத்தவரை இந்த முதற்படி மிகவும் அவசியமானதாகவும் அருமையானதாகவும் ஆகிறது.

அந்த நோய் வந்ததின் காரணம் என்ன என்பதை கண்டறிதல் அடுத்த படியாகும். பெரியவர்களுக்கு மருத்துவம் செய்வது சுலபம். குழந்தைகளைப் பொருத்தவரை காரணம் கண்டறிவது அனுபவத் தாலேயே முடியும்.

நோய்போக்கும் வழிமுறைகளை நிதானித்து முடிவெடுப்பது மூன்றாவது படி.

எடுத்த முடிவிற்கு ஏற்ப நோயாளி, அவன் வயது உள்ள நிலை, மருந்து, மருந்தின் திறன், செயல்படும் தன்மை முதலியவற்றை ஆராய்ந்து அளிப்பது மருந்து நான்காவது படியாகும்.

நோய் உண்டாவதற்கான காரணங்கள் பலவகையாக உள்ளன. ஆனாலும் சில முக்கியமான காரணங்களைச் செல்லலாம். அந்தக் காரணங்கள் பொதுவானவை என்றாலும் குழந்தை

நோய்களுக்கும் இது பொருந்தும்.

பரம்பரையாக உள்ள உடற்கூறுபாடு

உணவில் உண்டாகும் ஊட்டச்சத்தில் குறை

அதிக சத்துள்ள உணவுகளை அளவுக்கு மீறி உண்பதுடன் போதிய உழைப்பில்லாமல் இருத்தல்.

குறிப்பிட்ட நேரத்தில் உண்ணாமை.

தொற்று நோயாக வருபவை.

ஈ, கொசு, கரப்பான், பேன், நீர்க்கிருமிகள் போன்றவற்றால் உண்டாகுபவை.

காற்றோட்டமில்லாமை.

மலச்சிக்கல்.

மிதமிஞ்சிய காரம், உப்பு, இனிப்பு போன்றவை.

திடீர் பருவநிலை மாற்றங்கள்.

குழந்தை தாயின் கருவில் வளரும் சூழ்நிலையும் பிறந்தவுடன் வளரத் தொடங்கும் சூழ்நிலையும் முற்றிலும் வேறுபடுகின்றன. இந்தச் சூழ்நிலையில் கருவிலேயே உண்டாகின்ற குறைகள் அகக்காரணம் எனக் கொள்ளலாம்.

கருவில் குழந்தை வளரும்போது தாயிடமிருந்து தோல் ரத்தம், சதை, கொழுப்பு, தொப்புள், இருதயம், கல்லீரல், மண்ணிரல், குடல் முதலிய உறுப்புகள் உருவாக்கப்படுகின்றன.

தந்தையின் மூலமாக தலைமயிர், நகம், மீசை, பற்கள், எலும்பு, ரத்தக்குழாய்கள், நரம்புகள் முதலியன உண்டாகின்றன

தாய்க்கோ தந்தைக்கோ குறைபாடுகள் இருந்தால் அதற்கேற்றபடி குழந்தை பிறக்கும்போதே நோயுடன் பிறக்கின்றது.

குழந்தை பிறந்தவுடன் வளர்ந்து உணவு உண்ணும் காலம் வரை தாய்ப்பாலை அருந்தியே வளர்கின்றது. தாயின் உணவு உண்ணும் முறைகளாலும் நடத்தைகளாலும் மனச் சங்கடங்களாலும் தாய்ப்பாலின் தன்மைகள் மாறுகின்றன. அதன் காரணமாகவும்

குழந்தைக்கு நோய்கள் உண்டாகவும் அதிகமாகவும் வழிகள் ஏற்படுகின்றன.

குழந்தை பிறந்ததில் இருந்து விபரம் தெரிந்து பேசுகின்ற வரையில் உண்டாகும் குறைபாடுகள் ஏராளம். இளம் பருவத்தில் எதிர்ப்படும் பல சங்கடங்களை சமாளித்து தாயார் குழந்தையை வளர்க்கிறாள்.

அடிபடுதல், ஆகாரக்கோளாறு, போன்ற காரணங்களால் உண்டான பிணிகள் எளிதில் குணமாக்கப்படுகின்றன.

இன்னதென்று சரியாகப் புரியாத காரணத்தால் முன் வினையின் காரணமாகவும் சில நோய்கள் குழந்தைகளுக்கு உண்டாகின்றன. அப்படிப்பட்ட நோய்களையே பாலாரிஷ்ட நோய்கள் எனக் கூறுகின்றனர்.

பாலர்களுக்கு உண்டாகும் சிக்கலான குழப்பமான நோய் என்பது இதன் பொருளாகும்,பெரும்பாலும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வருவது தான் பாலாரிஷ்டமாகும்.

பாலாரிஷ்ட நோய்களில் குறிப்பிடத்தக்கவை தோஷம், மாந்தம், கணம் என்பவை.

தோஷம் என்பது குற்றம் என்று பொதுவாகப் பொருள் சொல்லப்பட்டாலும் தொடுவது என்று தான் பொருள் கொள்ளப் படுகிறது. கை கால்கள் உடல் முதலிய உறுப்புகளால் தொடுதல், கண்ணாலாகிய பார்வையால் தொடுதல் நிழல் போன்ற ஊறுகளால், தொடுதல் என மூவகைகளையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம்.

பறவை இனங்கள் எல்லாம் அழகானவை அல்ல. அவைகளின் உணவுகளும் சிறு பறவைகள் அல்லது விலங்கு களாகவே இருக்கும். கழுகு போன்ற சிலவகைப் பறவைகள் வேகமாக ஆவேசமாகப் பறக்கும்போது குழந்தைகள் பார்த்தால் பயந்து விடுவது உண்டு.

சில பறவைகள் பறக்கும்போது எச்சில் அல்லது கழிவுகள் குழந்தைகள் மேல் தெரித்து விடுவதும் உண்டு. அதன் காரணமாகவும் தோஷம் உண்டாகலாம்.

சில பறவை இனங்களின் இறகுகள் உதிர்ந்து விடும். அதன் மீதுள்ளஅழுக்குகள் மேலே படும். இப்படிப்பட்ட காரணங்களாலும் தோஷம் உண்டாகும்.

பட்சிகள், பறவைகள், குருவி போன்ற சிறு புள்ளினங்கள் முதலியவைகளைப் பல பிரிவுகளாக பிரித்துத் தொகுத்துள்ளனர்.

வானத்தில் உள்ள தேவர்களும் வனங்களில் உள்ள தேவதைகளும் அழகாக - மிக மிக அழகாக இருப்பார்கள். அதனால் அவர்கள் உருவம் மிகப் பிரகாசமாக இருக்கும். அதை குழந்தைகள் கண்டால் அதிக வெளிச்சத்தினால் கண் கூசிக் கலக்கமடையும். அப்படிப்பட்ட தோஷம் எட்சி தோஷம் எனப்படுகிறது. 'யக்ஷர்' என்பது எட்சர் என்று சொல்லி எட்சியாக மாறி உள்ளதாக கருதப்படுகிறது.

நீரிலும் நிலத்திலும் வாழும் உயிரினங்களில் ஒன்று தேரை என்பது. அந்தத் தேரை உள்ள தேங்காய் போன்ற உணவுகளை உபயோகிப்பதாலும் குற்றம் உண்டாகும். தேரைகள் குதித்து வந்து குழந்தைகளின் மீது பட்டுச் செல்லும் போது குற்றமுண்டாகலாம். ஒரு சில குழந்தைகள் தேரை போல் இளைத்து உருமாறுவதும் உண்டு. இந்த நிலைகளை தேரை தோஷம் எனச் சொல்வர்.

காலையில் படுக்கையில் இருந்து வெளிவந்த ஆடவர் குழந்தையைக் கண்டால் உண்டாகும் தோஷம் ஆண்தோஷம் எனப்படும்.

கருச்சிதைவுக்குள்ளான பெண், பிள்ளைப் பேறுக்காக தாயத்து கட்டியுள்ள பெண், மாதவிடாய் ஆன பெண் ஆகியோர் எண்ணத்தால் குழந்தைப் பேறு அடையத் துடிப்பவர்கள், ஏக்கத்தால் உள்ள அவர்கள் குழந்தைகளைத் தொடுவதனால் தூக்கி எடுப்பதால் பார்த்து மயங்குவதால் தோஷம் உண்டாகும்.

தீய எண்ணமுடையோர் கண்டாலே அச்செயல் விளங்காது என்றும் கண் திருஷ்டி என்று கூறுவதும் இத்தோஷ வகைகளில் ஒன்று 'கண்ணேறு கழித்தல்' என்ற சடங்கை பெரும்பாலான நிகழ்ச்சிகளில் செய்வது நம் நாட்டு மரபு.

ஐந்து மாதக் கர்ப்பிணியானவள் சேர்க்கையிலிருந்து வந்த ஆணையோ பெண்ணையோ கண்டால் அவள் வயிற்றில் இருக்கும்

கருவுக்கும் தோஷ முண்டாம். அந்த தோஷத்தால் குழந்தை பிறந்தவுடன் அதற்கு சுளுக்கு ஏற்படும் வயிறு வலிக்கும். 'முகம் கறுத்துத் தெரியும்'.

இந்தத் தோஷங்கள் எல்லாம் காரண காரியங்கள் தெளிவாக இல்லாததால் தெய்வ குற்றமாகக் கருதப்படுகின்றன.

மாந்தம்

செரிமானமாகாமல் வயிற்றில் மந்தமான நிலைமை ஏற்படுவது மாந்தம் எனப்படும். மலச்சிக்கல் உண்டாக்கக் கூடிய பதார்த்தங்களை தாயார் உண்பதினால் உண்டாகலாம்.

குழந்தைகளின் நோய்களுக்கு தாய்ப்பால் தான் காரணமாக அமைகின்றது. எனவே தாயின் ஆகாரமே நோயையும் உண்டாக்கு கின்றது. பெரும்பாலும் குழந்தை மருத்துவத்தில் தாய்க்கு மருந்தும் பத்தியமும் சொல்லப்படுகின்றது.

கைக்குழந்தை உள்ள தாய் அல்லது குழந்தையை வளர்க்கும் (செவிலி) பெண் கணவனுடன் உறவு கொண்டவுடன் குழந்தைக்குப் பால் புகட்டுவதாலும் குழந்தையை சீராட்டுவதாலும் மாந்தம் உண்டாகக் கூடும் என்றும் அனுபவமுள்ளவர்கள் குறிப்பிடுகின்றனர்.

கணம்

மாந்தவியாதி சரிவர கவனிக்கப்படாதபோது முற்றிய நிலை கணம் என்னும் நோயாக மாறி விடுகிறது.

மாந்த நிலையில் மலம் கழிவது சீராகி விட்டால் மற்ற அறிகுறிகள் தானாகக் குறைந்து விடும்.

கணம் என்னும் கணைவியாதியில் மற்ற எல்லா அவயங்களும் பாதிக்கப்படுகின்றன. வேளைக்கு வேளை குழந்தையின் நோய் நிலைமைகள் மாறுகின்றன. கொஞ்சம் கவனிக்காமல் விட்டு விட்டால் வலிப்பு போன்ற நோய்கள் உண்டாகி மரண நிலைக்கு சென்று விடுகின்றது. சில கண நோய்கள் குணமாகி விட்டாலும் குழந்தை களின் உடல் உறுப்புகளை ஊனமாக்கி விடுகின்றன. எனவே இந்த நோயை ஆரம்பத்திலேயே தணிக்க முயற்சி செய்ய வேண்டும்.

கரப்பான், சன்னி, காய்ச்சல் போன்ற சில நோய்களும்

குழந்தைகளுக்கு உண்டாகின்றன அவை எல்லாம் வேறு, நோய் பாதிப்பால் ஏற்பட்டு அந்த நோய் தணிந்தவுடன் மாறிவிடக் கூடியது. எனவே, நம் முன்னோர்கள் அவைகளை பாலாரிஷ்டப் பட்டியலில் சேர்க்கவில்லை.

பாலாரிஷ்ட ரோகங்களுக்கு மருத்துவம்

பாலாரிஷ்ட நோய்கள் பெரும்பாலும் மனக்கோளாறு காரணமாக உண்டாகுபவையே பறவை போன்றவற்றின் நிழல்கள் தோற்றங்கள் காண்பதால் பயத்தின் காரணமாக உண்டாகுபவை கெட்ட எண்ணத்தால் பார்ப்பதால் தான் தோஷம் உண்டாகிறது.

எனவே நோயை மூலிகைகள் கடைச் சரக்குகள் கொண்டு மருத்துவம் செய்வதும் உண்டு. அத்துடன் மன நிலையைச் சீர்நிலைக்குக் கொண்டு வருவதற்காக மனதை ஒருமுகப்படவும் செய்யவேண்டும். அதற்காக (மன்-திறம்) மந்திரம் மூலமாக மருத்துவம் செய்ய வேண்டியுள்ளது.

தெய்வ நம்பிக்கையை உயிராகக் கொண்டு மந்திரமாவதுநீறு; மாமருந்தாவது நீறு, என்ற கொள்கையில் சமய நெறி தழுவிய மருத்துவ முறை உருவானது.

"நோய்வயப்பட்ட மனித உடலில் நோய் குணமாக இயற்கை யான ஒரு முறை செயல்படுகின்றது. அதில் நம்பிக்கை சேரும்போது குணமாகும் முறை வேகமடைகிறது" எனப் புகழ்பெற்ற மூதறிஞர்கள் சொல்கின்றனர்.

சிறு தெய்வக் கோளாறுகளால் உண்டாகுபவை என்பதால் 'தெய்வீக மருத்துவ நெறி' என்றும், பூதங்களின் தூண்டுதலால் உண்டாகுபவை என்பதால் 'பூத வைத்தியம்' என்றும் கிரகங்களின் பார்வையால் உண்டாகுபவை என்பதால் 'கிரக தோஷம்' என்றும் மனதை நெறிப்படுத்தி மருத்துவம் செய்வதால் மந்திர வைத்தியம் அல்லது மாந்திரீகம் என்று ஒரு வைத்திய நெறியே உருவாயிற்று.

பேய், பிசாசு, பிதுர்தேவதைகள், பிற தேவதைகள் தீய கிரகங்கள் போன்றவற்றின் சேஷ்டைகளால் உண்டாகும் நோய்களாக பாலாரிஷ்டம் கருதப்படுகிறது. பெரும்பாலும் மனோவியாதி என்றே மதிப்பிடப்படுகிறது. அதற்கான நீக்கத்திற்காக மணி மந்திர

ஔஷதங்கள், தீர்த்த ஸ்நானம், தேவதாபூசை, தேவதா பிரார்த்தனை முதலியன கூறப்படுகின்றன.

இரவம், வேம்பு போன்ற மூலிகைகளை வாயிற்படியில் செருகுதல், அகிற்புகையை ஊட்டுதல், வெண் கடுகு இடுதல் ஆகியன பேய் போன்ற துஷ்ட கிரகங்களை விரட்டும் நம்பிக்கையைச் சேர்ந்தனவே! இவை இக்கால அறிவியல் நோக்கத்திற்காக இணங்க கண்ணுக்குத் தெரியாத பிணிகளை உண்டாக்கும் நச்சுக் கிருமிகளைக் கொல்லும் திறனுடையவை.

மந்திர மருத்துவம் செய்கின்ற மருத்துவன் மிகவும் ஒழுக்கம் உள்ளவனாக இருக்க வேண்டும். தினசரி குளித்து சுத்தமாக இருக்க வேண்டும். தெய்வபக்தி உடையவனாகவும் இருக்க வேண்டும். தினசரி தனது உபாசனா தெய்வத்தை வழிபடுபவனாகவும் மஞ்சள், சிவப்பு, கருப்பு ஆகிய வித்தியாசமான வேஷ்டியை கட்டவேண்டும் என்ற நெறிகளும் உள்ளன.

குழந்தைகள் தெய்வத்திற்கு சமம் என்பதால் குழந்தைகளுக்கு மந்திரிப்போர் காசு எதுவும் கேட்கக் கூடாது. வாங்கக் கூடாது என்றே சொல்லி வந்துள்ளனர்.

மந்திரச் சொற்கள் மிகவும் சிறியவை, சாதாரணமாக சொன்னால் எளிய வார்த்தைகளே! மீண்டும் மீண்டும் அதைச் சொல்லும் போதுதான் அதற்கு வலிமை-வீரியம்-உண்டாகின்றது ஆண்டவனை துதிக்கின்ற போது அவரது மங்களகரமான செயல்களைச் சொல்லி எமக்கு நல்லது செய் என்று வேண்டப் படுகிறது. இதேபோல் கிரகங்களை சிறு தேவதைகளை விளித்து தொல்லை கொடுக்காதே ஓடிப்போ விலகிவிடு என்று இறைவனின் தொண்டனாக இருந்து வேண்டிக் கொள்வதே இம்மந்திர முறையின் நோக்கமாகும்.

இந்த மந்திர மருத்துவத்தை பெண்களும் செய்யலாம். ஆனால் இயற்கை சில நாட்கள் அவர்கள் ஓய்வு எடுக்கக் கூடிய நாட்களை வகுத்துள்ளது. மற்ற நாட்களில் முறையாகச் செய்யலாம்.

மந்திர மருத்துவத்தில் முக்கியமானது சொல் உச்சரிப்பு தான் சொல்லைத் தவறுதலாக சொல்லக்கூடாது. அதே நேரத்தில் மந்திரம்

சொல்லிக் கொண்டு இருக்கும்போது வேறு வார்த்தைகள் பேசக் கூடாது. நூற்றி எட்டு தடவை செபிக்கத் தொடங்குவதற்கு முன்பாகவே தேவையானவைகளை எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். இடையில் யார் வந்தாலும் எந்தவிஷயமாக இருந்தாலும் பேசக்கூடாது. ஒருவேளை தவிர்க்க முடியாமல் தடைபட்டு விட்டால் மீண்டும் முதலில் இருந்தே எண்ணிக்கையை தொடங்கவேண்டும்.

சொற்களை சுத்தமாக உச்சரிக்கவேண்டும். காசா லேசா என்ற சொல்லை சொல்லும்போது காசு பெரியது என்ற பொருள்படும் அதே சொல்லை வேகமாகச் சொன்னால் 'காசாலே சா' (காசினாலேயே மரணமடை) என்று பொருள் படும் இதற்காகத் தான் மந்திரம் போன்ற சில கலைகள் நேரிலேயே குரு முகமாகக் கற்க வேண்டும் நியதி வகுத்துள்ளனர்.

இயன்றவரை எளிய மந்திரப் பதங்களே இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளன. வேறு பெரிய மந்திரங்களும் சக்கரங்களும் இருந்தாலும் சிறப்பானதும் எளியதுமான முறைகள் மட்டுமே எழுதப்பட்டுள்ளன.

குழந்தைகள் படுகின்ற கஷ்டங்களைக் கொண்டு நோய்களை அறிதல்

தலையில் நோய் இருந்தால் :

தலையை அதிகமாக ஆட்டும். கண்களை மூடிக்கொள்ளும் எதைக் கண்டாலும் பிடிக்காமல் கத்தும் தூக்கமிருக்காது.

காது நோய் :

கைகளால் காதுகளைத் தொடும். தலையைக் கடுமையாகச் சுழற்றும் பால் குடிக்காது. தூக்கமிருக்காது.

வாயில் நோய் :

அதிக உமிழ் நீர் சுரக்கும் தாய்ப்பால் உண்ணாமல் வெறுப்பு உண்டாக்கும். குடித்த பாலை கக்கினால் மஞ்சள் நிறமாக இருக்கும். சிரமப்பட்டு மூக்கினால் மூச்சுவிடும்.

கழுத்தில் நோய் :

பால் சீரணமாகாமல் வாந்தி எடுக்கும் தொண்டையில் கபம் கட்டும். இலேசான சுரம் இருக்கும் பசி இருக்காது உடம்பில் சோம்பல் உண்டாகும்.

நாக்கில் நோய் :

உமிழ் நீர் அதிகமாகச் சுரக்கும். வாய் ருசி மாறும் அயர்வாக இருக்கும் கன்னத்தில் வீக்கம் உண்டாகும். வாய் சரியாக மூட முடியாமல் திறந்த படியே இருக்கும்.

தொண்டைப் பிடிப்பு :

இலேசான காய்ச்சல் இருக்கும் வாயில் எச்சில் ஊறும். அதை விழுங்க முடியாது. வாய் ருசி கெட்டுவிடும்.

காய்ச்சல் ஆரம்பநிலை :

அடிக்கடி உடல் உறுப்புகளை முறுக்கிக் கொள்ளும் - கொட்டாவி விடும். திடீர், திடீரென தாயை கட்டிக் கொள்ளும். இருமல் இருக்கும். தாய்ப்பால் உண்ண விரும்பாது உமிழ் நீர் சூடாக இருக்கும். நிறம் மாறுபட்டு இருக்கும் கால்களில் சூடு குறைந்திருக்கும். வாய் ருசி கெட்டுவிடும். இவைகள் இருந்தால் காய்ச்சல் வரப்போகின்றது என்று உணர்ந்து கொள்ளவேண்டும்.

வயிற்றுப்போக்கு :

உடம்பின் நிறம் மாறும் எதைக் கண்டாலும் வெறுப்பு உண்டாகும் தூக்கமிருக்காது வாதம் கீழே பரவிச் செல்லாமல் தடை ஏற்படுவதால் மேல் மூச்சு வாங்கும். இவை இருந்தால் வயிற்றுப் போக்கு ஏற்படப்போகிறது என அறியலாம்.

வயிற்றுவலி :

தாய்ப்பாலை குடிக்க மறுக்கும். விடாமல் அழும். நிற்க வைத்தால் வயிற்றை பிடித்துக் கொண்டு முன்னயே விழும் வயிறு வீங்கிப் போகும். உடம்பு முழுதும் குளிர்ந்து விடும் முகம் வியர்க்கும்.

கழுத்துப் பிடிப்பு :

கழுத்தில் வீக்கம் உண்டாகும். தலைவலி இருக்கும் வாய் ருசி மாறி விடும் காய்ச்சல் இருக்கும்.

வாந்தி :

காரணமின்றி அடிக்கடி ஏப்பமும் கொட்டாவியும் விடும் அடிக்கடி தூங்கி விழும் இந்த அறிகுறிகள் ஏற்பட்டால் வாந்தி எடுக்கப் போகிறது என்று அறிந்து கொள்ளலாம்.

விக்கல் :

அடிக்கடி முனகும் உஷ்ணமான மூச்சு விடும் திடீரென்று ஏப்பம் விடும். உடம்பு இளைக்கும்.

நாவரட்சி :

அதிகமான பாலைக் குடித்தாலும் திருப்தியில்லாமல் இருக்கும். விடாமல் அழுகும் உதடுகளை மேலே அசைக்கும். தண்ணீரில் நனையவும், புழங்கவும் விரும்பும் பலவீனமாக இருக்கும்.

வயிற்றுப் பொருமல் :

கண்களை அகலமாக விழித்து நிலையாக ஒரு இடத்தைப் பார்க்கும். மூட்டுகளில் வலி இருக்கும் உடல் வாட்டமடையும் உடல் நிலையில்லாமல் தள்ளாடும். மலம், சிறுநீர் தடைபட்டிருக்கும்.

சித்தப்பிரமை :

காரணமில்லாமல் திடீரென பலமாகச் சிரிக்கும். நிலையில்லாமல் அங்குமிங்கும் சென்று கொண்டிருக்கும். பிதற்றிக் கொண்டே இருக்கும்.

மூத்திரச் சுருக்கு :

மயிர்க் கூச்சல் இருக்கும், உடம்பு திமிரும் மூத்திரம் விடும்போது எரிச்சல் உண்டாவதால் உதட்டைக் கடிக்கும். அடிக்கடி அடிவயிற்றைத் தொட்டுக் கொள்ளும்.

நீரிழிவு :

உடல் கனக்கும் மலச்சிக்கல் இருக்கும் திடீர் திடீரென சிறுநீர் வெளியாகும். சிறுநீர் பெய்த இடத்தில் ஈ, எறும்பு முதலியன மொய்க்கும். சிறுநீர் வெள்ளை நிறமாகவும், கெட்டியாகவும் இருக்கும்.

மூலம் :

உணவு நன்றாக செரிமானம் ஆனாலும் மலச்சிக்கல் இருக்கும். மலத்துடன் இரத்தம் வெளிவரும் உடம்பு இளைக்கும்

ஆசனத்திலிருந்து வெளியே மூலமுளை நீண்டிருக்கும். அரிப்பும் குத்துவலியும் உண்டாகும்.

கல்லடைப்பு :

அதிக அளவில் சிறுநீர் கழிக்கும் சிறுநீர் விடும் போது எரிச்சல், அதனால் விடாத அழுகை இருக்கும். சிறுநீரில் வண்டல் அல்லது திப்பி சேர்ந்திருக்கும். உடம்பு பலவீனமாக இருக்கும்.

அக்கி :

சிவப்பு நிறமுள்ள தழும்புகள் உண்டாகும் நாவரட்சி உண்டாகும். அங்குமிங்கும் அலையும் காய்ச்சல் இருக்கும். இனிப்பான ஆகாரங்கள், குளிர்ந்த பொருட்கள் உபயோகித்தால் அமைதியடையும்.

வாந்திபேதி :

உடம்பில் எரிச்சல் உண்டாகும் ஊசிகளால் குத்தப்படுவது போன்ற உணர்ச்சி இருக்கும் வயிற்றுப்போக்குடன் சாப்பிட்டதை வாந்தி எடுக்கும். உடம்பை முறித்துக் கொள்ளும் அடிக்கடி கொட்டாவி விடும். அதிகமாக தாய்ப்பாலைச் சாப்பிடாது. தலை நிற்காமல் துவளும் இருதயத்தில் வலி இருக்கும். (அந்தப் பகுதியை அழுத்தினால் அல்லது தடவி விட்டால் அமைதியாகும்.)

கண் நோய் :

பொருள்களைப் பார்க்க முடியாது சிவப்பு நிறமாக கண்ணீர் சுரக்கும். தூங்கினால் கண் இமைகள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொள்ளும்.

சோகை :

வயிற்றில் ஒரே சமமான வீக்கம் உண்டாகும். கண்கள், நகம் முகம் முதலியவை வெளுத்துப் போகும். பசி இருக்காது கண்களில் வீக்கம் இருக்கும்.

காமாலை :

கண்கள், நகம், முகம் முதலியன மஞ்சளாக மாறும், மலமும் சிறுநீரும் மஞ்சளாக இருக்கும்.

பீனிசம் :

பால் குடித்த பிறகு அடிக்கடி வாயினால் மூச்சு விடும். மூக்கிலிருந்து தண்ணீர் ஒழுகும் நெற்றிப் பொட்டு சுடும். கண், மூக்கு, காது, வாய் முதலிய துவாரங்களை அடிக்கடி தொடும் தும்மலும் இருமலும் ஏற்படும்.

மாந்திரிக மருத்துவம்

பொதுக்குறிப்பு :

பாலாரிஷ்ட நோய்களுக்கு மட்டுமே மாந்திரிக மருத்துவம் செய்யப்படுகிறது. தெய்வீக மருத்துவம் என்றும், மந்திர மருத்துவம் என்றும் சொல்லப்படும் இந்தப்பிரிவு மன இயல் அடிப்படையிலும், சமய அடிப்படையிலும் செய்யப்படுவது.

இந்த மருத்துவம் செய்கின்றவர் தெய்வ சிந்தனையும் பரோபகார எண்ணமும் உள்ளவராக இருக்க வேண்டும் மந்திரிக்கும் போது குளித்து விட்டு சுத்தமாக இருக்கவேண்டும் எல்லாப் பொருட்களையும் முன் கூட்டியே சேர்த்து ஒன்றாக அருகில் வைத்துக் கொண்டு மந்திரிக்க வேண்டும் மந்திரிக்க தொடங்கிய பின்னர் நடுவில் வேறு யாருடனும் பேசக் கூடாது.

கோழி, ஆடு, ஓணான் போன்ற எளிதில் கிடைக்கின்ற பிராணிகளையே பலி கொடுப்பது வழக்கம் எதுவும் கிடைக்காத போது உண்மையான சுத்தமான மனத்துடன் எலுமிச்சம் பழத்தை அறுத்து குங்குமத்தில் பூசிப் பிழிந்து மந்திரம் செபிக்கலாம்.

மாமிசம், முட்டை, சாப்பாடு முதலிவைகளை மந்திரிப்பவரோ குழந்தையின் உறவினரோ உபயோகிக்கக் கூடாது.

நெல், அவல், பொரிகடலை போன்ற தின்பண்டங்களை அருகில் உள்ள எளியவர்களுக்கு கொடுக்கலாம்.

தெய்வத்தை வணங்கி வேப்பிலையால் நீர் தெளிப்பதே சாந்தி என்று கொள்ளலாம்.

குளிசம் கட்டும்போது ஐந்து நிறமான நூல்களால் கட்டுவது நல்லது. தற்போது கடைகளில் தயாராக விற்கின்ற ஈயத்தகட்டுக் குழாய்களையும் பயன்படுத்தலாம் மந்திரத் தகடாக செப்புத் தகடுதான் சிறந்தது.

பொது மக்கள் கூட்டமாக இருந்து பார்க்கக் கூடிய இடத்தில் மந்திரிப்பது நல்லது அல்ல அரசு, வேம்பு போன்ற நச்சுக் கொல்லி மரத்தின் நிழலில் அல்லது தெய் சந்நிதானத்தில் மந்திரிப்பது நல்லது.

எந்த முறையிலாது மந்திரம் தெரியவில்லையென்றால் 'மங் ஸ்ரீ யும் ஐயும் சவ்வும்' என்று நூற்றி எட்டு தரம் செபிக்கவும் அல்லது 'நம சிவய' என்று நூற்றி எட்டு தரம் செபிக்கவும்.

வேப்பிலை அடித்து மந்திரிக்கும்போது "ஓம் வநசிமய ஓம் வங்சிங் ஓம் சிவாய நம" என்று சொல்லிக் கொண்டே செய்ய வேண்டும்.

குளிசம் கட்டுவதற்கு எந்த வேரும் கிடைக்கவில்லை என்றால் கீழ்க்கண்ட எட்டு வேர்களில் எதாவது ஒன்றைக் கொண்டு வந்து மந்திரித்து கட்டலாம்.

கீழ்காய் நெல்லிவேர்	முடக்கொற்றான்வேர்
நாயுருவி வேர்	நாய்த்துளசி வேர்
விடதாரி வேர்	நிலக்கடம்பு வேர்
சிறுபுள்ளடி வேர்	பேய்ச்சுரை வேர்

தோஷங்கள்

மூன்று மாதங்கள் முதல் ஒராண்டு வரையுள்ள குழந்தைகளுக்கு பெரும்பாலும் உண்டாகும்.

1. பட்சி தோஷம்
2. பறவை தோஷம்
3. புள் தோஷம்
4. எட்சி தோஷம்
5. எச்சில் தோஷம் அல்லது திருட்டி தோஷம்
6. ஆண் தோஷம்
7. பெண் தோஷம் அல்லது எடுப்பு தோஷம்
8. தேரை தோஷம்

ஆகிய எட்டு வகையாகப் பிரிக்கப்படும்.

பட்சி தோஷம் நான்கு பிரிவுகளாகக் கொள்ளப்படுவதுண்டு. அவை : ஆண்பட்சி, பெண்பட்சி, மலட்டுப்பட்சி, அலிப்பட்சி.

புள் தோஷம் பத்து வகையாகப் பிரிக்கப்படும். அவை :

வீங்குபுள், தூங்குபுள், விளக்கொளிபுள், வெங்கண்புள், கருடக் கண்புள், செங்கண்புள், வரட்புள் பேய்க்கண்புள், அந்திப்புள், நீர்ப்புள்.

பெண் தோஷம் ஆறுவகையாகப் பிரிக்கப்படும். அவை : ஆணுடன் கூடிய பெண், மாதவிடாய் கண்ட பெண், பிள்ளையை விரும்பி குளிசங்கட்டிய பெண், குளித்த பெண், கருச்சிதைவு ஆனபெண், பெண்கையால் எடுக்கும் தோஷம்.

பட்சி தோஷம் நான்கு, புள் தோஷம் பத்து, பெண் தோஷம், ஆண் தோஷம், தேரை தோஷம் ஆக மொத்தம் இருபத்தைந்து என்று சில நூல்களில் சொல்லப்படுகின்றன.

பட்சி தோஷம் :

குழந்தையின் உச்சியும் கண்ணும் குழிவிழும். குடித்த பால் தங்காமல் எதிர் எடுக்கும். தண்ணீர் போல் கழியும் பறவைக்குரல் போல் அழும் கண் மலங்கும் தலைவலி உண்டாகும் குழந்தை கையில் தங்காது துடிக்கும் வயிற்றுப் போக்கு நுரைபோல் உண்டாகும். அதிகமாகத் தண்ணீர் குடிக்கும் பயங்கரமாக வீறிட்டு அலறும்.

பெண்பட்சி தோஷமாக இருந்தால் கண் சோர்வடையும் நீர் போல் கழியும் உடல் கறுக்கும் வயிறு உப்பும்.

பறவை தோஷம் :

நெஞ்சு கட்டும் உள்நாக்கு வீங்கும் பால் தங்காது உடல்வலி உண்டாகும். கக்கிய பால் கசப்பு நாற்றம் அடிக்கும் கைகால் அழுக்கேறும் வேளைக்கு ஒரு நிறமாக உடல் மாறும்.

மேல்மூச்சு வாங்கும் தொண்டையில் வலி எடுக்கும் தூக்கத்திலிருந்து எழுந்து தண்ணீர் கேட்கும்.

புள் தோஷம் :

தலை உச்சி கண் முதலிய இடங்களில் குழி விழும் சாப்பிடும் பால் வயிற்றில் தங்காது வாந்தி எடுக்கும் பச்சை நிறமாகப் பேதியாகும். பட்சிகளின் குரல்போல சீறி அழும், உடல் மெலியும் தண்ணீர் அடிக்கடி குடிக்கும் அடிக்கடி உடலை மறந்து சோர்ந்து விழும்.

எட்சி தோஷம் :

குழந்தையின் உடம்பு மெலியும் கெட்ட வாடை வீசும், தாய்ப்பால் குடிக்காது தாயை சிறிது கூடப் பார்க்காது கொஞ்சம் கொஞ்சமாய் பேதி ஆகும் சுரம் உண்டாகும் கண்களை அடிக்கடி பிசையும்.

இரத்தம் சூடாகி மயக்கம் உண்டாகும் கண் வரண்டு பீளை கட்டும். புலிபோலப் பதறி அழும் மண்ணில் மீன் போல் புரளும்.

எச்சில் தோஷம் :

தாய்ப்பால் உண்ணாது தலை தூக்க முடியாத மயக்கம் உண்டாகும் உடம்பு வாடும். உடம்பில் பற்பல நிறங்களும் காணும் தாயைப் பார்த்தால் சீறி அழும் மலம். கொஞ்சம் கொஞ்சமாக வெளியாகும். பூமியில் விழுந்து புரண்டு அழும்.

ஆண் தோஷம் :

குழந்தையின் தலை உச்சியும் கண்ணும் குழிவிடும். சாப்பிட்ட பாலை வாந்தி எடுக்கும். வயிறு பொருமல் உண்டாகும். பறவையின் குரல் போல அழும். கழுத்து குறுகிவிடும் சிற்சில சமயங்களில் பலமாக அழும்.

பெண் தோஷம் :

குளிதோஷம் என்றும் எடுப்புத் தோஷம் என்றும் சொல்லப் படுவதுண்டு.

தாய்ப்பாலை சிறிது குடிக்கும் உடனே அழும் பின்பு குடிக்காது பேதியாகும் உடம்பு மெலியும். கழிச்சல், சுரம், உடல் இளைப்பு உண்டாகும்.

தேரை தோஷம் :

உடல் மெலியும், மார்புக் கூடு பின்னும், கண்கள் சிறிதாகும், கைகால் முடங்கி இருக்கும். வயிறு புடைத்திருக்கும், மலச்சிக்கல் ஏற்படும், வாய் உலரும் கை கால்கள் சிம்பிவிடும் கட்டிப்போட்டது போல் உடல் இருக்கும், உடல் வெளுக்கும், குரல் கம்மி விடும் எவ்வளவு தாய்ப் பால் குடித்தாலும், உடம்பு தேறாமல் இருக்கும்.

பட்சி தோஷத்திற்கு :

1. விடத்தேரி இலை, விழல் புல்லின் தளிர் (கொழுந்து) இரண்டையும் கைப்பிடி அளவு எடுத்து நன்றாக சுருக்கவும், தலை, உச்சி முதலிய இடங்களில் அதன் சாற்றை கையால் கசக்கிப் பிழியவும். சாறி பிழிந்த பின் மிஞ்சிய சக்கையை தாயின் மடியிலோ அல்லது குழந்தையின் இடுப்பிலோ கட்டவும்.

2. கடுகு, மிளகு, கரிசிலாங்கண்ணி, கீழாநெல்லி, சிறுபுள்ளடி முதலியவைகளை சம அளவு எடுத்து பசுவின் பாலில் அரைத்து நல்லெண்ணெயில் குழப்பி உள்ளுக்கு கொடுக்கவும்.

3. பிராய்க் கொழுந்து, தொடரி (இண்டு)க் கொழுந்து, களாக் கொழுந்து, வரட் பூலாங் கொழுந்து முதலியவைகளை சமமாக எடுத்துக் கொண்டு வந்து பசுவின் பால் அல்லது வெள்ளாட்டுப் பாலில் அரைத்து அப்பாலிலேயே கரைத்து சாப்பிடக் கொடுக்கவும்.

4. உடும்பின் நாக்கை எடுத்து எருக்கன் நாரினால் குளிசமாகக் கட்டவும் "நயமசிம" என்னும் மந்திரத்தை நூற்றி எட்டு முறை ஓதி முறையாகப் பூசை செய்து ஓணான் பலி கொடுத்து குளிசத்தை குழந்தைக்குக் கட்ட வேண்டும்.

5. அதிகாலையில் - சூரிய உதய காலத்தில் - தண்ணீரில் நின்று "அரியும், இரியும், வரியும், ஸ்ரீரியும், கிரியும், ஐயும்" என்று மந்திரத்தை ஆயிரத்து எட்டு முறை செபிக்கவும்.

6. செப்புத் தகட்டில் அறுகோணம் வரைந்து குறுக்கும் நெடுக்குமாக ஐந்தைந்து கட்டங்களாக இருபத்தி ஐந்து வீடுகள் அமைக்கவேண்டும். "யமசி" என்னும் பெண் எழுத்தை இடை வீடுகளில் அமைத்து "யசிமநவ" என்னும் எழுத்துக்களை மாறி மாறி நிரப்ப வேண்டும். முறையாக சாந்தி செய்து குழந்தைக்கு கட்ட வேண்டும்.

பறவை தோஷம் :

ஞாயிற்றுக்கிழமை அல்லது வெள்ளிக்கிழமைகளில் சூரிய உதயகாலத்தில் சிறு புள்ளடி வேருக்கு காப்புக் கட்டவும் சூரிய அஸ்தமன நேரத்தில் வேரைப்பிடுங்கி வந்து குழந்தை மார்பில் அல்லது

தாயாருக்கு குளிசமாகக் கட்டலாம்.

2. புங்க வேரை குளிசமாகக் கட்டத் தீரும்.

3. ஆவாரைக் கொழுந்து, வரட்பூலாங் கொழுந்து வசம்பு, தூதுவளை, உள்ளி முதலியவைகளில் சம அளவு எடுத்துப் பசுநெய்யில் பொரித்துக் கொடுக்கவும்.

4. சிறு புள்ளடி, சின்னி இலை, உள்ளி, வசம்பு முதலியவைகளை வெண்ணெயுடன் குழப்பி அடுப்பின்மேல் ஏற்றி நெய்யாக காய்ச்சிக் கொண்டு பூசவும்.

5. வாய் பேசாமல் அம்மான் பச்சரிசி வேரையும், வரட்சுண்டி வேரையும், உள்ளி, வசம்பு சேர்த்து நறுக்கிக் கொடுக்கவும்.

6. வெள்ளைக் குன்றிமணிக்கு செவ்வாய்க்கிழமையில் பொங்கலிட்டுப் பலிகொடுத்து சாபத்தைப் போக்க வேண்டும். பிறகு வடக்கே செல்லும் வேரை எடுத்து வந்து ஐந்து நிறமுள்ள நூலால் குளிசமாக்கி கழிப்பு கழித்து தூப தீபங்காட்டி குழந்தைக்குக் கட்ட வேண்டும்.

புள் தோஷத்திற்கு :

1. கோரோசனை மஞ்சள் வசம்பு ஏலம் வேம்பின் ஈர்க்கு ஓமம் விளாம்பழ ஓடு ஆகிய ஏழு பொருட்களையும் சரி அளவு எடுத்து அரைத்துக் குழந்தையின் மேல் பூசிச் சிறிதுநேரம் ஊறவிடவேண்டும். இளஞ்சூடான நீரில் குளிப்பாட்டி மந்திரம் சொல்லி சாந்தி செய்ய வேண்டும்.

2. சோறு பொரி பிண்ணாக்கு கருவாடு மதுபானம் முதலியவற்றை வைத்துப் படையலிட்டு சந்தனத்தூள் தூபம் போட்டு தாய்க்கும் குழந்தைக்கும் சாந்தி செய்ய தோஷம் விலகும்.

3. வட்டத் துத்தியின் வேரில் முதலையின் கொழுப்பைப் பூசி ஐந்து நிற நூலால் கட்டி குளிசமாக்கவும். "ஓம் நமசிவய" என்று நூற்றி எட்டு தரம் மந்திரம் ஓதி குழந்தைக்கு கட்டவும்.

4. "சிவ சிவ" என்று மந்திரம் ஓதிக் கொம்பு மஞ்சளை குழந்தையின் தாயிடம் கொடுக்கவும் அந்த மஞ்சளைப் பூசி தாய் குளிக்க வேண்டும் மஞ்சள் நூலால் வட்ட நம்மிரட்டிக்கு காப்புக் கட்டி

சேவல் பலி கொடுத்து வேரை எடுத்து குளிசம் செய்து முறையாகக் குழந்தைக்கு கட்டவேண்டும் இதை வியாழக்கிழமையில் செய்வது சிறந்தது.

எட்சி தோஷத்திற்கு

1. சங்கம் வேர், சிறு செருப்படி வேர், தண்ணீர் விட்டான் கிழங்கு (சதாவரி) நன்னாரி, சிறுகாஞ்சொறி வேர் முதலியன வகைக்கு ஒரு பங்கு வீதம் எடுத்துக் கொள்ளவும்.

உள்ளி ஐந்து பங்கு, மிளகு நான்கு பங்கு எடுத்துக் கொண்டு எல்லாவற்றையும் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து மிளகு அளவாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும். தேவையான போது இந்த மாத்திரையைக் குழந்தைக்கு கொடுக்கவும்.

2. வெள்ளை வேலம்வேரை முதல் நாள் காப்புக் கட்டவும். மறுநாள் பலிகொடுத்து அதைக் கொண்டு வரவும் இதை நசுக்கி ஒரு பொட்டணமாகக் கட்டிக் காடியில் தோய்த்துக் குழந்தை வாயில் பிழியவும்.

3. வெள்ளிக்கிழமையில் அமுக்கிராக் கிழங்கு செடி உள்ள இடத்திற்குச் சென்று இடத்தைச் சுத்தம் செய்து மஞ்சள் நூலில் செடிக்கு காப்புக் கட்டவும். "மநசிவய" என்று நூற்றி எட்டு முறை செபித்து கற்பூர தீபம் காட்ட வேண்டும்.

வடக்கு திசை நோக்கிச் செல்லும் வேரினை எடுத்து சிறிதளவு நறுக்கிப் போட்டு நூலால் குளிசமாக ஆக்கவேண்டும். பார்வதி தேவியின் உருவம் அமைத்துப் பழம் முதலியன படைத்து தூய செம்பில் தண்ணீர் வைத்து முன் சொன்ன மந்திரத்தை ஓதி நீர் தெளிக்கவும் அந்தக் குளிசத்தை சுத்தம் செய்து குழந்தைக்கு கட்ட வேண்டும்.

எச்சில் தோஷத்திற்கு

அமுக்கிராக்கிழங்கு, நுணா (மஞ்சனத்தி) இலை, ஓமம் முதலியவைகளை ஒரு பிடி வீதம் எடுத்து வறுத்துக் கொள்ளவும் இரண்டு மடங்கு தண்ணீர் விட்டுக் காய்ச்சி ஒரு மடங்காக சுருக்கிக் கொள்ளவும்.

வசம்பு, ஓமம், சுக்கு, மிளகு, திப்பிலி, பொரித்த பெருங்காயம், பொரித்த வெண்காரம் முதலியன வகைக்கு பத்து கிராம் எடுத்து பொடியாக்கி முன் செய்த குடிநீருடன் கலக்கிக் காய்ச்சிக் குழம்புபோல் ஆக்கவும்.

காலையும் மாலையும் மூன்று நாட்கள் ஒரு கரண்டி வீதம் கொடுக்க தோஷங்கள் தீரும்.

தேரை தோஷத்திற்கு

தேரை இரண்டு பொரி நண்டு இரண்டு, ஈத்தின்னி வௌவால் ஒன்று நாகப்பூச்சி ஒன்று.

சிறுகீரை, வசம்பு, வெங்காயம், வெண் சாறணை வேர் பொன்னாங்காணி வேர், கருஞ்சீரகம் முதலியனவகைக்கு ஒரு பங்கு.

முன்சொன்ன எல்லாவற்றையும் நல்லெண்ணெய்யிலிட்டு பக்குவமாக எரித்து உள்ளுக்கு கொடுக்கவும். அதே எண்ணெயை உடம்பில் பூசி, தலையுச்சி மயிர்க்கால் முதலிய இடங்களில் தேய்க்கவும்.

ஆண்தோஷம், பெண்தோஷத்திற்கு :

1. மாவினால் குழந்தையைப் போல் உருவம் செய்து வாழை இலையில் வைத்து ஐந்து நிற மலர் ஐந்து நிறச் சோற்று உருண்டை ஐந்து வெள்ளிக்காசு, முதலியனவற்றை வைத்து மாவிளக்கு ஏற்றிப் பூசை செய்து தூப தீபங் காட்டவும்.

மாலை நேரத்தில் குழந்தைக்குச் சுற்றி கழிப்புச் செய்து முச்சந்தியில் கொண்டு போய் வைத்து விடவேண்டும்.

2. தழுதாழை, கொம்பு மஞ்சள், குட்டிவினா, வேம்பு, வசம்பு, சுக்கு முதலியவற்றை அரைத்து தாய், குழந்தை இருவருக்கும் பூசவேண்டும்.

வாகை இலை போட்டுக் காய்ச்சிய வெந்நீரில் குளிக்கச் செய்ய வேண்டும் மூன்று கிணற்று நீர் கொண்டு வந்து மஞ்சள் அரைத்துப் போட்டு கலக்கிக் கொள்ளவும் "ரியும், ஐயும், சவ்வும்" என்று நூற்றி எட்டு முறை ஓதி அந்நீரைத் தெளிக்க வேண்டும்.

3. நத்தைச் சூரி வேரை முறையாகப் பிடுங்கி வந்து குளிசமாக்கி குழந்தைக்கு கட்டலாம்.

4. குளிர்ந்த நண்ணீர் மொண்டு வேப்பிலையால் மந்திரம் ஓதி தாய், பிள்ளை இருவருக்கும் சாந்தி செய்யவும்.

5. விடத்தேரி வேர், சீத்தா வேர் முதலியவைகளுக்கு அருகில் உள்ள தூதுவளை வேர் முதலியவைகளுக்கு திங்கட்கிழமை காப்புக் கட்டி செவ்வாய்க்கிழமை பலி கொடுத்து கொண்டு வரவும் அதை குளிசமாக்கி "சிவ சிவ வசி வசி" என்று செபித்துக் கட்டவும்.

6. முத்திருக்கஞ்செவி வேர், சிறுபீளை வேர் அவுரிவேர் முதலியவைகளுக்கு அதிகாலையில் பொங்கலிட்டுத் தேங்காய் உடைத்த பின்பு கொண்டு வந்து கன்னிப்பெண் நூற்ற நூல் கொண்டு குளிசமாக்கிக் கட்டவும்.

7. குப்பைமேனி இலை வேலிப் பருத்தியிலை இரண்டையும் தண்ணீர் விட்டு அரைத்துப் பிசைந்து குழந்தையின் தலையிலும் தாயாரின் தலையிலும் சொரியவும்.

8. வடக்கே போகும் சடைக் கஞ்சாவின் பருத்த வேரை வெள்ளிக்கிழமையில் கோழியைப் பலி கொடுத்துப் பிடுங்கி வரவும். அதை குழந்தைக்கும் தாய்க்கும் இடுப்பில் குளிசமாகக் கட்டவும்.

9. தகரை வேர், பழம்பாசிவேர், கணப்பூண்டு வேர், முசுமுசுக்கை வேர், சாதிக்காய், சாதிப்பத்திரி, குட்டிவிளா விடத் தேரிவேர், கிராம்பு முதலியவைகளை சமமாக எடுத்து நறுக்கிப் போட்டு விளக்கெண்ணெய் விட்டு வெய்யிலில் காய வைத்து ஒரு கரண்டு வீதம் கொடுக்கவும். உப்பு, புளி நீக்கி பத்தியமாக இருக்க வேண்டும்.

10. கீழாநெல்லி, வெந்தயம், பூவோடு கூடிய மாதுளம்பிஞ்சு முதலிய மூன்றையும் சமமாக எடுத்து இடித்து கஷாயம் வைத்து ஐந்து வேளை கொடுக்க மாந்தம் தீரும்.

11. வேம்பின் ஈர்க்கு, முருங்கை ஈர்க்கு, நுணா ஈர்க்கு கழற்சிக் கொடியின் ஈர்க்கு, கருவேப்பிலை ஈர்க்கு முதலியவைகளை நசுக்கி கஷாயம் வைத்துக் கொடுக்க எல்லா மாந்தரோகமும் தீரும்.

12. கார்போக அரிசி, ஓமம், வெட்பாலையரிசி, நீரடி பூண்டு, வசம்பு முதலியன ஒரு பங்கு வீதமும், கொடிப் பசலைவேர், பிரண்டைவேர் இரண்டு பங்கு வீதமும், ஆமணக்கெண்ணெய் பத்து பங்கும் சேர்த்து நன்றாகக் கலக்கவும். தினந்தோறும் (வண்டலுடன்) எண்ணெய் கொடுக்கவும்.

13. அடுப்பை மெழுகித் தீ மூட்டவும். ஒரு சட்டியில் ஊமத்தை இலை, உத்தாமணிசமூலம், அவரைச்சமூலம் முதலியவைகளை வாட்டி கசக்கிப் பிழியவும் உண்டாகின்ற நுரையை மாந்தமுள்ள குழந்தையின் முதுகிலும், வயிற்றின் அடியிலும் பூசவும்.

14. முதியார் கூந்தல் சமூலம், சிறுபுள்ளடி சமூலம் நல்வேளை சமூலம், விடத்தேரி வேர்ப்பட்டை, வெள்ளை வேலம்பட்டை, நல்ல முருங்கைப்பட்டை, ஆமை ஒடு முதலிய எல்லாவற்றையும் சமமாக எடுத்துப் பொடிப் பொடியாக நறுக்கி விளக்கெண்ணெய் (இதற்கு நான்கு மடங்கு) கலந்து காய்ச்சவும் சிவந்த பக்குவத்தில் இறக்கிக் கொள்ளவும்.

சிறிது எண்ணெயை சூடாக்கிக் கொண்டு அதற்குப் பாதி அளவு தாய்ப்பால் சேர்த்துக் கலக்கிப் புகட்டவும். மந்திர முறை :

1. மூன்று கிணறுகளில் இருந்து தண்ணீர் கொண்டு வந்து விபூதி போடவும் அந்தத் தண்ணீரில் வேப்பிலையைத் தோய்த்து "ஓ-ம்-ந-ம-சி-வ-ய" என்று நூற்றி எட்டு தரம் குழந்தைக்கு மந்திரிக்க சகல தோஷமும் நிவர்த்தியாகும்.


எலுமிச்சம்பழம் ஊமத்தங்காய் ஆற்றுத் தும்மட்டிக்காய் (இந்திரவாருணி) முதலியவைகளைச் சுற்றிப்போடவும். இப்படி ஏழு நாள் வரை செய்யவும்.

எட்டாம் நாள் இரவு குழந்தையின் தலையின் அருகில் (தலைமாட்டில்) ஒரு தேங்காயின் குடுமி உரித்து துவாரம் செய்து அதில் நவதானியம் போட்டு மூன்று கண்களில் கற்பூரம் வைத்துக் கொளுத்தி குழந்தையைச் சுற்றி முச்சந்தியில் உடைக்க சகல தோஷமும் நிவர்த்தியாகும்.

2 அவல் கடலை சுண்டல் பொரி நவதானியம் படைத்து கற்பூரம் காட்டி தேங்காய் உடைக்கவும். "அரி ஓம் வடிவுள்ள மகாதேவி

அம்மா அஞ்செழுத்து பஞ்சாட்சரம் ஆணை" என்று செபித்து பூசையில் வைத்துச் செப்புத் தகட்டை கறுப்புக்கயிற்றில் கட்டி குழந்தையின் கழுத்தில் தரிக்கச் செய்யவும்.


2 குழந்தை அந்தி சந்தியில் பயந்திருந்தால் பேய் பிசாசு சேஷ்டைகள் இருந்தால் மந்திரிப்பது.



ஓர் தாம்பாளத்தில் விபூதி வைத்து 'நமசிவய' என்று உச்சரித்துச் சொல்ல வேண்டியது.

"ஆக்குற உச்சாகு பால தேவதா சகல கிரகங்களுக்கும் உன் பேரைச் சொன்னவுடன் அம்மா போகுமே சர்வபூத பிசாசுகளும் ஓடுமே - ஐயும் கிலியும் சவ்வும் மாலாமணி சிசுதோஷ நிவர்த்திக்கு நில் சுவாகா." என்று நூற்றி எட்டு தடவை செபித்து விபூதியை வாயில் போட்டு தலையின் மேல் தெளித்து நெற்றியில் பூசினால் சகல வியாதியும் பறக்கும்.

4 அதிகாலையில் எழுந்து நீராடிப் பட்டுத்துணி அணிந்து கிழக்கு நோக்கி நின்று சிவாய நம-சிவாய நம என்று நூற்றி எட்டு தடவை தியானித்து கீழ்க்கண்ட சக்கரம் உள்ள தகட்டின் முன்பாக உள்ள விபூதியை எடுத்து 'நமசிவய' என்று ஓதிக்கொண்டே முகத்தில் வேப்பிலையால் அடித்தால் எல்லா தேவதைகளும் கிரகங்களும் பறந்து விடும்.



5. எல்லா தோஷங்களுக்கும்

வ-ந-சி-ம-ய

வங்-சிங்-சிவய-ந-ம என்று மந்திரத்தை தியானித்து விபூதி அல்லது தண்ணீர் - அல்லது குளிசம் கொடுக்கலாம்.

பறவை தோஷத்திற்கு :

6 வெள்ளிக்கிழமையில் வடக்கு திசையில் உள்ள அமுக்கிரா வேரைக் கொண்டு ஐந்து வர்ண நூல்களைச் சுற்றி 'ஓம் நம சிவயா' என்று நூற்றி எட்டுத்தடவை செபிக்கவும் தாம்பாளத்தில் வைத்து ஒரு வாரம் வரை ஜெபித்து பூஜை செய்யவும் "ஓ-ம்-ந-ம-சி-வ-ய" என்று செப்புத் தகட்டில் எழுதி அந்த வேருடன் பூஜையில் வைக்கவும்.

பழம் சர்க்கரை தேங்காய் அவல் கடலை முதலியவை வைத்து தூபதீபம் காட்டி முன் சொல்லிய மந்திரத்தை செபித்து குளிசத்தைக் குழந்தையின் இடுப்பில் கட்டினால் சகல தோஷமும் நிவர்த்தியாகும்.

7. சகல தோஷங்களுக்கும் :

ஞாயிற்றுக்கிழமை செவ்வாய்க்கிழமை வியாழக்கிழமை ஆகிய நாட்களில் பச்சரிசி மாவில் பெண்பாவை செய்து காதோலை கருமணி ஐந்து வர்ணநூல் பட்டு வஸ்திரம் மல்லிகை தவளம் புஷ்பம் சூட்டவும்.

பொங்கல் வடை சுண்டல் பழம் தேங்காய் கரும்பு நிவேதனம் செய்து மஞ்சள் சந்தனம் தூபதீபம் கொடுத்து அரி-ஓம்-நங்-சிங்-சிங்-வங்-வங்" என்று உச்சரித்து செபிக்கவும்.

பாவையை ஒன்பது தடவை குழந்தைக்கு சுற்றி மஞ்சள் துணியில் முடிந்து தூக்கிப் போடவும். எலுமிச்சம்பழம் ஊமத்தங்காய் ஆகியவைகளையும் திருஷ்டி சுற்றிப்போடவும்.

கட்டி சிலந்திக்கு :

குழந்தைகளுக்கு சிலந்தி பூச்சிக்கொடி உண்டானால் மந்திரிக்கும் முறை :

தாயின் மடியில் குழந்தையை கிழக்கு முகமாக உட்கார வைத்து வேப்பிலையால் மந்திரிக்கவும்.

அகார - மகார - யுகார - விந்தா -

ஆகாயப் பரப்பிரம்ம மூர்த்தி

வந்த சர்வ விஷங்களும் - சர்வ கட்டிகளும்

சகல வைப்புகளும் - இதுகளெல்லாம்

தரி தரி - முறி முறி - தாக்கு தாக்கு

சர்வ பூத பிரேத பிசாசுகள் பஞ்சாகப் பறக்க சுவாகா" என்று நூற்றி எட்டுதரம் சொல்லி (செபித்து) வேப்பிலையால் குழந்தை உச்சியில் இருந்து பூமியில் மூன்று தடவை இறக்கி விடவும்.

பிறகு ஞாயிற்றுக்கிழமை செப்புத் தகட்டில் "அ-ம-யு-வி-ஆ" என்ற மந்திரத்தை எழுதி வைத்து பழம், தேங்காய், தாம்பூலம், தட்சிணை வைத்து முன் சொல்லி மந்திரத்தை நூற்றி எட்டு தடவை செபித்து தூபமிட்டு தகட்டை குளிசத்தில் போட்டு குழந்தைக்கு கட்டவும்.

சுளுக்கு கட்டினால் :

'நசி-மசி' என்ற சக்கரத்தை எழுதி பூஜையில் வைத்து தூப தீப நைவைத்தியம் கொடுத்து ஒரு வாரம் காலை மாலை அடியிற் கண்ட மந்திரத்தை நூற்றி எட்டு தடவை செபித்து மந்திரிக்கவும்.

ஓம் சங்கு உருள நசி

சக்கரமுருள நசி

சிக்கு நசி

பிள நசி - சுவாகா

கிரக தோஷங்கள் :

குறிப்பிட்ட காலங்களில் உண்டாவதால் கிரக தோஷம் எனப்படும். சிறு தேவதைகளால் உண்டாவதால் தேவதை தோஷம் எனப்படும்.

தமிழ் நாட்டின் கிராமப் பகுதிகளில் பரவலாகச் செய்யப்படுகின்ற பரிகார முறைகள்.

தாட்சி வாட்சி என்னும் மோகனாங்கி தேவதை :

முதல் நாள் - முதல் மாதம் - முதல் வருடம்

குழந்தைகளை வந்து அணுகும் அதன் அடையாளங்கள்

வாந்தி பண்ணும் சுரமடிக்கும் பாலுண்ணாது
வளமான தேகமெல்லாம் மினுமினுக்கும்
காந்தியாய்க் கண்ணிரண்டுந் திறவாதப்பா
கழிந்தக்கால் தண்ணீரைப் போல ஓடும்
போந்தவே பூனைக்குரல் போல் அழும்
பொல்லாத பலவிதமாய் விகாரஞ் செய்யும்
சாந்தியதை விவரமாய்க் கூறி வைத்தோம்
சாஸ்திரத்தின் முறைப்படியே செய்து பாரே.


பரிகாரம் :

ஞாயிற்றுக்கிழமையில் பச்சரிசியுடன் உப்பிட்டு பொங்கிக் கொண்டு தயிர் வார்த்துப் பிசைந்து ஆண் பாவை செய்து புதுச்சட்டியில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அந்தப் பாவைக்கு காதோலை கருமணி ஐந்து வண்ணநூல் கருப்புத்துணி பலவகை மலர்கள் கட்டி அலங்காரம் செய்யவேண்டும். எள்ளு நெற்பொறி நவதானியம் ஐந்து வண்ணச்சோறு ஆட்டுக்கறி முட்டை பிண்ணாக்கீரை ரொட்டி பழம் வெற்றிலை பாக்கு காணிக்கை இவைகளைப் பாவையைச் சுற்றிலும் வைத்து சந்தனம் தெளித்து தூபதீபம் கொடுத்து நிவேதனம் செய்ய வேண்டும் அப்போது பாலக்கிரக மோகனாங்கி பாலக்கிரக தோஷம் நிவர்த்தி ஐயும் கிலியும் சவ்வும் என்று பன்னிரண்டு தடவை மந்திரம் ஜபிக்க வேண்டும்.

பின் குழந்தையைத் தாயின் மடியில் அமரவைத்து கிரக தேவதையின் பெயரை ஏழு தடவை சொல்லி விட்டு “ஓம் ஓங்கார மகா அம்மா! அதன் தன்னோடும் அங்காரமும் ஆயுசும் அதிக முண்டாகும் சுவாகா” என்று சொல்லிக் கொண்டே ஒன்பது தடவை சுற்றிவர வேண்டும். பிறகு செய்து பூசித்த பாவையைக் குளக்கரையில் வைக்க வேண்டும்.

பின்பு நாயுருவிக்கு காப்புக்கட்டி வேரைப் பிடுங்கி மஞ்சள் நூல்சுற்றி கீழ்க்கண்ட சக்கரத்தை செப்புத்தகட்டில் எழுதி இரண்டையும் வைத்து சுருட்டு அவல் கடலை வெற்றிலை பாக்கு மலர் படைத்து தேங்காய் உடைத்து தூபதீபங் காட்டி கீழ்க்கண்ட மந்திரத்தை ஜெபிக்க வேண்டும் “அரி அரி சிவ சிவ அரி ஓம் சிவா இப்பிள்ளைக்கு சகல தோஷமும் நிவாரணமாக சுவாகா” என்று 108 தரம் செபித்து குளிசத்திற்கு மூன்று வண்ணநூல் சுற்றி குழந்தைக்கு கட்டவும்.




வைத்திரி நீலகண்டி என்னும் துர்க்கை தேவதை

குழந்தை பிறந்த 2ம் நாள் 2ம் மாதம் 2ம் வருஷம் வந்து அணுகும் அதன் அடையாளங்கள் :

இரண்டான வருடத்தில் பாலனுக்கு
இழைக்கின்ற வருத்தங்க ளென்ன சொல்வேன்.
வயிறுப்பும் தலைசாயும் பேதியாகும்
வாந்தி பண்ணும் தேரைபோல் மெலிந்துபோகும்

மிரளுமது அலறியழும் கண்சிவக்கும்
மேனியெல்லாம் வேர்வைவிடும் கொட்டாவிதான்
சுரமடிக்கும் வயிறிரையும் திடுக்கிட்டுத்தான்
துள்ளியெழும் பொல்லாத தோஷத்தாலே



பரிகாரம் :

திங்கட்கிழமையில் அரிசியுடன் தும்பை இலை போட்டுச் சமைத்து இறைச்சியுடன் குப்பைமேனி இலை சேர்த்து வேகவைத்து இரண்டையும் வெள்ளாட்டுப் பால் விட்டுப் பிசைந்து ஆண்பாவை செய்து புதுச்சட்டியில் வைத்துக் கொள்ளவும்.

அந்தப் பாவைக்கு காதோலை கருமணி ஐவண்ண நூல் பட்டுத்துணி சாத்தி தாமரைப் பூச்சூட்டி எள் வெல்லம் பச்சரிசி தாம்பூலம் காணிக்கை வைத்து நவதானியம் கோழிமுட்டை கச்சக்கருவாடு அவல் கடலை பிண்ணாக்குக் கீரை கள் சாராயம் பழம் தேங்காய் ரொட்டி சுருட்டு முதலியவைகளை பாவையைச் சுற்றிலும் வைத்துக் கொள்ள வேண்டும். நெய்யினால் ஐந்து திரி கொளுத்தி வைத்து தூப தீபங்கொடுத்து நிவேதனம் செய்து தாயின் மடியில் குழந்தையை வைத்து கிரகத்தின் பெயரை பதினோரு தடவை சொல்லி பெட்டைக் கோழியை கையில் எடுத்து ஓம் ஹ்ரீயும் பாலகிரக தோஷ நிவர்த்தி ஐயும் கிலியும் சவ்வும் என்று மந்திரத்தை சொல்லிக் கொண்டே ஒன்பது தடவை சுற்றிவந்து பலிகொடுத்து 108 முறை மந்திரத்தை உருப்போட்டு (பாவையை தனியே வைத்திருந்து) இரவு இரண்டு மணிக்கு பைரவன் கோவிலில் வைக்கவும்.

தூதுவளைக்கு காப்புக்கட்டி வேரைப் பிடுங்கி வந்து இச் சக்கரத்தை செப்புத்தகட்டில் எழுதி வேரை தகட்டினுடன் சேர்த்து வைத்துச் சுருட்டி மூன்று வர்ண நூலைச் சுற்றிக் கொள்ளவும். தாம்பூலம் மலர் அவல் கடலை முதலியன வைத்து தேங்காய் உடைத்து தூப தீபங்கொடுத்து ஓம் தன்மதேவதா தரணியளந்த நம்பி நீலகண்ட மாயா சொரூப சர்வ தோஷமும் படு படுளுங்க சுளுங்கு மசிமசி நமசிவாய சிவா என்ற மந்திரத்தை நூற்றி எட்டு தரம் செபித்து குளிசத்தை வலது புறத்தில் கட்டினால் தோஷம் நிவர்த்தியாகும்.


விரோதன சன்னி தேவதை

3ம் நாள் 3ம் மாதம் 3ம் வருஷம் வந்தணுகும்
கண்களிலே பீளையது சேரும் நெஞ்சு
கண் போல எரியுமப்பா பாலுண்ணாது
கண்சோரும் வெளுப்பாகப் பேதியாகும்
கல் போல வயிறுப்பும் தலையைச் சுற்றும்
உண்ணவே கயிறு போலே உடல் முறுக்கும்
இளைப்பு மிக உண்டாகும் சுரமடிக்கும்
பண்ணாத கோலமெல்லாம் பண்ணுமப்பா
பாலருக்கு மூன்றாவ தாண்டிற்றானே.

பரிகாரம் :

திங்கட்கிழமையில் குடுவை அரிசிச்சோறு கருவாடு நெற்பொரி மாவு முதலியவைகளைப் பிசைந்து பெண்பாவை செய்து புதுச்சட்டியில் காதோலை கருமணி சந்தனம் கதம்பம் ஐவண்ணநூல் சிகப்புத் துணி சார்த்தி - மந்தாரைப் பூச்சூட்டவும்.

சாதம் பிண்ணாக்கு, அரைக்கீரைப்புரட்டல் கருவாடு முட்டை ரொட்டி முதலியவைகளை பாவைக்கு சுற்றிலும் வைத்து மஞ்சள் துணியில் ஒன்பது காசுகள் முடிந்து கருப்பு பெட்டைக் கோழியை காவு கொடுத்து தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு காணிக்கை தூபதீப நைவேத்தியம் செய்யவும்.



ஓம் காளி பாலகிரக தோச நிவர்த்தி ஓம் ஆம் இம் ஐயும் கிலியும் சவ்வும் பாலகிரக தோச நிவர்த்தியென்று பதினாறு தடவை செபித்து - 5 கிளையுள்ள கொடிக்கள்ளியை நெய்த்திரியாக சுற்றி தீபமேற்றி கிழக்கு முகமாக தாயின் மடியில் குழந்தையை இருத்தி வைத்து கிரகத்தின் பெயரைச் சொல்லி 108 தடவை மந்திரத்தைச் செபித்து பாவையை எடுத்து ஒன்பது தடவை இருவரையும் சுற்றி மாலை நேரத்தில் ஊருக்கு மேற்கு சோலைக்கு எதிரில் வைக்கவும்.

பிறகு முருங்கை மரத்திற்கு காப்புக்கட்டி 'சிவ வங் நங் ரிங்' என்று வேர் பிடுங்கி வந்து இதன் சக்கரத்தை செப்புத் தகட்டில் எழுதி வேரை வைத்துச் சுருட்டி பூச்சூட்டி அவல் கடலை பழம் வெற்றிலை பாக்கு காணிக்கை வைத்து தேங்காய் உடைத்து தூப தீபங் கொடுத்து இந்த மந்திரத்தை 108 தடவை சொல்லி குளிசத்திற்கு மஞ்சள் நூல் சுற்றி குழந்தைக்கு வலது புறத்தில் கட்டவும்.

மந்திரம் : 'ஓம் சிவ ஓம் சிவாயு அகோர கோர தந்த ரூபா உடம்பு குளிர சர்வதோஷமும் பரி பரி படு படு பட்சி படு சிவா'

உருத்ர காலாக்னி பைரவி தேவதை


4ம் நாள் 4ம் மாதம் 4ம் ஆண்டு வந்தணுகும்

தேங்காய்ப்பூ சிதறினாற் போல பேதியாகும்
தாயாரைக் கைவிடா தழுதிருக்கும்
பாங்கான தேகமெல்லாம் சிலிர்க்கும் மேலும்
பாலனுக்கு வாய்தனிலே நுரையுந்தள்ளும்
ஏங்கியழும் வயிறுப்பும் சுரமடிக்கும்
இரண்டு விலா சுழித்திருக்கும் நடுங்கும் தேகம்
வாங்காமல் கை கால்கள் சுருட்டிக் கொண்டு
வசிக்குமடா உச்சியது துடிக்கும் பாரே.

பரிகாரம் :

செவ்வாய்க்கிழமையில் உளுந்து மாவுச் சோற்றில் பசுநெய் விட்டுப் பிசைந்து பெண்பாவை செய்து புதுச்சட்டியில் வைத்து காதோலைகருமணி ஐவண்ண நூல் பச்சைத் துணி சார்த்தி வெள்ளெருக்கம் பூச்சூட்டவும்.

சோவ கறிப்புரட்டல் நெற்பொரி நவதானியம் பிண்ணாக்கு கீரை நெத்திலி மீன் தலை கள் சாராயம் சுருட்டு தேங்காய் பழம் வெற்றிலைபாக்கு காணிக்கை வைத்து குங்குமம் கதம்பம் கலயத்தில் ஒன்பது காசுகள் வைத்து தூபதீபம் காட்டி நிவேதனம் செய்யவும்.



புள்ளிச்சேவலை ஆகுதி கொடுத்து வடக்கு முகமாகத் தாயார் மடியில் குழந்தையை அமர வைத்து மந்திரத்தை ஓம் பாலகிரக பைரவி ஓம் ஆம் கிலியும் ஆம் ஐயும் கிலியும் சவ்வும் வர்ச பாலகிரக தோஷ நிவர்த்தி - நூற்றி எட்டு தடவை செபித்து ஒன்பது தடவை பாவையை இருவரையும் சுற்றி உச்சி நேரத்தில் சுடுகாடு அல்லது ஆற்றங் கரையில் கொண்டு போய் வைத்து பாவையின் வாயில் கள் ஊற்றி விட்டு வரவும்.

பிறகு நத்தைச்சூரிக்கு காப்புக்கட்டி 'சிவயநம' என்று வேர் பிடுங்கி வந்து சக்கரத்தை செப்புத் தகட்டில் எழுதி வேரை அதனுள் வைத்து சுருட்டி மஞ்சள் நூல் சுற்றி வைத்து புட்பம் வெற்றிலை பாக்கு காணிக்கை பழம் அவல் கடலை தேங்காய் உடைத்து தூபதீபம் காட்டிச் சொல்ல வேண்டிய மந்திரம் அரி ஓம் சிவாய நம சடசட பிற பிறம் அகோர வீரபத்திரா வா! இப்பிள்ளைக்கு சகல தோசமும் சிவாகா என்று நூற்றி எட்டு தடவை செபித்து குழந்தைக்கு கட்டச் சகல தோஷமும் நிவர்த்தியாகும்.

ஆகாசபாதிர சின்னு தேவதை :

5ம் நாள் 5ம் மாதம் 5ம் ஆண்டு வந்தணுகும்

ஐந்தான வருடத்தில் கொடிய தோஷம்
அப்பனே குரல் கம்மி யழுகும் பாலன்
மந்தமாய் வயிறுப்பும் பாலுண்ணாது
மலமெல்லாம் பல விதமாய் கழியும் பாரு
விந்தையாய் விலாஎலும்பும் உயர்ந்திருக்கும்
வேகமாய் சுரமடிக்கும் வாய் சுரக்கும்
தொந்தமாய் கரப்பான் போல் சிரங்குகாணும்
தொந்தரைகள் பலவிதமாம் ஐந்தா மாண்டே.

பரிகாரம் :

ஞாயிற்றுக்கிழமைகளில் பச்சரிசி மாவில் பசும் பால் ஊற்றிப் பிசைந்து பெண்பாவை செய்து காதோலை கருகமணி பஞ்சவர்ண நூல் மஞ்சள் துணி புதுச்சட்டியில் வைத்து எருக்கம்பூச் சூட்டவும்.

பொங்கலிட்டு வெல்லம் நவதானியம் நெற்பொரி தாம்பூலம் புட்பம் பழம் சிகப்பு சேவல் காவு கொடுத்து சுருட்டு அவல் கடலை தேங்காய் உடைத்து தூபதீபம் காட்டி நிவேதனம் செய்யவும்.




குழந்தையை தாயின் மடியில் வடக்கு முகமாக வைத்து எலுமிச்சம்பழம் அறுத்து இருவரையும் சுற்றி சட்டியிலிடவும் ஓம் ஜின்னு சகல பாலகிரக ஜின்னு தோஷம் நிவர்த்தி என்று மூன்று தடவை மந்திரத்தை செபித்து கிரகத்தின் பெயர் சொல்லவும் பிறகு பாவையை எடுத்து ஒன்பது தடவை இருவரையும் சுற்றி மாலை நேரத்தில் பிடாரி கோயில் பக்கத்தில் வைக்கவும்.

பிறகு ஓரிலைத் தாமரைக்கு காப்புக்கட்டி நமசிவய என்று வேர் பிடுங்கி வந்து சக்கரத்தை செப்புத் தகட்டில் எழுதி வேரை வைத்துச் சுருட்டி பூச்சூட்டி அவல் கடலை பழம் வெற்றிலை பாக்கு காணிக்கை வைத்து தேங்காய் உடைத்து தூபதீபம் காட்டி இந்த மந்திரத்தை நூற்றி எட்டு தடவை செபித்து குளிசத்தை குழந்தைக்கு கட்ட சகல தோசமும் நிவர்த்தியாகும்.

'ஓம் நீலி கபாலி திரிசூலி சண்டாளி அரி ஓம் இப் பிள்ளைக்கு சகல தோசமும் இறங்கி சுடுகொய்யா சிவா'

வைத்திரி என்ற கன்னி தேவதை



6ம் நாள் 6ம் மாதம் 6ம் ஆண்டு வந்தணுகும்

கால் வீங்கும் சொக்கிருக்கும் உடல் வெளுக்கும்
கழுத்து முதல் முகமெல்லாம் வேர்வை காணும்
பால் தன்னை வேண்டாது தாகங் கேட்கும்
பாலனுக்கு முதுகெலும்பு நிமிர்ந்து போகும்
சாலவே சுரமடிக்கும் விலாவெலும்பு
சதை மேலே தூக்குமடா வயிறு வீங்கும்
நாளைக்கோர் வியாதியைப் போலக் காட்டும்
நம்பாதே சாந்தியுடன் செய்து நீக்கே.

பரிகாரம் :

ஞாயிற்றுக்கிழமையில் அரைத்த மஞ்சள்சோறு தூதுவளை இலுப்பைப் பிண்ணாக்கு சமைத்த கறி முதலியன ஒன்று கூட்டிப் பிசைந்து ஆண்பாவை செய்து புதுச்சட்டியில் வைத்து காதோலை கருமணி சந்தனம் கதம்பம் ஐவண்ணநூல் கருப்புத்துணி சாத்தி மந்தாரை மலர் சூட்டவும்.


சோறு பிண்ணாக்கு அரைக்கீரைப் புரட்டல் கருவாடு அவல் கடலை சுண்டல் முட்டை ரொட்டி சுருட்டு தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு காணிக்கை முதலியவைகளை பாவையைச் சுற்றிலும்

வைத்து கருப்பு பெட்டைக் கோழியை காவு கொடுத்து தூபம் காட்டி நிவேதனம் செய்து இம்மந்திரத்தை இரண்டு தடவை செபிக்கவும் ஓங்காளி பாலக்கிரக தோசம் நிவர்த்தி ஓம் ஆம் உம் ஐயும் கிலியும் சவ்வும் சர்வ தோசம் நிவர்த்தி"

மூன்று கிளை உள்ள கொடிகள்ளியை நெய்த்திரி சுற்றி தீபமேற்றி கிழக்கு முகமாகத் தாய்மடியில் குழந்தையை இருக்க வைத்து கிரகத்தின் பெயரைச் சொல்லி 108 தடவை மந்திரம் செபித்து பாவையை எடுத்து ஆறு தடவை இருவரையும் சுற்றி மாலை நேரத்தில் ஊருக்கு மேற்குச் சோலை எதிரில் வைக்கவும்.

குப்பைமேனிக்கு காப்புக்கட்டி 'அங்-உங்-சிங்-வங்- என்று வேர் பிடுங்கி இதில் சக்கரத்தை செப்புத் தகட்டில் எழுதி நூல் சுற்றிய வேரைச் சுருட்டி வைத்து அவல் கடலை வெற்றிலை பாக்கு பூ வைத்து தேங்காய் உடைத்து தூபதீபங்காட்டி நிவேதனம் செய்து இந்த மந்திரத்தை செபிக்கவும் அரி கரி காலதூதா - எமதூதா ஓம் இப்பிள்ளைக்குச் சகல தோசங்களும் நிவாரணமாக என்று நூற்றி எட்டு தடவை செபித்து குளிசத்திற்கு மூன்று வண்ண நூல் சுற்றி குழந்தைக்குக் கட்ட சகல தோஷமும் நிவர்த்தியாகும்.

உருத்திர கெளரி மாரியம்மை :



7ம் நாள் 7ம் மாதம் 7ம் ஆண்டு வந்தணுகும்
குரல் கம்மி யழுமடா சுரமும் காணும்
குழந்தைக்கு உச்சியது பள்ளமாகும்
புருவமது துடிக்குமடா கண்ணீர் பாயும்
பூமியிலே புரண்டழுகும் மிரண்டு பார்க்கும்
தேகமது பச்சை நிற மாகக் காட்டும்
திரண்டு இரு புருவமது துடிக்கும் பாரு
சிறுத்ததொரு பிள்ளைக்கு ஏழாமாண்டில்
செய்யுமாம் இந்தவித தோஷமெல்லாம்.

பரிகாரம் :

செவ்வாய்க்கிழமையில் பச்சரிசி மாவில் பெண்பாவை செய்து புதுச்சட்டியில் வைத்து காதோலை கருமணி ஐவண்ண நூல் கருப்புத்துணி சாத்தி வெள்ளெருக்கம் பூச்சூட்டவும்.


சோறு, கருப்பு பெட்டைக்கோழி, ஆட்டுக்கறிபுரட்டல், அரிசி, ரொட்டி, நெல் பொரி, நவதானியம், பிண்ணாக்கு கீரை, நெத்திலிக் கருவாட்டின் தலை, கோழிமுட்டை, கள், சாராயம், சுருட்டு தேங்காய், பழம் வெற்றிலை பாக்கு, காணிக்கை, குங்குமம், கதம்பம், கலயத்தில் ஒன்பது காசு வைத்து தூபதீபம் காட்டி நிவேதனம் செய்யவும்.

புள்ளிச்சேவல் காவு கொடுத்து வடக்கு முகமாக தாயார் மடியில் குழந்தையை அமர வைத்து 108 தடவை மந்திரத்தை செபித்து பாவையை ஒன்பது தடவை சுற்றி உச்சி நேரத்தில் சுடுகாடு அல்லது ஆற்றங்கரையில் கொண்டுபோய் வைத்து பாவையின் வாயில் கள்ளை ஊற்றவும் ஓம் பாலகிரக பைரவி ஓம் ஆம் ஐயும் கிலியும் சவ்வும் பாலகிரக தோஷ நிவர்த்தி.

வில்வ மரத்திற்கு காப்புக்கட்டி நமச்சிவாய சிவாய என்று வேப்பிலையும் கோழியிறகும் பலியிட்டு வேர் பிடுங்கி இதற்குரிய சக்கரத்தை செப்புத் தகட்டில் எழுதி வேரைச் சுருட்டி மஞ்சள்நூல் சுற்றி, மஞ்சள் பிள்ளையார் செய்து அதற்கு எதிரில் குளிசத்தை வைத்து பூச்சூட்டி வெற்றிலை பாக்கு, காணிக்கை, பழம், அவல், கடலை வைத்து வேப்பிலையும் அரிசியும் கலந்து மூன்று மொந்தையில் (பானையில்) பொங்கலிட்டு வைத்து தேங்காய்

உடைத்து தூப தீபம் காட்டி ஓம் சிவா பிள்ளை சகல தோஷமும் நிவர்த்தி என்று நூற்றி எட்டு தரம் செபித்து குழந்தைக்கு கட்டவும்.

சுப்புரமாதங்கி என்னும் பகவதி



8ம் நாள் 8ம் மாதம் 8ம் ஆண்டு வந்தணுகும்
தலை சுழலும் கண் சுழலும் அயர்ந்து போகும்
தண்ணீர் போல பேதியாகும் வாந்திபண்ணும்
நிலைதவறி களைப் புண்டாகி தலையுஞ் சாயும்
நினைக்க வொண்ணாப் பலவிதமாய் கனவுகாணும்
அலறுமடா சுரங்காயும் சிரங்கு காணும்
அப்பனே கண்திறவா திருக்கும் பாரு
பலவிதமாய் இதுபோலே விகாரம் பண்ணும்
பாலருக்கு எட்டான வருடந்தானே.

பரிகாரம் :

திங்கட்கிழமையில் பச்சரிசி மாவு, எள், பால், சோறு, பாகற்காய் முதலியவை பிசைந்து ஆண்பாவை செய்து புதுச்சட்டியில் வைத்து காதோலை, கருமணி, பஞ்சவர்ண நூல், நீலநிறத்துணி செவ்வலரி மலர் சூட்டவும்.


குங்குமம், சந்தனம், தூவிய சோறு, சுட்ட கருவாடு, ஆட்டுக்கறி முட்டை, ரொட்டி, சுருட்டு அவல் கடலை சுண்டல் பிண்ணாக்கு, கீரை கொழுக்கட்டை பழம் வெற்றிலை பாக்கு ஒன்பது காசுகள் மஞ்சள் துணியில் சுற்றி வைக்கவும்.

ஐந்து திரி விளக்கு கொளுத்தி தேங்காய் உடைத்து தூபதீபம் காட்டி வெள்ளைச்சேவல் காவு கொடுத்து 108 தடவை மந்திரம் செபிக்கவும்.

கிழக்கு முகமாக தாயாரின் மடியில் குழந்தையை அமர வைத்து 'ஓம் பகவதி ஐயும் கிலியும் சவ்வும் பாலகிரக தோஷம் நிவர்த்தி' என்று பதினாறு தடவை செபித்து இருவரையும் எட்டு தடவை சுற்றி அந்தி நேரம் ஐயனார் கோவிலுக்கு எதிரில் ஆலமரத்தடியில் வைக்கவும்.

ஊமத்தைக்கு காப்புக்கட்டி 'நங் மங் சிங் வங்' என்று வேர் பிடுங்கி வந்து சக்கரத்தை செப்புத்தகட்டில் எழுதி வேரை வைத்துச் சுருட்டி மஞ்சள் நூல் சுற்றி பூச்சூட்டி வெற்றிலை பாக்கு பழம் அவல் கடலை வைத்து தேங்காய் உடைத்து தூபதீபம் காட்டி 108 தடவை இம்மந்திரத்தை சொல்லி உரு செபித்து குழந்தைக்கு கட்ட சகல தோசமும் நிவர்த்தியாகும் ஓம் ஆங்காரி வேதாளி சர்வ தோச தாசி இப்பிள்ளை தோசம் பட்சிக நாயா படு படு சுவாகா.

குணத்திவாயக்னி குடோாி தேவதை



9ம் நாள் 9ம் மாதம் 9ம் ஆண்டு வந்தணுகும்

மஞ்சளாய் பேதியாகும் கண்கள் வீங்கும்
மைந்தனது காலிரண்டும் பின்னும் பாரு
கொஞ்சுகின்ற முகமதுதான் வெளுத்துக் காணும்
குழந்தையது நித்திரையுஞ் செய்யா தண்ணே
துஞ்சவே சுரமடிக்கும் வயிறு நோவும்
தூக்குமடா இருவிலாவும் உயர்ந்து போகும்
அஞ்சாதே இதற்குள்ள பரிகாரந்தான்
அடுத்தாற்போ லுரைத்திட்டோம் செய்து நீக்கே.


பரிகாரம்

ஞாயிற்றுக்கிழமையில் செம்பாளை அரிசிச்சோறும் சந்தனமும் கலந்து பிசைந்து பெண்பாவை செய்து புதுச் சட்டியிலே வைத்துக் காதோலை கருமணி பஞ்சவண்ண நூல் சிகப்புத் துணி சுற்றி செவ்வலரிப் பூச்சூட்டவும்.

பழம், அவல், கடலை, ரொட்டி, சோறு பிண்ணாக்கு கீரை கதம்பப்பொடி முதலியவை படைத்து தூபதீபம் காட்டி கருப்புச் சேவல் பலியிட்டு 108 தரம் மந்திரம் செபித்து கிரகத்தைப் பெயர் சொல்லி கிழக்கு முகமாக தாயாரின் மடியில் குழந்தையை அமரவைத்து ஒன்பது காசு கலயத்தில் வெற்றிலை பாக்கு காணிக்கை வைத்து "ஓம் பாலகிரக குடோரி ஐயும் கிலியும் சவ்வும் பாலகிரக தோசம் நிவர்த்தி" மந்திரத்தைச் சொல்லி பதிமூன்று தடவை சுற்றி இறக்கி அந்தி நேரத்தில் மேற்குத் திசையில் குளத்தங்கரையில் வைத்து கனாபூதமென்று சொல்லிக் கொண்டு பாவையின் வாயில் கள் வார்க்கவும்.

மூக்கிரட்டைக்கு காப்புக்கட்டி "ஓம் சிவாய நம" என்று வேர் பிடுங்கி வந்து சக்கரத்தை செப்புத் தகட்டில் எழுதி வேரை வைத்துச் சுருட்டிப் பழம் அவல் கடலை வெற்றிலை பாக்கு காணிக்கை வைத்து தேங்காய் உடைத்து தூப தீபங் காட்டி கீழ்க்கண்ட மந்திரத்தை நூற்றி எட்டு தரம் செபித்து குளிசத்தை குழந்தைக்கு கட்ட சர்வ தோசமும் நிவர்த்தியாகும். "ஓம் ஆங்காரி வேக வேதாளி சர்வ பட்சணி பிள்ளை தோசம் படு படு சுவாகா"

கஞ்சி காலாக்கினிதேவி ருத்திரி தேவதை



10ம் நாள் 10ம் மாதம் 10ம் ஆண்டு வந்தணுகும்
தேகமே மெலிந்து போகும் பேதியாகும்
திடமான கை கால்கள் வலிபோற்காணும்
வேகமாய்ச் சுரமடிக்கும் உருவே மாறும்
வயிறு கருக்கும் சிலந்தியின் பட்டி காணும்
சோகமாய் மூர்ச்சையது வந்து மாறும்
சுளுக்காகக் கைகால்கள் நோயுண்டாகும்
பாகமாய் இதற்குடனே பரிகாரந்தான்
பாட்டின் கீழ்க் கூறிவிட்டோம் பகிர்ந்து கொள்ளே.

பரிகாரம் :

செவ்வாய்க்கிழமையில் பச்சரிசிச் சோறு அவித்த நாணைக் கிழங்கு கறி, நெல் பொரி, பொரி மாவு முதலியன சேர்த்துப் பிசைந்து பெண்பாவை செய்து புதுச்சட்டியில் வைத்துக் காதோலை கருமணி, ஐந்து வர்ணநூல், கருப்புத் துணி சாத்தி சந்தனம் தெளித்து வெள்ளைப் பூச்சூட்டவும்.

அவல், கடலை, வெற்றிலைப்பாக்கு, காணிக்கை வைத்து சோறு, பிண்ணாக்குகீரை, சுருட்டு, பழம் வைத்து ஒன்பது காசு முடிந்து தேங்காயுடைத்து தூபதீபங் காட்டி நூற்றி எட்டுதரம் மந்திரத்தை

செபித்து மேற்கு முகமாக தாயாரின் மடியில் குழந்தையை அமர வைத்து "ஓம் ருத்திரி ஐயும் கிலியும் சவ்வும் பாலகிரக தோச நிவர்த்தி" என்று நூற்றி எட்டு தரம் செபித்து பாவையை எடுத்து குழந்தையை ஒன்பது தடவை சுற்றி தேவதையின் பெயரைச் சொல்லி அந்தி வேளையில் கிழக்கு திசையில் வைக்கவும்.

நில ஆவாரைக்கு காப்பு கட்டி "ஒஓ ஆஆ சீசீ" என்று வேரை பிடுங்கி வந்து சக்கரத்தை செப்பு தகட்டில் எழுதி வேரை வைத்துச் சுருட்டி மஞ்சள் நூல் சுற்றி வைத்து பூச்சூட்டி வெற்றிலை பாக்கு, காணிக்கை, பழம், அவல், கடலை வைத்து தேங்காய் உடைத்து தூபதீபங் காட்டி கீழ்க்கண்ட மந்திரத்தை 108 தடவை செபித்து குளிசத்தை குழந்தைக்குக் கட்ட சகல தோஷமும் நிவர்த்தியாகும். "அரி ஓம் அர நசி அகார மந்திரா ஆசுகோர ரூபா அகோர பட்சி இப்பிள்ளைக்குத் தோசம் படு படு சுவாகா"

பஞ்சமி பாதிரி மாகாளி


11ம் நாள் 11ம் மாதம் 11ம் ஆண்டு வந்தணுகும்

அடிக்கடி சுரமடிக்கும் வேர்வை காணும்
அப்பனே சிறுநீர் தான் மஞ்சளாகும்
துடிதுடிக்கும் தேகமெல்லாம் வீக்க மாகும்
துவளுமடா நாவதுதான் வறண்டு போகும்
கடுகடுக்கும் வெறி குணங்கள் அதிக மாகும்
கண்டபடி சேட்டை பண்ணும் வயிறதுதான்
படுத்திட்ட தோசங்கள் நிவர்த்தி செய்து
பாலருக்கு உயிர் கொடுத்துப் பாதுகாரே.

பரிகாரம் :

வெள்ளிக்கிழமையில் எருமைப் பால் விட்டுப் பொங்கிய பச்சரிசிச் சாதம் குறிஞ்சான் இலை போட்டு சமைத்த கறி ஆகியவைகளை ஒன்றாகச் சேர்த்து பிசைந்து ஆண்பாவை செய்து புதுச்சட்டியில் வைத்து காதோலை கருமணி சிகப்புத்துணி சாத்தி, பஞ்சவர்ணநூல், தும்பை பூச் சூட்டவும்.

பழம் அவல் சுடலை, சுண்டல் ரொட்டி வெற்றிலை பாக்கு காணிக்கை வைத்து தேங்காய் உடைத்து தூப தீபங்காட்டி ஐந்து எலுமிச்சம் பழங்களை அறுத்து 108 தடவை மந்திரம் செபித்து கிரகத்தின் பெயரைச் சொல்லி வடக்கு முகமாக தாயாரின் மடியில் குழந்தையை அமர வைத்து "ஓம் படாகிரி ஐயுங் கிலியும் சவ்வும் சர்வ பால கிரக தோச நிவர்த்தி" என்று 108 தரம் மந்திரத்தை செபித்து பாவையை எடுத்து ஒன்பது தடவை இருவரையும் சுற்றி மாலை நேரம் நான்கு தெரு கூடுமிடமான அரசமரத்தடியில் வைக்கவும்.




எருக்கன் செடிக்கு காப்புக்கட்டி "ஓம் சிவ" என்று வேர் பிடுங்கி வந்து சக்கரத்தை செப்புத் தகட்டில் எழுதி அதனுடன் வேர் வைத்து சுருட்டி பூச்சூட்டி அவல் கடலை வெற்றிலைபாக்கு காணிக்கை வைத்து தேங்காய் உடைத்து தூப தீபம் கொடுத்து "அரி ஓம் அங்அரக்கினி மாகாளி சக்தி ரூபாயம்மே ஐயும் கிலியும் சவ்வும் பட்டு இப்பிள்ளைக்கு சர்வ தோசமும் நசி நசி சிவாய" என்று நூற்றி எட்டு தடவை செபித்து குளிசத்தை குழந்தைக்கு கட்ட சர்வ தோசமும் தீரும்.

அரக்கி உச்சங்கி எனும் நீலி தேவதை

12ம் நாள் 12ம் மாதம் 12ம் வருடம் வந்தணுகும்

கண்வளையும் வாந்தி பண்ணும் கொடிபோல் துவளும்
கதிரவன் போல் காயுமடா விக்கல் காணும்

தண்ணீரை கேட்குமடா பேய் போல் சுற்றும்
தவளைச் சொரி போல் உடலில் சிரங்கு காணும்
எண்ணெய் போல தேகமெல்லாம் மினு மினுக்கும்
இளகலாய் மஞ்சளைப் போல் பேதியாகும்
பன்னிரண்டாம் வருடத்தின் தோஷஞ் சொன்னேன்
பக்குவமாய் பரிகாரம் செய்து நீக்கே



பரிகாரம் :

திங்கட்கிழமையில் பிண்ணாக்கு அரைக்கீரை கருவாடு சோறு முதலியவைகளை சேர்த்துப் பிசைந்து ஆண்பாவை செய்து சட்டியில் வைத்துக் காதோலை கருமணி ஐந்து வர்ணநூல் புதுப்பச்சைத் துணி பருத்திக் கொட்டை வேப்பிலை முட்டை சாராயம் அவல் கடலை சுருட்டு ரொட்டி பழம் வெற்றிலைபாக்கு காணிக்கை வைத்து ஏழுதிரி கொளுத்திப் பாவையின் சுற்றிலும் வைத்துத் தேங்காய் உடைத்துத் தூபதீபங்காட்டி 108 தரம் மந்திரத்தை செபிக்கவும்.

கிழக்கு முகமாக தாயார் மடியில் குழந்தையை அமர வைத்து கிரகத்தின் பெயர் சொல்லி "ஓம் பாலக்கிரக நீலி ஐயும் சர்வ பாலகிரகத் தோசம் நிவர்த்தி" என்று பதினாறு தடவை மந்திரம் செபித்து பாவையை எடுத்து ஒன்பது தடவை சுற்றி இரவு ஊர் வடக்கில் உள்ள மூன்று தெரு கூடுமிடத்தில் வைக்கவும்.

வட்டக்கிளுகிளுப்பை செடிக்குக் காப்புக்கட்டி "ஓம் சிவ உசி சிஅ" என்று சொல்லி வேர் பிடுங்கி வந்து சக்கரத்தை தகட்டில் எழுதி அதனுள் வேரை வைத்து மஞ்சுள் நூல் சுற்றி பூ பழம் அவல் கடலை வெற்றிலை பாக்கு காணிக்கை முதலியவற்றை மஞ்சள் பிள்ளையார் முன் வைத்து தேங்காய் உடைத்து தூப தீபங்காட்டி கீழ்க்கண்ட மந்திரத்தை நூற்றி எட்டு தடவை செபித்து குளிசத்தை குழந்தைக்கு கட்ட சகல தோஷமும் நிவர்த்தியாகும். "ஓம் ஆம் தேவி திரிபுர மாகாளி சிவாநந்தி அம்மே தாயே அடியேனாகிய இந்த சிசுவைக் காக்க வா"

உச்சங்கி என்னும் பிடாரிதேவதை

13ம் நாள் 13ம் மாதம் 13ம் வருடம் வந்தணுகும்

பார்த்தவர்கள் பயித்தியந்தான் என்றுசொல்லப்
பண்ணுமடா குணங்களெல்லாம் மாறிப்போகும்
காத்திருந்து சன்னியென்னும் தோஷம் தொத்தும்
கண்ணிரண்டில் ஒரு பார்வை மறைந்து போகும்
வேர்த்து விடும் பேதியாகும் வெறுப்புண்டாகும்
விதவிதமாய்ப் பலப்பலவாய் விகாரம் செய்யும்
பேர் தெரிந்து பதிமூன்றாம் வருடமென்று
பக்குவமாய் பரிகாரஞ் செய்விப்பாயே.

பரிகாரம் :

செவ்வாய்க்கிழமையில் பால்சோறு, கருவாடு, கள் ஆட்டுக்கறி முதலியவைகளைப் பிசைந்து பெண்பாவை செய்து புதுச்சட்டியில் வைத்துக் காதோலை, கருமணி, ஐந்து வர்ணநூல் நீலத்துணி சாத்தி செவ்வலரிப் பூச்சூட்டி பதிமூன்று எலுமிச்சம் பழமறுத்து சட்டியில் பொங்கலிட்டு வடை, சுண்டல், அவல், கடலை, சுருட்டு, ரொட்டி, பழம், புண்ணாக்கு கீரை, கருவாடு, ஆட்டுக்கறி வெற்றிலை பாக்கு காணிக்கை வைத்து தேங்காய் உடைத்து தூபதீபம் காட்டி சேவல் காவு கொடுத்து நிவேதனஞ் செய்து 108 தடவை மந்திரத்தை செபிக்கவும்.


வடக்கு முகமாகத் தாயாரை குழந்தையுடன் அமர வைத்து கிரகத்தின் பெயர் சொல்லி "ஓம் பாலக் கிரகத் தோச நிவர்த்தி" என்று பதினாறு தடவை செபித்து பாவை எடுத்து ஒன்பது தடவை சுற்றி

உச்சி நேரத்தில் ஊருக்கு வடபுறத்தில் மாடுகட்டும் கொட்டகை எதிரில் வைக்கவும்.

வட்டக்கிளுகிளுப்பை செடிக்கு காப்புக்கட்டி 'அங் சங்' என்று செபித்து வேர் பிடுங்கி வந்து சக்கரத்தை செப்புத் தகட்டில் எழுதி வேரைச் சுருட்டி மஞ்சள்நூல் சுற்றி வைத்து பூச்சூட்டி வெற்றிலை பாக்கு பழம் அவல் கடலை வைத்து சாணியில் செய்த பிள்ளையாருக்கு அருகம்புல் சூட்டி காணிக்கை வைத்து தேங்காய் உடைத்து தூப தீபங் காட்டி "அரி ஓம்ஆதிசிவா" என்ற மந்திரத்தை 108 தடவை செபித்து குளிசத்தை குழந்தைக்கு கட்ட சகல தோசமும் நிவர்த்தியாகும்.

மாடன் என்னும் உக்கிரம வீரன்

14ம் ஆண்டு, 14ம் மாதம் 14ம் நாள் வந்தணுகும்
வயிறுநோ யுண்டாகும் குளிரும் காயும்
வாய்வுதான் அதிகரித்துப் பேதியாகும்
நோய்கண்ட பிள்ளையைப் போல் மெலிந்துபோகும்
நிலையாது பல விதமாய் பேதியாகும்
பைத்தியம் பிடித்தவர் போல் அலைய வேண்டாம்
பதினான்காம் வருடத்தின் தோஷங் கண்டால்
வயித்தியங்கள் செய்துடலைக் கெடுக்க வேண்டாம்
வளமான பரிகாரஞ் செய்து நீக்கே.



பரிகாரம் :

வெள்ளிக்கிழமையில் எருமைத்தயிர் விட்டசோறு பெருஞ்சீரகம் கத்தரிக்காய் சமைத்து பிசைந்து ஆண் பாவை செய்து புதுச்சட்டியில் காதோலை கருமணி மூன்று வர்ணநூல் வெள்ளைத் துணி பூ சந்தனம் புனுகு கதம்பம் குங்குமம், பச்சரிசிப் பொங்கல் மது மாமிசம் கஞ்சா சமைத்த கறி கருவாடு வெற்றிலைபாக்கு காணிக்கை பழம் அவல் கடலை முதலியன படைத்து தேங்காய் உடைத்து தூப தீபம் காட்டி நூற்றி எட்டு தரம் மந்திரம் செபிக்கவும்.

மேற்கு முகமாகத் தாயார் மடியில் குழந்தையை உட்கார வைத்து "ஓம் பாலகிரகத் தோசம் நிவர்த்தி" என்று ஐந்து தடவை செபித்து பாவையை எடுத்து மூன்று தரம் சுற்றி கிரகத்தின் பெயரைச் சொல்லி முச்சந்தியில் வைக்கவும்.

குட்டி விளாச்செடிக்கு காப்புக்கட்டி நமச்சிவாய என்று வேர் பிடுங்கி வந்து சக்கரத்தை செப்புத் தகட்டில் எழுதி அதனுள் வேரை வைத்து மஞ்சள் நூல் பழம் அவல் கடலை வெற்றிலைப்பாக்கு காணிக்கை வைத்து சந்தனம் தெளித்து தேங்காய் உடைத்து தூப தீபங்காட்டி இந்த மந்திரத்தை நூற்றி எட்டு தடவை செபித்து குளிசத்தை குழந்தைக்கு கட்ட சகல தோசமும் நிவர்த்தியாகும்" அரி ஓம் மாடவா என்ற மாசானி சர்வஜன பயங்கர அந்தி மாடா உதிரபலி மாடா ஓம் பட்சி படு சிவாய நமசிவ சிவ சிவா"

பேச்சியம்மாள் என்னும் மயானருத்திரி


15ம் ஆண்டு 15ம் திங்கள் 15ம் நாள் வந்தணுகும்

பதினைந்து வருடத்தின் தோஷஞ் சொன்னேன்
பரிகாரம் அதற்குடனே அடுக்காய்ச் சொன்னேன்
விதியாலே முடிவானால் யாரா லுண்டு
வினையிருந்தால் முடிவேது இன்னுங் கேட்டால்
பசியால் சுரமடிக்கும் பற்கடிக்கும்
பதறுமடா நாய்போல சிதறும்பாரு
சதிவேலை பல விதமாய் நுழைய வேண்டாம்
தக்கபடி பரிகாரம் செய்து நீக்கே.

பரிகாரம் :


ஞாயிற்றுக்கிழமையில் பச்சரிசிமாவால் பெண்பாவை செய்து காதோலை, கருமணி விபூதி உருண்டை மஞ்சள் குங்குமம் கதம்பம் வாசனைத் திரவியம் மயிலிறகு கொன்றைப் பூ கருப்புத்துணி பச்சரிப்பொங்கல் மாமிசம் ரொட்டி சோறு முதலியவைகளை ஐந்து நிறங்களில் ஐந்து உருண்டையாகச் செய்து புதுச்சட்டியில் வைத்து தூப தீபங்காட்டி நிவேதனம் செய்து நூற்றி எட்டு தடவை மந்திரம் செபிக்கவும்.

கிழக்கு முகமாக தாயார் மடியில் குழந்தையை அமர வைத்து "சீரியும் கிலியும் பாலகிரகப்பட்சிதோசம் நிவர்த்தி" என்று பதினாறு தடவை செபித்து ஒன்பது தடவை சுற்றி கிரகத்தின் பெயர் சொல்லி தூபங் கொடுத்தவுடன் வேப்ப மரத்தடியில் பாவையை வைக்கவும்.



வாசலில் வட்டமாகத் தரை மெழுகி நெல் போட்டு புதுக்கலசம் வைத்து வேப்பிலை அணிந்து அம்மனைப் போல் பாவித்து பூச்சூட்டி சோறு கறிப்படையல் போட்டு மஞ்சளால் குழந்தையைப் போல் செய்து சேவல் பலியிட்டு பின்பு திருநீற்றுப் பச்சிலைக்கு காப்புக்கட்டி மூன்று எலுமிச்சம்பழம் காவு கொடுத்து "ஓம் ரங் ரங் டிங்" என்று வேர் பிடுங்கி வந்து சக்கரத்தை செப்புத் தகட்டில் எழுதி வேரை வைத்துச் சுருட்டி தூபம் கொடுத்து இந்த மந்திரத்தை நூற்றி எட்டு தரம் செபித்து குளிசத்தை குழந்தைக்கு கட்ட சகல தோசமும் நிவர்த்தியாகும்.

தெய்வகன்னி என்ற மாலை மோகினி
16ம் ஆண்டு 16ம் திங்கள் 16ம் நாள் வந்தணுகும்



பருவமடா பதினாறாகும் வருடந்தன்னில்
பாலருக்கு எவ்வனமும் அழகு உண்டாம்
சிரசுநோய் காணுமடா திருஷ்டியாலே
சிறுவருக்கு முகம் வெளுக்கும் கைகாலோயும்
கர கர எனக் கண் சுழலும் களைப்புத் தோணும்
கவலை மிகப் படுமேயடா மனது தானும்
அரஹர எனச் சிவன் பெயரைச் சொல்லித்தானே
அருமையாய்ப் பரிகாரம் செய்து நீக்கே.

பரிகாரம் :

வெள்ளிக்கிழமையில் உளுந்து மாவால் பெண்பாவை செய்து காதோலை கருமணி பஞ்சவர்ணநூல் பட்டுத்துணி பூச்சூட்டவும்.

பாசிப்பயிறு பொங்கல் சுண்டல் வடை பழம் தேங்காய் கரும்பு மஞ்சள் சந்தனம் வெற்றிலைப்பாக்கு காணிக்கை அவல் கடலை வைத்து தேங்காய் உடைத்து தூபதீபங்காட்டி நூற்றி எட்டு தடவை செபித்து இருபத்தோரு எலுமிச்சம்பழம் அறுத்து மூன்று முறை சுற்றி விடவும்.

"சிவ சிவா பாலகிரக மோகினி ஐயுங் கிலியும் சவ்வும் பாலகிரக தேவகன்னி சர்வ பாலகிரக தோச நிவர்த்தி" என்ற மந்திரத்தை தேவகன்னி ஏழு தடவை செபித்து மூன்று தடவை தாயையும் குழந்தையையும் சுற்றி ஆற்றங்கரையில் பாவையை வைக்கவும்.

கஞ்சாங்கோரை என்ற நாய்த் துளசிச் செடிக்கு காப்பு கட்டி அரி ஓம் நவ் நங் சிங் சிங் பங் வங் என்று வேர் பிடுங்கி சக்கரத்தை செப்புத் தகட்டில் எழுதி வேரை அதில் வைத்து மஞ்சள் பிள்ளையார் பூ பழம் காணிக்கை வெற்றிலைபாக்கு வைத்து தேங்காய் உடைத்து தூபதீபங் காட்டிய பின் இந்த மந்திரத்தை நூற்றி எட்டு தடவை செபித்து குளிசத்தை கட்டினால் சகல தோசமும் நிவர்த்தியாகும்.

அரிஓம் கிலியும் கன்னிவா நமா
மன்மதன் கன்னி ஐயும் கிலியும்
நட்டுப் படு படு கிஞ்சன பட்சி
நவி நாராயணி பட்டு படு படு சுவாகா

குறிப்பு : இதில் குறிப்பிடப் பட்டுள்ள பதினாறு தேவதா தோஷங் களுக்கும் பொதுவான மந்திரம் எந்த தேவதைக்குரிய மந்திரம் சரியாகத் தெரியாத போதும் இம்மந்திரத்தைச் சொல்லலாம் அந்தந்த தேவதைக்குரிய மந்திரத்துடன் இந்த மந்திரத்தையும் சொல்லலாம்.

ஓம் ஓங்கார மகா அம்மா
அதன் தன்னோடும் அங்காரமும்
ஆயுசும் அதிகம் உண்டாகும் சுவாகா

மாந்தம்

உணவு செறிமானமாகாமல் வயிற்றில் தேங்கி நின்று மந்தத்தை உண்டாக்கும் போது குழந்தை அழத் தொடங்குகிறது சில சமயங்களில் உடம்பை முறித்துக் கொண்டும் "வீல் வீல்" என்று கத்தவும் செய்யும் வயிற்று வலியினால் தான் குழந்தை அழுகிறது என்பதை நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் அது சாதாரண வயிற்று வலியா? அல்லது மாந்தத்தினால் ஏற்பட்ட வயிற்று வலியா? என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். சாதாரண வயிற்று

வலியாக இருந்தால் விளக்கெண்ணெய் போட்டு நீவி விடுவதால் அல்லது வசம்பைச் சுட்டுக் குழைத்து தொப்புளின் மேல் தடவுவதால் குணமாகிவிடும். தாய் சுலபமாக ஜீரணமாகாத மந்தப் பொருள்களான எருமைப்பால், நெய், வாழைப்பழம், மாம்பழம், கடலை, வெல்லம், பருப்பு மாமிசம், உளுவை, வரால்மீன், கெண்டை போன்றவைகளை உண்பதால் தாய்ப்பால் உண்ணும் குழந்தைகளுக்கு மாந்தம் ஏற்படும். உணவு உண்ணும் குழந்தைகளுக்கு இப்பொருட்களை அதிகமாக உண்ணக் கொடுத்தாலும் இந்நோய் உண்டாகும்.

மாந்தம் இருபத்தி ஒன்று வகை எனப் பொதுவாகப் பல நூல்களிலும் கூறப்பட்டுள்ளன. நூல்களில் முப்பத்தி ஒன்று வகை எனச் சொல்லப்படுகின்றன. பொதுவாக மாந்த நோய்வாய்ப்பட்ட குழந்தைக்கு வயிற்றுப் பொருமல் உண்டாகும். அடிக்கடி பேதியாகும். இது அல்லாமல் பற்பல விதங்களாக வாந்தி எடுக்கும் அடிக்கடி மயங்கும் குளிர் காய்ச்சல் உண்டாகும்.

தலை மாந்தம் :

துடை இடுக்குகளில் வலி, தலைவலி, வியர்வை, கொட்டாவி, பலக்குறைவு, தலைகனம், ஈரல் குலையில் வலி கைகால்களை அசைக்காமல் மரத்துப் போய்க்கிடத்தல், குளிர் சுரம், உடம்பு வீக்கம் முதலிய அடையாளங்கள் இருக்கும்.

விஷ மாந்தம் :

அதிகமான வாந்தியும், வாய்பிதற்றலும் இருக்கும். இடுப்புக்குக் கீழே குளிர்ந்திருக்கும். காக்கை போல கண்கள் சொருகும். மலச் சிக்கலுடன் பேதியாகும். நல்ல சுரம் இருக்கும்.

நீர் மாந்தம் :

குழந்தையின் உடம்பெங்கும் வியர்வை காணும் வியர்வை நின்ற பிறகு தலைவலி, முகம் மினுமினுப்பு, வயிற்று இரைச்சல், கழிச்சல், ஈரல் குலைவலி அதிக மூத்திரம் பெய்தல் முதலிய ஏதேனும் உண்டாகும்.

செரியா மாந்தம் :

பால் போல பேதியாகும் வயிற்றுப் பொருமல், வீக்கம்,

குளிர்சுரம், ஏக்கம் தலைவலி வயிற்றுவலி வாந்தி முதலியவைகள் உண்டாகும்.

வறள் மாந்தம் :

உடலில் உள்ள நோய் தளர்ச்சியாகி உருக்குலையும் உடம்பு குளுமையாகும் கண்கள் வெளுத்து விடும் தலைச்சுழல்வதும் மயக்கமும் உண்டாகும். கை கால்களில் வீக்கம் உண்டாகி வலி உண்டாகும். தாய்ப்பாலை மிகவும் அதிகமாக சாப்பிடும்.

கட்டு மாந்தம் :

குழந்தைக்கு காய்ச்சல் அடிக்கும் வீக்கமும் வியர்வையும் அடிக்கடி உண்டாகும் அதிகமாக கொட்டாவி வரும் வயிற்றுவலி உண்டாகும். மலச்சிக்கலுடன் பேதி ஆகும் வயிறு இரைச்ச லுண்டாகும்.

பால் மாந்தம் :

குழந்தை பால் பாலாகவே கழியும். முகம் பற்பல நிறமாகும். கால்கைகள் வாட்டமடையும் பாலாகவே வாந்தி எடுக்கும். கண்களும் குழி விழுந்து வளையமிடும். தலை தூக்க முடியாமல் கஷ்டப்படும்.

ஊது மாந்தம் :

அதிகமான வாந்தியும் பேதியும் உண்டாகும். குழந்தைக்கு சுரம் உண்டாகும் உடம்பு வீங்கும். வயிறு இரையும்.

கல் மாந்தம் :

காய்ச்சல் உண்டாகும். உடம்பு வெளுக்கும் நாக்கு உலர்ந்து போகும் கால் குளிர்ச்சியாகும். உடம்பு வாட்டமடையும் பலவிதமாகக் கழியும் கைகளால் முகத்தை அடிக்கடி நிரடிக் கொள்ளும்.

வலிப்பு மாந்தம் :

கை கால்கள் அயர்ந்து போகும் அடிக்கடி இசிவு (வலிப்பு) உண்டாகும் பற்கள் கிட்டிக் கொள்ளும் பற்களை நற நற வென்று கடிக்கும் வாந்தி உண்டாகும் மயக்கமாக இருக்கும்.

போர் மாந்தம் :

உடல் இளைக்கும் காய்ச்சல் ஏற்படும் அதிக நாற்றத்துடன்

வயிறு கழிச்சல் உண்டாகும். உதடுகள் உலரும். வாயில் நுரை தள்ளும் வாந்தி எடுக்கும் கண்களில் குழி விழும். நெஞ்சில் புண்கள் உண்டாகும்.

சந்நி மாந்தம் :

தாகம் அதிகமாக இருக்கும் மயக்கம் இருக்கும் தலையை அப்படியும் இப்படியுமாகப் புரட்டும் கைகால்களில் குளிர்ச்சி உண்டாகும். நாக்கில் முட்கள் உண்டாகும் வாந்தி எடுக்கும் ஏப்பம் வலி முதலிய இருக்கும்.

பேய் மாந்தம் :

இடுப்பு, கை, கால், தொடை, முகம், மூக்கு, பிடரி, பிடரி நரம்பு முதலான எட்டு இடங்களிலும் தாங்க முடியாத வலி உண்டாகும் வாயில் நுரை தள்ளும் மயக்கம் உண்டாகும் நரம்புகள் கீழே நோக்கி இழுக்கும்.

துலை மாந்தம் :

அடிக்கடி கொட்டாவி விடும் அதிக தாகம் இருக்கும் உடம்பு முழுவதும் வலிக்கும் காய்ச்சல் அடிக்கும் மற்றவர் முகத்தைப் பார்த்தால் அழுவதற்கு ஆரம்பிக்கும் வியர்வை அதிகமாக உண்டாகும் குழந்தையின் விலா எலும்புகள் பருமனாகிமுன் வந்தது போல் இருக்கும்.

சுர மாந்தம் :

உடம்பு, முகம் முதலியவைகளில் ஒருவித மினுமினுப்பு நல்ல காய்ச்சல் ஏற்படும் தாய்ப்பால் குடிக்காது கண்களில் நீர் வடியும் கண் சிவப்பாக மாறும். மலச்சிக்கல், மயக்கம் உடல் முழுதும் வலி உண்டாகும் கால் மட்டும் சில்லென்று இருக்கும்.

உப்பு மாந்தம் :

தாகம் காய்ச்சல் வாய் பிதற்றல் இருக்கும் வயிறு உப்பி இரைச்சலுடன் பேதியாகும் பிறகு வாந்தியும் எடுக்கும் தாய்ப்பால் குடிக்காது மயக்கம் உண்டாகும்.

கண மாந்தம் :

அடிக்கடி இருமல் உண்டாகி உடம்பு இளைக்கும். மூக்கில் இருந்து நீர் வடியும் வயிறு பொருமும் தலைவலி உண்டாகும் வயிற்றில் வலி உண்டாகி இரைச்சலுடன் பலவிதமாகப் பேதி உண்டாகும் கண் மயக்கமேற்படும்.

அள்ளு மாந்தம் :

மற்ற அறிகுறிகளுடன் விலாவைத் தூக்க முடியாது மூச்சுவிட முடியாமல் திணறும் நெஞ்சைத் தூக்கித் தூக்கிப் போடும்.

விக்கல் மாந்தம்

மற்ற அடையாளங்களுடன் அதிகமாக விக்கல் இருக்கும்.

மாந்த நோய்க்கு சிகிச்சை

உணவு செறிமானமாகாமல் குழந்தை காரணமில்லாமல் அழத் தொடங்கிய உடனே கவனிப்பது நல்லது. பெரும்பாலும் மலச்சிக்கலுடன் ஆரம்பித்து பிறகு பேதியாக மாறுவதும் உண்டு. இதைச் சாதாரணமாகக் கருதி விட்டால் பேதி அதிகமாகி மோசமான விளைவுகளும் ஏற்படலாம்.

பால் குடிக்கும் குழந்தையானால் தாய் பத்தியம் இருப்பதுடன் முதலில் ஒன்று அல்லது இரண்டு நாள் பால் கொடுக்காமல் இருப்பது நல்லது. குழந்தைக்கு எளிதில் சீரணமாகக் கூடிய லேசான ஆகாரங்கள் கொடுக்க வேண்டும். அடிக்கடி தண்ணீர் கொடுக்க வேண்டும். நன்றாகக் காய்ந்து ஆறிய நீரில் ஒரு சிட்டிகை உப்பும் தேவையான அளவு சர்க்கரையும் கலந்து ஆற்றி அடிக்கொரு தடவை கொடுத்து வரலாம் அல்லது டெக்ஸ்ட்ரோஸ் கலந்த நீர் கொடுக்கலாம். பாலை முறித்து வடிகட்டிக் கிடைக்கும் நீரில் சர்க்கரை போட்டுக் கொடுக்கலாம். ஒன்று அல்லது ஒன்றரை வயதுக் குழந்தையானால் அரிசி வேகவைத்த நீர், அரரோட் மாவுக் கஞ்சி, பார்லிக் கஞ்சி போன்றவற்றைக் கொடுக்கலாம். ஆகார விஷயத்தில் வயதை அனுசரித்து என்ன கொடுப்பது என்பதை தீர்மானிக்க வேண்டும்.

பேதி நின்று பசி ஏற்பட்டவுடன் முதலில் நொய்க் கஞ்சி போன்ற லேசான ஆகாரத்தைக் கொடுக்க ஆரம்பித்துப் பிறகு கொஞ்சம்

கொஞ்சமாக ஆகாரத்தின் தன்மையை மாற்றி வழக்கமான ஆகாரத்திற்கு வரவேண்டும்.

மாந்த நோய் உண்டான குழந்தை அடிக்கடி வாந்தி அல்லது பேதியாகக் கூடுமாகையால் குழந்தையையும் சுற்றுப் புறத்தையும் மிகவும் சுத்தமாக வைத்திருக்க வேண்டியது அவசியம். எச்சில் அல்லது மலம் பட்ட இடத்தில் டெட்டால் போட்டுக் கழுவி விட வேண்டும். அடிக்கொரு தடவை துணி மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் சுத்தமான துணிகளையே உபயோகிக்க வேண்டும் குழந்தையை எப்போதும் அதிகப் புழுக்கமோ அல்லது அதிகக் குளிரோ இல்லாத இடத்தில் வைத்திருக்க வேண்டும் மாந்தத்தினால் ஜுரம் வரலாம் பெரும்பாலும் அதற்குத் தனியாக மருந்து கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது. ஆனால் வேறு காரணங்களால் ஜுரம் அதிகமாகும்படி விட்டு விடக் கூடாது.

அதிகமாக பேதியாகி அதனால் தொண்டைக் குழாயில் தண்ணீர் இறங்காமல் வாந்தி அல்லது விக்கல் போன்ற காரணத்தால் சிரமம் ஏற்படும் போது இரத்தக்குழாய் வழியாக டெக்ஸ்ட்ரோஸ் கலந்த நீர் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்படலாம் தக்க சமயத்தில் கவனித்து மருத்துவ உதவியை நாட வேண்டும்.

எல்லாவித மாந்தங்களுக்கும் பொதுவாக மருந்துகள் கூறப்பட்டுள்ளன. இவற்றில் மேல் பூச்சாக உபயோகிக்க வேண்டியதை அடிக்கடி பூசிவரலாம். எந்த மாந்தமாக இருந்தாலும் மேல் பூச்சு மருந்தை ஒரே மாதிரி உபயோகிக்கலாம். அதே மாதிரி புகை போடுவதும் எல்லா மாந்தத்திற்கும் ஒரே மாதிரியாகப் போடலாம். மருந்து வகைகளில் வீட்டிலே செய்யக் கூடியதை பக்குவமாகச் செய்து ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு வேளை அதாவது ஆறுமணி நேரத்திற்கு ஒரு தடவை இரண்டு அல்லது மூன்று நாட்கள் நோய் குணமாகும் வரை கொடுத்து வரலாம். சில மருந்துகளை வைத்தியரிடம் இருந்துதான் வாங்க வேண்டியிருக்கும். அவற்றை வைத்தியரின் ஆலோசனைப் படியே கொடுப்பது நல்லது. இந்த மருந்துகள் பின் விளைவுகள் உண்டாக்காதவை என்பதால் ஒன்றிரண்டு வேளை அதிகமாகப் போனாலும் கெடுதல் இல்லை.

பொதுவாக நோயின் அறிகுறிகள் மாறிக் குழந்தையின் முகம் தெளிவாகும் வரை மருந்து கொடுத்து வரவேண்டும். நோயின் அறிகுறி மாறாமல் நீடிப்பதாகத் தெரிந்தால் வைத்தியரின் உதவியை நாடுவது நல்லது மாந்த நோயை சரியாகக் கவனிக்கா விட்டால் கணை வர்ந்தி பேதி முதலிய நோய்களை உருவாக்கும்.

மாந்த நோய்களுக்கு மருந்துகள்

1. உத்தாமணிவேர் வெள்ளைப்பூண்டு வெதுப்படக்கி கோழியாவரை வசம்பு சாணக்கிக் கீரை ஓமம் முதலிய எல்லாவற்றையும் ஒரு சட்டியிலிட்டு நன்றாகக் கருக்கிக் கொள்ளவும் தேவையான தண்ணீர் விட்டு கஷாயமாக இறக்கி அன்றைக்கே குடிக்கச் செய்யவும்.

2. உள்ளி வசம்பு பனைவேர் உத்தாமணி இலை வெள்ளாட்டுப் புழுக்கை முதலியவற்றை ஒரே அளவு எடுத்துக் காட்டிவிட்டு நன்றாக அரைத்து மேல் வயிற்றில் பூசவும்.

3. வில்வவேர், பாவட்டை வேர், பூனைக்காலிவேர் முடக்கொற்றான் வேர், சிறுபுள்ளடிவேர் (சுட்ட) வசம்பு (நன்றாக கருக்கிய) ஆமை ஓடு முதலியவைகளை நன்றாக இடித்து ஒரு லிட்டர் தண்ணீர் விட்டுக் காய்ச்சி அரை லிட்டராகச் சுருக்கிக் கொண்டு புகட்டவும்.

4. முருங்கை இலைச்சாறு நீர்முள்ளிச்சாறு இரண்டையும் நல்லெண்ணெயுடன் குழப்பிக் கொடுக்கவும்.

5. வேலிப்பருத்தி வேர் முடக்கொத்தான் வேர் சாறடைவேர் நாய்வேளைவேர் காட்டாமணக்குவேர் மணித்தக்காளி வேர் முதலியவற்றை ஒவ்வொன்றும் கைப்பிடி அளவு எடுத்து அரைக்கவும்.

பூண்டு (இரண்டு பல்) கடுகுரோகிணி, கருஞ்சீரகம் (சிறிதளவு) அரைத்து எல்லாவற்றையும் விளக்கெண்ணெயில் கலந்து கொதிக்க வைத்து எடுத்துக் கொடுக்கவும்.

சூரிய உதயத்தில் சூரியன் புறப்படும்போது தாயார் தண்ணீர் தொடாமல் இருந்து குழந்தைக்கு ஒரு கரண்டி அளவு எண்ணெய் கொடுக்கவும். மூன்று தடவை வயிறு கழிந்து சுகமாகும்.

6. ஓமம், கருஞ்சீரகம், உத்தாமணி இலை முதலியவைகள் ஒரு பிடி அளவு எடுத்துக் கொள்ளவும். கருந்துளசி வேர், சிக்குணாம்பட்டை , சிறுகுறிஞ்சான் வேர், பெருங்கிழங்கு, புலிதுடக்கி வேர், முதலியவைகளைக் கொஞ்சம் சேர்த்து தண்ணீர் விட்டுக் கஷாயமாக்கி குழந்தைகளுக்கு இரண்டுவேளை கொடுக்கவும்.

7. சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய் தான்றிக்காய், சுத்தி செய்த நேர்வாளம் முதலியன சம எடை சேர்த்துத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரை செய்யவும். ஒன்றிரண்டு வேளை கொடுத்தவுடன் குணம் தெரியும்.

8. வடக்கயிறு, கோழி இறகு, சீவிய மாட்டுக்கொம்பு தலைமயிர் முதலியவைகளைக் கத்தரித்து அனலில் இட்டுப் புகை உண்டாக்கி மாந்த வலிப்புள்ள குழந்தைகளின் உடம்பிலும் ஆசனத்திலும் புகையைக் காட்டவும்.

9. அகத்திப் பருப்பு வெள்ளைப்பூண்டு வசம்பு திப்பிலி முதலிய வைகளை வெதுப்பி நறுக்கிச் சாறு பிழிந்து கொள்ளவும் அதைக் குழந்தைக்கு உண்ணவும் கொடுத்து உச்சிக்கும் உடம்புக்கும் பூசவும்.

10. கள்ளி நாகதாளிக்கிழங்கு சீரகம் கடுக்காய் வெள்ளைப் பூண்டு வசம்பு நாய்வேளை உத்தாமணிவேர் புளிநரளைக்கிழங்கு வெள்ளைச் சாறடைக்கிழங்கு கொன்றை வேர் முதலியவைகளைச் சமமாக எடுத்துத் தூள் செய்து விளக்கெண்ணெயில் கொதிக்க வைத்து பதத்தில் இறக்கிக் கொண்டு சாப்பிடக் கொடுக்கவும்.

11. மருக்காரை வேர்ப்பட்டையை எலுமிச்சம்பழச் சாறுவிட்டு அரைத்து ஊற்றிய விளக்கெண்ணெயை பக்குவமாக எரித்து எடுத்துக் கொள்ளவும். குழந்தைக்கு கொடுக்கும்போது இலேசாகச் சூடாக்கிக் கொடுக்கவும்.

12. கடுகு ரோகிணி இலுப்பைப்பூ சுத்தி செய்த நேர்வாளம் முதலியவைகளைச் சமமாக எடுத்துப் பாகல் இலைச் சாற்றில் நன்றாக அரைத்துப் பருத்தி விதை அளவு உருண்டை நெய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும் ஒரு மாத்திரையை இரண்டு மிளகுடன் சேர்த்து அரைத்து வெதுவெதுப்பான நீரில் கொடுக்கவும்.

13. பனை மரத்தின் வேரையும் வசம்பையும் காடி சேர்த்து அரைத்து வயிற்றில் பூச வயிறு கழிந்து விடும் இதையே கொதிக்க வைத்துப் பூசினால் வயிறு கழிவது நிற்கும்.

14. பசுமாட்டுச் சிறுநீர் பசுவின் நெய் பசுவின் பால் ஆமணக் கெண்ணெய் ஆடு தீண்டாப்பாளைச்சாறு சாணிச்சாறு (சாணிப்பால்) தேங்காய்ப்பால் முடக்கற்றான் இலைச்சாறு முதலியன ஒரே அளவு சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும் ஒரு வயதுள்ள குழந்தைக்கு காசெடையும் ஆறு மாதக் குழந்தைக்கு அரைக் காசெடையும் கொடுக்கவும்.

15. விளாங்கொழுந்து இண்டங் கொழுந்து பழம்பாசி ஆகிய மூன்றையும் சமமாக எடுத்து நறுக்கி வெள்ளைப் பூண்டு வசம்பு இரண்டையும் சேர்த்து நன்றாக அரைத்து நல்லெண்ணெயுடன் கலந்து வெயிலில் வைத்து வடிகட்டவும் ஒரு சங்களவு வீதம் குழந்தைக்குப் புகட்டவும்.

16. குருவிச்சிப் பூண்டின் வேரும் இலையும் கருவேலம் வேரும் இலையும் விடத்தேரி வேரும் இலையும் தகரை வேரும் இலையும் நரிப்பயிற்றின் வேரும் இலையும் இவைகளை நன்றாக நறுக்கி இடித்து வசம்பு வெள்ளைப் பூண்டு முதலியவை சேர்த்து அரைத்து விளக் கெண்ணெயில் கலந்து வெயிலில் வைத்து உள்ளுக்கு கொடுத்து தலை உச்சியிலும் தடவி வரவும்.

17. பனைமரத்தின் வடக்கே போகின்ற வேரை வெட்டி வந்து உள்ளியும் வசம்பும் சேர்த்துத் தண்ணீர் விட்டு அரைக்கவும் அதை வயிற்றில் பூச பொருமல் நிற்கும்.

18. வில்வ வேர் பாவட்டைவேர் முடக்கொற்றான் வேர் சிறுபுள்ளடி வேர் வசம்பு ஆமையோடு முதலியவைகளை சம எடை எடுத்து நன்றாக இடித்து ஒரு லிட்டர் தண்ணீர் விட்டு அரை லிட்டராக காய்ச்சி புகட்டவும்.

19. கொழுஞ்சி இலையை ஒரு தேங்காயளவு எடுத்து கறுக்கிக் கஷாயம் வைத்துக் கொடுக்கவும். நில்லாத கழிச்சல் நிற்கும்.

20. வெளங்காயம் திப்பிலி வாய் விளங்கம் ஓமம் மிளகு ஆமையோடு கழற்சிப் பருப்பு முதலியவைகளைச் சம அளவு எடுத்து

பொடுதலைச்சாற்றினால் நன்றாக அரைத்துச் சுண்டைக்காய் அளவு மாத்திரை செய்து உலர்த்திக் கொள்ளவும் இதைக் கண்டங்கத்திரிக் கஷாயத்தில் கொடுத்தால் இருமலும் காய்ச்சலும் இருந்தாலும் தீரும்.

21. வேளைவேர் வெந்தயம் வசம்பு வெள்ளைப்பூண்டு முதலியவைகளைச் சட்டியிலிட்டு வறுத்துத் தண்ணீர் விட்டு கஷாயம் செய்து சங்களவு வீதம் ஒரு நாளுக்கு மூன்று வேளை வீதம் கொடுக்கவும்.

22. இரச கற்பூரம் இருபது கிராம், இலவங்கம், ஏலம் சுட்ட வசம்பு, சீரகம், மாசிக்காய், அதிவிடயம், ஆகியவை வகைக்கு பத்துகிராம், நன்றாகப் பொடி செய்து கொண்டு மாசிப் பத்திரி வேர் சாறுவிட்டு மூன்று மணிநேரம் அரைக்க வேண்டும். பிறகு விஷ்ணுகிரந்திச் சார்விட்டு மூன்று மணி நேரம் அரைத்து கொத்தமல்லி விதை அளவில் குளிகை செய்து நிழலில் உலர்த்தி புட்டியில் அடைத்துக் கொள்ளவும். இதை துளசி அல்லது திப்பிலிக் கஷாயத்தில் கொடுத்தால் குணமாகும்.

23. இஞ்சி, சங்குஇலை, சின்னிஇலை, கரிசாலை, விஷ்ணு கரந்தை, வன்னிஇலை முதலியவற்றின் சாறும் சிற்றாமணக்கு எண்ணெயும் வகைக்கு முன்னூற்று முப்பத்தைந்து மில்லி லிட்டர் எடுத்து ஒரு மண் சட்டியில் ஊற்றி ஒரே மரவிறகால் காய்ச்சி மெழுகு பதத்தால் இறக்கிக் கொண்டு ஆறவைத்து உபயோகிக்கவும்.

24. அதிமதுரம், கோஷ்டம், ஏலம், சாத்திரபேதி சண்பகப்பூ மாசிக்காய் தோல், இலவங்கப்பூ ஆகிய ஏழு பொருள்களையும் வகைக்கு கால்பலம் எடுத்து பொடித்துக் கொள்ளவும் பிறகு கோரோசனம், வெட்டிவேர், மாசிப்பத்திரிவேர், விலா மிச்சவேர், கருந்துளசி முதலியவற்றை சேர்த்து ஆறு மணிநேரம் அரைத்துக் குன்றிமணி அளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும். வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் காலை மாலை மாசிபத்திரி கியாழத்தில் கொடுக்கவும்.

இந்த மாத்திரையையே இலவங்க கஷாயத்தில் கொடுத்தால் மாந்தசுரம், வாந்தி விலகும். முலைப்பாலில் கொடுத்தால் குடல் படுவன், நீர்ப்பாடு, கரப்பான், நாவறட்சி, வயிற்று எரிச்சல், இருமல் குணமாகும்.

25. வசம்பு, சீரகம், பூண்டு காயம் நாரத்தம்வேர் முதலியன வகைக்கு பத்துகிராம் எடுத்து தக்காளிச்சாற்றில் அரைத்து எட்டு மடங்கு நல்லெண்ணெயில் கலந்து காய்ச்சவும் ஒரு கரண்டி அளவு வீதம் மூன்று நாள் கொடுக்கவும்.

26. சிறுதேக்கு வாய்விளங்கம் வால்மிளகு ஏலம் கடுகு ரோகிணி சுக்கு திப்பிலி இலவங்கம் தான்றிக்காய் தக்கோலம் போஸ்துக்காய் சாகசாந்தோல் முதலியன வகைக்கு ஐந்து கிராம் எடுத்து இடித்து எண்ணூறு மில்லி தண்ணீரில் போட்டுக் காய்ச்சவும் நூறுமில்லி அளவாகச் சுண்டிய பின்னர் இறக்கி வடிகட்டிக் கொண்டு கொடுக்கவும்.

கிராணி மாந்தம் சுரக்கட்டி விஷதோஷம் சோகை காமாலை கோழைக்கட்டு, விம்மல், தும்மல், பித்தகணம், பாண்டு யாவும் விலகும்.

27. அவுரிவேர் செவ்வியம் வகைக்கு கைப்பிடி அளவு எடுத்து நான்கு பங்கு தண்ணீர் விட்டு ஒரு பங்காக வற்றுமாறு காய்ச்சவும். வேளைக்கு ஒரு பாலாடை வீதம் இரண்டு வேைள நான்கு நாள் மட்டும் கொடுத்தால் போதுமானது உப்பு மாந்தம் அள்ளு மாந்தம் முதலியன குணமாகும்.

28. ஏலம், கிராம்பு கோரைக்கிழங்கு அதிமதுரம் வெட்டிவேர் கடுகு சுக்கு கொடிமுந்திரிப்பழம் கோரோசனம் நன்னாரி வேர் நிலப்பனங்கிழங்கு தாளிசப்பத்திரி சடாமஞ்சில் சந்தனத்தூள் இலுப் பைப்பூ இவை வகைக்கு ஐந்து கிராம் வீதம் எடுத்துக் கல்வத்திலிட்டு இரண்டு செவ்விளநீர் விட்டு ஆறுமணி நேரம் அரைக்கவும்.

பிறகு முலைப்பால் விட்டு மேலும் ஆறுமணி நேரம் அரைத்து மிளகளவாக மாத்திரை உருட்டிப் பதினைந்து நாள் உலர்த்தி எடுத்து வைத்துக் கொள்ளவும்.

ஒரு மாத்திரையை காலையிலும் மாலையிலுமாக முலைப் பாலில் இழைத்துக் கொடுத்தால் நஞ்சுக்காய்ச்சல் நீங்கும் அம்மையார் கூந்தல் குடிநீரில் கொடுத்தால் பதிமூன்று சந்நிபாதங்களும் நச்சுத் தோஷம் ஆமச்சுரம் கணைச்சுரம் முதலியனவும் நீங்கும்.

கணம்

கர்ப்பச் சூட்டினால் இந்நோய் உண்டாவதால் கணச்சூடு என்பர். கணம், கணை என்றும் குறிப்பிடப்படும் மாந்தம் முழுதும் குணமாகாத நிலையில் விட்டு விட்டால் முற்றிப் போய் உண்டாவது கணம் ஆகும்.

கணைநோய் எலும்புடன் சேர்ந்த வியாதி, குழந்தையின் தலையில் உள்ள மென்மைக் குழிகள் மூடவேண்டிய காலத்தில் மூடிக் கொள்வதில்லை. கால் எலும்புகள் வளைந்திருக்கும் வயிறு பெறுத்து உடல் வளர்ச்சியின்றி பலவீனமாய் இருக்கும் தவறான வளர்ப்பாலும் செயற்கை முறையில் வளர்க்கப்பட்டதாலும் உண்டாவதாக உலக நிபுணர்கள் கருதுகின்றனர். எலும்பு வளர்க்கும் சத்துக்கள் கொடுத்தால் குணமாகி விடும்.

அதிகமாக கபத்தை வளர்க்கக்கூடிய உணவுகளை உண்பதினாலும் தாகமும் பசியும் அதிகமாக இருக்கும்போது குளிர்ந்த நீரைக் குடிப்பதனாலும் கண நோய்கள் குழந்தைகளுக்கு வருவதும் உண்டு.

பொதுவான அறிகுறிகள் :

உடம்பு எப்போதும் கத கதப்பாக இருக்கும் காய்ச்சல் உண்டாகும். கெட்டுப் போன பால் எப்படி திரிந்து போகின்றதோ அதுபோல குழந்தை கருப்பு நிறத்துடன் கழியும். வயிறு பொருமும் கைகால்கள் குச்சி போலாகும். சில சமயம் சீதமும் இரத்தமுமாய் மலம் போகும். தாகம் இருக்கும் கைகால்கள் குளிர்ந்திருக்கும் இருமல் இருக்கும். கண்களில் குழி விழும் மூக்கு நாக்கு முதலிய உறுப்புகளில் வேக்காடு உண்டாகும்.

உடம்பில் காய்ச்சல் அடிப்பது போன்ற கதகதப்பு இருக்கும். மார்புக்கூடு மேலே எழும்பும் உடல் மிக இளைக்கும் வாயில் நாற்றமடிக்கும் மலம் தீய்ந்து போகும்.

கணரோகம் இருபத்திநான்கு வகையாகக் கொள்ளப்படுகின்றன முக்கியமான சிலவற்றை கவனிக்கலாம்.

நீர்க்கணம் : கைகால் முகம் முதலிய இடங்களில் பளபளப்பு உண்டாகும் மயக்கம் உண்டாகும் பனி நீர் போன்ற பேதி அடிக்கடி

உண்டாகும். நாக்கில் புண் உண்டாகும் வாய் வரண்டு போகும் வேர்வையும் தொடை இடுக்குகளில் வெப்பமும் உண்டாகும் மூக்கிலிருந்து நீர் வடியும் தாகத்துடன் அதிகமான தலைவலி உண்டாகும்.

வறட்கணம் : உடம்பு இளைக்கும் எலும்புக் காய்ச்சலும் நாவரட்சியும் இருக்கும். தொண்டையில் புகைந்து இருமல் உண்டாகும். சிறுநீர் வெள்ளையாக இறங்கும் மயங்கி விழும். நாக்கு மஞ்சள் நிறமாகும் நாக்கில் முட்கள் உண்டாகும். வயிற்றுவலி உண்டாகும். முகம் மஞ்சள் நிறமாகும்.

எரிகணம் ; ஈரல்குலையில் எரிச்சல் உண்டாகும். அதனால் தாகமும் வாந்தியும் இருக்கும் புரண்டு புரண்டு வீறிட்டு அழும். முகத்தைக் கீழே போட்டு தலையை அசைக்கும் வாயால் மூச்சு விடும்.

சுழிகணம்; மேல் மூச்சு சுழித்து சுழித்து வாங்கும் பல விதமாகப் பேதியாகும் உடம்பு பலவீனமாகும். நரம்புகள் புடைக்கும் கோழை கோழையாக வாந்தி எடுக்கும் நாக்கு ஈரல் நெஞ்சு முதலிய இடங்களில் வேக்காளம் உண்டாகி தாய் பாலைச் சாப்பிடாது உடல் இளைக்கும். கண்கள் சொருகும் மூக்கு உப்பலாகும் காய்ச்சல் ஏற்படும்.

மூலகணம் : பற்பல நிறமாக மலம் கழிக்கும். அதனுடன் ரத்தமும் போகும். வாயு அதிகமாகி ஆசனத்தில் கடுப்பு வலி உண்டாகும். தாகமும் தலைவலியும் உண்டாகும் முகம் சூம்பிவிடும் தொடை வற்றிவிடும் உணவு சாப்பிட முடியாது கஷ்டப்படும் உடல் இளைக்க ஆரம்பிக்கும்.

முக்குகணம்; குழந்தை அடிக்கடி முக்கி முக்கி மலம் கழிக்கும். அப்போது குடல் வெளியே வரும் மலத்துடன் ரத்தமும் கலந்து வெளியாகும். நாக்கில் வேக்காள மிருக்கும் இடுப்பு தொடை முதலிய இடங்களில் வலி அதிகமாவதால் தலையை கீழே தொங்கப் போடும் வாயில் சிறு கொப்புளங்கள் தோன்றும் கைகால் முதலியன குளிர்ச்சியாக இருக்கும். உடம்பு இளைக்கும். வாந்தி, காய்ச்சல், தாகம் முதலியனவும் இருக்கும்.

விஷகணம் : கைகால் வீக்கத்துடன் நெற்றியிலும் வலி உண்டாகும். சாணியைப் போன்ற நிறத்துடனும், நாற்றத்துடனும் மலம் கழியும் குரல் கம்மிவிடும் தாய்ப்பால் குடிக்காது கண்கள் சிவந்து விடும் முகம் வெளுத்து விடும் நெஞ்சில் வலி விலாப்பக்கங்களில் கதகதப்பு காய்ச்சல் உண்டாகும்.

ஆமகணம் : வயிறு உப்பி சீதமும் ரத்தமுமாக வயிறு கழியும் கண் சொறுகும். அடிவயிற்றில் வலி இருக்கும். கழுத்து சிறிது இழுத்துக் கொள்ளும் மூக்கு நுனியில் வேக்காடு இருக்கும். திடீர் திடீரென்று பயந்து படுக்கையில் இருந்து எழும் கால் கைகளில் குளிர்ச்சி உண்டாகும் கண்களை எப்போதும் திறக்காமல் மூடி இருக்கும்.

மந்தாரகணம் : வயிறு உப்பி மலம் சிக்கலாகும் மூக்கிலிருந்து, நீர் வடியும் தாய்ப்பால் குடிக்காது திடீரென்று அலறும் உடம்பு இளைக்கும் வாந்தி எடுக்கும் குளிர் காய்ச்சல் மயக்கம் இருமல் மூச்சுத் திணறல் தலையில் வியர்வை முதலியனவும் இருக்கும்.

அந்தக கணம் : மாலை நேரங்களில் கண் தெரியாது அதிகமாக சுரம் அடிக்கும் மலத்தில் ரத்தம் போகும். கால்களில் அசதி உண்டாகும். மூச்சு பற்பல விதமான சப்தத்துடன் வெளிவரும் முகம் மஞ்சள் நிறமாகும் மார்புக் கூடு மேல் எழும்பும் மயக்கம் வாய் ருசி இல்லாமை உடல் இளைப்பு முதலியவைகள் உண்டாகி மூளையையும் பாதிக்கும்.

சுரக்கணம் : சுரம் அதிகமாக இருக்கும் வாய் பிதற்றும் தாகம் உண்டாகும் உடல் இளைக்கும் மலச்சிக்கல் உண்டாகும் கண்கள் சிறுநீர் முதலியவைகள் மஞ்சள் நிறமாகும். வயிற்று இரைச்சல், பொருமல், இருமல், முதலியனவும் இருக்கும்.

அக்கரக்கணம் : நாடி மிகவும் வேகமாக அடிக்கும் மூக்குவாய் முதலிய இடங்களில் ஆவி எழும்புவது போன்ற உணர்ச்சி உண்டாகும் முகம் வெளுக்கும் நாக்கு வெந்துபோகும் மூக்கிலிருந்து நீர் வடியும் தலைவலி உடலில் குளிர்ச்சி முதலி[illegible]ன உண்டாகும்.

குன்றியக்கர கணம்: சிறுநீர் மஞ்சள் நிறமாகும் இடுப்புக்கு மேல் பகுதிகளில் காய்ச்சல் அடிக்கும் ஈரல் குலையில் வேக்காளத்

துடன் புண்களும் உண்டாகும். இருமல் குரல் கம்மல் உடல் வெளுத்தல் இளைப்பு உணவில் வெறுப்பு முதலியனவும் உண்டாகும்.

ஊது கணம் : காது கண்கள் உடம்பு இவ்விடங்களில் வீக்க முண்டாகும். பின்னர் அது தானாகவே தணிந்து விடும் நாக்கில் புண்கள் உண்டாகும். கைகால் முதலிய உறுப்புகள் பலவீனமாகும். உடல் வெளுக்கும் ஆகாரத்தைத் தள்ளும்.

இரத்த கணம் : நாடி நடை பலவீனமாகும். பசி எடுக்காது ஆகாரத்தில் பிரியம் இருக்காது. மலத்தில் இரத்தம் கலந்து விழும் மனம் கவலையாக இருக்கும்.

மருந்துகள்

1. கடுக்காய் தோல் 17 பங்கு கருஞ்சீரகம் இரண்டு பங்கு வலம்புரிக்காய் மூன்று பங்கு சண்பகப்பூ ஜாதிக்காய் ஐந்து பங்கு கிராம்பு சீரகம் வகைக்கு இரண்டு பங்கு கார்போக அரிசி ஏலக்காய் வசம்பு நெல்லிமுள்ளி வகைக்கு ஒரு பங்கு கடுகு ரோகிணி கால்பங்கு முதலியன எடுத்து நசுக்கி கல்லுரலில் இடித்துப் பொடி செய்து கொள்ளவும். நான்கு மடங்கு விளக்கெண்ணெயைக் கலந்து ஐந்து நாட்கள் தினசரி வெய்யிலில் வைத்து வரவும் கடைசியில் வடிகட்டி எடுத்துக் கொண்டு ஒரு உள்ளங்கை அளவு வீதம் தினசரி ஒருவேளை சூட்டுக்கு கொடுத்து வரவும்.

2 ஆமணக்கு எண்ணெய் ஒரு லிட்டர் கற்றாழை மடல் பிழிந்த சாறு ஒரு லிட்டர் எலுமிச்சம் பழச்சாறு அரை லிட்டர் தானிக்காய் தோல் லவங்கப்பட்டை வெள்ளைப்பூண்டு சிறுநாகப்பூ சண்பகப் பூ முதலியன வகைக்கு பத்து கிராம் சாதிக்காய், கோஷ்டம், வசம்பு முதலியன வகைக்கு ஐந்து கிராம் குங்குமப்பூ கிராம்பு கோரோசனை சாதிபத்திரி அதிமதுரம் அதிவிடையம் வகைக்கு ஒரு கிராம் முதலிய எல்லாவற்றையும் சேர்த்து மெழுகு பதமாகக் காய்ச்சிக் கொள்ளவும்.

தினந்தோறும் காலை மாலை வெறும் வயிற்றில் இரண்டு வேளை ஒரு கரண்டியளவு கொடுத்துவரவும் வாயு பதார்த்தங்களை நீக்கி உண்ணவும். கைகால் எரிவு உஷ்ணம் தீரும் உடல் இளைத்த குழந்தை பெருக்கும்.

3 இண்டு இலைச்சாறு முலைப்பால் வெங்காயச் சாறு ஆமணக்கெண்ணெய் முதலியவைகளைச் சமமாக எடுத்துக் காய்ச்சிப் பக்குவத்தில் வடித்துக் கொள்ளவும்.

4 மெருகன்கிழங்கு இம்பூறல் வேர் திப்பிலி தேவதாரு வகைக்கு பத்து கிராம் வீதம் எடுத்து அரைலிட்டர் தண்ணீர் விட்டு அரைத்து முலைப்பால் கால் லிட்டர் ஆமணக்கெண்ணெய் அரை லிட்டர் சேர்த்து பக்குவமாகக் காய்ச்சி கொடுக்கவும்.

5 தகரை வேர் பொன்னங்கண்ணி வேர் நரிப்பயிறு வேர் வட்டக்கிலுகிலுப்பை வேர் வல்லாரை வெங்காயம் விலாமிச்ச வேர் சாதிக்காய் சாதிப்பத்திரி பேரிச்சம்பழம் கொத்தமல்லி விதை சீரகம் சிறுநாகப்பூ பெருநாகப்பூ கோஷ்டம் அதிமதுரம் அக்கிரகாரம் கற்கண்டு ஏலக்காய் திராட்சைப்பழம் குராசானி ஓமம் முதலியவை களை வகைக்கு ஐந்து கிராம் வீதம் எடுத்து நன்றாக இடித்து விளக்கெண்ணெய் நான்கு லிட்டர் விட்டு நன்றாகக் குழப்பி வெயிலில் வைக்கவும்.

இந்த எண்ணெயை தினசரி உள்ளுக்கு கொடுத்து வந்தால் இரத்தகணம் ஆமக்கணம் அஸ்திசுரம் வறட்கணம் முதலிய கணரோகங்கள் தீரும்.

6 ஏலக்காய் கோஷ்டம் மாசிபச்சை இலாமிச்சைவேர் சண்பகப்பூ சாதிப்பத்திரி அதிமதுரம் கோரோசனை முதலியன ஒரு பங்கு வீதம் சேர்த்து சூரணம் செய்து கொள்ளவும் நிலவேம்பு வேரை இடித்து எடுத்த சாற்றுடன் நன்றாக அரைத்து கடலை அளவு உருண்டை களாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

இதை முலைப்பாலில் அரைத்துக் கொடுத்தால் உடனே வயிற்றுக் கடுப்பு கணச்சூடு தீரும் (பெரியவர்களும் இதைச் சாப்பிட்டால் காய்ச்சல் நீங்கும்) தினசரி இரண்டு வேளை ஒரு உருண்டை வீதம் உபயோகப் படுத்தவும்.

7 ஆவரங்கொழுந்து வசம்பு வெள்ளைப்பூண்டு சிறிதளவு வீதம் எடுத்துக்கொண்டு நன்றாக அரைத்து குழந்தையின் உடம்பின் மேல் துவளை இடவும். ஏழு நாட்கள் மட்டும் செய்துவந்தால் முக்கு கணம் முற்றிலும் நீங்கி விடும்.

8 முருங்கைக் கொழுந்து கழற்கொடிக் கொழுந்து வரட்பூலா கொழுந்து, வெள்ளைச் சாரணைக் கொழுந்து மூக்கரட்டைக் கொழுந்து முதலியவைகளை சூரிய உதய நேரத்தில் பறித்து வந்து அரைக்கவும் மிளகு வசம்புப்பொடி செய்து கூட்டி நல்லெண்ணெயில் கலந்து வெயிலில் வைக்கவும்.

உள்ளங்கை அளவு நாலு நாள் மட்டும் ஒரு வேளை உண்ணக் கொடுக்கவும்.

9 முன்னை இலை ஒரு குத்து அளவு எடுத்து விளக் கெண்ணெயில் போட்டு பக்குவமாக காய்ச்சி இறக்கவும். ஒரு உள்ளங்கை அளவு எண்ணெய் எடுத்துக் கொடுக்க சுழி கணம் தீரும்.

10. கோரோசனை கிராம்பு இழைத்த சுக்கு இவைகளை கொம்பு பாகல் இலைச் சாறுவிட்டு நன்றாக அரைத்துக் கொள்ளவும் ஒரு நாளைக்கு மூன்று முறை கொடுக்க சுழிகணம் தீரும் ஒரே நாள் போதுமானது.

11 மாசிக்காய் சீரகம் அதிமதுரம் கிராம்பு வெங்காயம் முதலியன வகைக்கு ஒரு பங்கு கோழி ஆவாரை வேர் ஐந்து பங்கு வீதம் எடுத்து சிறுசிறு துண்டுகளாக்கி நான்கு மடங்கு ஆமணக் கெண்ணெய் சேர்த்து காய்ச்சி வடிக்கவும். இந்த எண்ணெயை தினந்தோறும் கொடுத்து வரப் பதினெட்டு வித கணமும் தீரும்.

12 மணித்தக்காளிச்சாறு வேலிப் பருத்திச்சாறு குப்பை மேனிச்சாறு ஆகிய சாறு வகைக்கு இரண்டு லிட்டர்

பசுவின் நெய் ஆமணக்கு எண்ணெய் நல்லெண்ணெய் வகைக்கு அரைலிட்டர்

எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து காய்ச்சி பக்குவமாக எரித்து வடிகட்டவும். தினந்தோறும் கொடுத்து வரக் கணச்சூடு தீரும்.

13 சாணக்கி இலை ஒருபிடி ஒரு வெள்ளைப்பூண்டு வசம்பு சிறிதளவு எடுத்து வதக்கிச் சாறு பிழியவும். அதில் ஒரு சங்களவு உள்ளுக்கு கொடுத்து சிறிதளவு உடம்பின் மேலும் தடவவும் தினம் இரண்டு வேளை வீதம் ஆறு வேளை (மூன்று நாட்கள்) மட்டும்

கொடுத்தால் முழுக்குணம் உண்டாகும்.

14 வெள்ளை வெங்காயம் பெருவாகைப் பட்டை வசம்பு துளசி இலை முதலியவைகளை இடித்துப் பிழிந்து குழந்தைக்கு கொடுக்கவும். அதையே உடம்பிலும் பூசவும்.

15 வெள்ளை வெங்காயத்தை நன்றாக நறுக்கி முலைப்பால் விட்டு இடித்துப் பிழிந்து சாறு எடுக்கவும் அந்தசாற்றின் அளவு விளக்கெண்ணெய் விட்டு வெள்ளைப் பூண்டு வசம்பு வெங்காயம் முதலியவைகளை பொடித் துண்டுகளாக நறுக்கிப் போட்டுக் காய்ச்சவும். பக்குவத்தில் இறக்கி வடிகட்டி உள்ளுக்கு கொடுக்கவும். மேலே தடவவும் செய்யலாம்.

16 ஒரு பலம் சீரகத்தை மலரப் பொரித்து ஒருபலம் இண்டந் தண்டை நறுக்கி கால் படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாகக் காய்ச்சி வேளைக்கு ஒரு சங்கு அளவு மாலையில் கொடுக்கவும். ஒரே வேளை போதுமானது முக்கு கணம் தீரும்.

17 இண்டன் வேர்ச்சாறு இண்டந்தண்டுச்சாறு வகைக்கு ஒரு படி குமிழம் மாசிப்பத்திரி புங்கு நிலத்துளசி உள்ளி முடக்கொற்றான் தூதுவளை நுணா வல்லாரை கஞ்சாங்கோரை இவற்றின் சாறு வகைக்கு கால்படி சிற்றாமணக்கெண்ணெய் ஒருபடி சாதிக்காய் வசம்பு கிராம்பு கடுகுரோகிணி கடுக்காய்த் தோல் வால்மிளகு ஓமம், சுக்கு, முதலியன வகைக்கு ஒரு பலம் வறுத்து இடித்து சாறு எண்ணெய்களில் கலந்து காய்ச்சி கடுகு போல் திரண்டு வரும் பக்குவத்தில் இறக்க வேண்டும்.

காலையில் ஒருவேளை ஒரு கரண்டி வீதம் ஐந்து நாட்கள் கொடுக்கவும். மாலையில் நிலத்துளசியைப் பிட்டவித்து பிழிந்து வடிகட்டிய தண்ணீர் இரண்டு கரண்டு கொடுக்க ஆமகணம் வலிமாந்த கணம் முதலியவை நீங்கும்.

18 ஏலம் மாசிக்காய் திப்பிலி கோரோசனை கோஷ்டம் மாஞ்சில் சீரகம் தானிக்காய் முதலியவைகளை வகைக்கு கால் பலம் எடுத்து தாய்ப்பாலில் ஆறுமணி நேரம் அரைத்து கொடுக்க மாந்த கணம் விலகும்.

19 வில்வம் விலாமிச்சை விஷ்ணுகிரந்தி கோரை ஓரிதழ் தாமரை முதலியவற்றின் வேர்.

முருங்கை விதை துளசி விதை கோங்கம்பிசின் ஆவாரம் பிசின் கோஷ்டம் அதிமதுரம் அக்கரகாரம் தாளிசபத்திரி முதலியவை களை வகைக்கு நான்கு பலம் வீதம் இடித்துக் கொள்ளவும்.

கற்றாழைச் சாறு தாய்ப்பால் முதலிய வகைக்கு கால்படி எலுமிச்சம் பழச்சாறு அரைக்கால் படி எண்ணெய் ஒருபடி ஆகிய எல்லாவற்றையும் ஒன்றாகக் காய்ச்சி கடுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும். இந்த எண்ணெயை ஒரு காசெடை (குன்றி மணி அளவு எடை) வீதம் காலையில் மட்டும் மூன்று நாள் கொடுக்கவும்.

20 சிற்றாமணக்கு எண்ணெய் கால்படி துளசி நிலத் துளசி கஞ்சாங்கோரை மாசிப்பத்திரி வில்வம் முதலியவற்றின் சாறுவகைக்கு ஆழாக்கு இவற்றில் சுக்கு அரிசித் திப்பிலி மிளகு இவை வகைக்கு இரண்டு வராகனெடை எடுத்துத் தூள் செய்து காற்றில் கலந்து ஆழாக்குத் தேன் விட்டுக் காய்ச்சிக் கடுகு திரளும் பக்குவத்தில் எடுத்து வடிக்கவும்.

காசெடை காலை ஒரு வேளை கொடுக்க சூலி கணம் தீரும். ஓராண்டுக்கு உட்பட்ட குழந்தைக்கு ஐந்து நாள் மேற்பட்ட குழந்தைக்கு நாற்பது நாள் கொடுக்கவும். இச்சா பத்தியமாக இருக்க வேண்டும்.

21 அதிவிடயம் கடுக்காய்த் தோல் சுக்கு பறங்கிச் சக்கை கசகசா விலாமிச்சவேர் சந்தனத்தூள் சாதிப்பத்திரி நெல்லிவற்றல் சிற்றாமுட்டி செம்பருத்தி வில்வவேர் ஆகிய பன்னிரண்டு பொருட் களையும் வகைக்குஒரு பலம் எடுத்து வறுத்து இடித்துப் பொடியாக்கி ஐந்து பலம் பசு நெய்யை சட்டியிலிட்டு அடுப்பேற்றி கொதிக்கும்போது மேற்படி தூளையும் இரண்டு பலம் கற்கண்டையும் ஒரு பலம் சீரகத் தூளையும் சேர்த்து காய்ச்சி பக்குவத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும் இதில் தினந்தோறும் காலை மாலை ஆகிய இரு வேளையும் பாக்களவு வீதம் ஏழு நாள் சாப்பிட்டால் மூலகணம் தீரும்.

அச்சரம்

நாக்கு மற்றும் அத்துடன் இணைப்புள்ள உறுப்புகளில் உண்டாகின்ற குழந்தை நோய்களில் ஒருவகை அச்சரம் என்றும் சொல்வதுண்டு.

நாக்கில் வேக்காடு நாக்கு குளிர்ந்து போதல் சொள்ளு நீர் வாயிலிருந்து அதிகமாக வழிந்து கொண்டிருத்தல் நாக்கு வெளுத்துத் தெரிதல் தலைவலித்தல் இலேசான காரத்தைக் கூட தாங்க முடியாமல் எரித்தல் முதலியன இந்நோயின் பொது அடையாளமாகும்.

இதன் பிரிவுகள் :

1. சூலியச்சரம்
2. நிதியச்சரம்
3. சோதியச்சரம்
4. வீழிஅச்சரம்
5. குண்டியச்சரம்
6. கபாலியச்சரம்
7. குமரியச்சரம்
8. உள்அச்சரம்
9. நாமுள்
10. நாநாற்றம்

பெரும்பாலும் இந்நோய் உஷ்ணத்தாலேயே உண்டாகிறது மூலத்தில் கிளம்பும் ஆவியின் சூடானது நாக்கிற்கு ஏறி நாக்கில் வேக்காட்டை உண்டாக்கும்.

சூலியச்சரம்; நாக்கு வேக்காடும் சூலத்தால் குத்துவது போல் குத்தலை உண்டாக்கும் நாக்கு வெந்து மாவுபோல் வெளுத்து அடையாகப் பற்றிக் கொள்ளும் வழுவழுப்பான வெள்ளையான தண்ணீர் சுரக்கும் உவர் மண்ணின் நாற்றம் போல ஒரு வகையான நாற்றம் வெளியே வீசும் அதிக தாகம் உண்டாகும். வாந்தியுண்டாகும். கைகள் உடம்பு முதலியவைகள் கருத்து விடும் இடுப்புக் கடுப்புடன் காய்ச்சலும் இருக்கும்.

நிதியச்சரம் : நாக்கின் நடுப்பகுதியில் வேக்காட்டால் சிவந்து அதற்கு மேல் வெள்ளையாக மரப்பசை படர்ந்திருக்கும் நாக்கு ஈரப்பசை இல்லாமல் உலர்ந்திருக்கும். நெஞ்சும் எரியும் வாய் கசக்கும் தலைவலியுடன் சுரம் காயும்.

சோதியச்சரம்; விளக்கைப் போல் நாக்கு எரிச்சல் உண்டாகும். நோயின் வேதனையால் உடம்பு துடிதுடிக்கும். தலை இடியோடு

வலிக்கும் கால் கணுக்கால் முதலியன வலிக்கும் வயிறு கழியும் வாந்தியாகும் வயிற்றின் உள்ளேயும் வெளியேயும் எரிச்சல் உண்டாகும் காய்ச்சல் அடிக்கும்.

வீழி அச்சரம்; நாக்கு தடிக்கும். நாக்கு நல்ல சிவப்பு நிறமாகச் சிவந்து விடும் உடல் கறுத்து விடும் நெஞ்சடைக்கும் ஈரல் வெந்து நோகும் அதிக தாகம் உண்டாகும் தலை அதிகமாக நோகும்.

குண்டியச்சரம், ஈரல் வெந்து நாக்கு கொதிப்படைந்து மிகவும் சிகப்பாக மாறிவிடும். விலாவின் ஒரு பக்கம் நோவுண்டாகும். வாய்க்கூச்சம் இருமல் வயிற்றுக் கழிச்சல் தாகம் நெஞ்சு கரித்து ஒக்களித்தல் முதலியன உண்டாகும்.

பொதுவாக இடுப்புக்கு மேல் காய்ச்சல் அடிக்கும் உடம்பு (மீன் உடல் போல) வெள்ளை நிறமாகும் சிறுநீர் மஞ்சளாக இறங்கும்.

கபாலியச்சரம்; குடலும் ஈரலும் வெந்து வலிக்கும் தொண்டையில் சோறு பொங்குவது போல் பொங்கும் அதிகமாக நாக்கு வெந்து அதிலிருந்து ரத்தம் வடியும் உடல்வலி தலைநோவு நெஞ்சலி விடாச்சுரம் முதலியனவும் இருக்கும்.

குமரியச்சரம்; எதையும் உண்ண முடியாமலும் குடிக்க முடியாமலும் நாக்கு கூசும் உடலில் சதை நோகும் கண்கள் வலிக்கும் வாய் கசப்பதுடன் அடிக்கடி வாந்தியாகும். உள் நாக்கு வளரும் பல் மஞ்சள் நிறமாகும். மூக்கின் வழியாக மூன்று நாள் வரை சிகப்பான நீர் வடியும்.

உள் அச்சரம்; உந்தி என்னும் தொப்புள் பகுதியில் (உட்பக்கம்) வெந்து புண்ணாகி அதனுடைய ஆவி மேலுக்கு கிளம்பி தலையில் முட்டி மூக்கின் வழியாக நீராக ஒழுகும். அந்த நீர் முகம் முதலிய மேல் பகுதிகளில் கோத்துக் கொள்வதால் ரத்தம் கெட்டு சிகப்பாகவோ பழுப்பாகவோ வீங்கும். நாக்கு வெளுத்து சாம்பல் பூத்திருக்கும். தூக்கம் உண்டாகும். காய்ச்சல் அடிக்கும். தாகமும் உண்டாகும்.

நாமுள்; இருமல் மேல் மூச்சு கண்களில் நீர் வடிதல் தலைவலி காய்ச்சல் இரண்டு விலாக்களில் நோதல் முதலியன உண்டாகும்.

இத்துடன் வாய் நாக்கு தொண்டை முதலிய இடங்களில் முட்கள் போல் உண்டாகும் வாய் பேச முடியாமல் தலை நடுங்கும். வாந்தி மஞ்சள் நிறமான பேதி முதலியனவும் உண்டாகும்.

நாநாற்றம்; நாக்கு புண்ணாகி நாற்றம் வீசுதல் பால் குடிக்க முடியாமல் சங்கடப் படுதல் தொண்டைக்குழி (மிடறு) நோகுதல் மலம் தீய்ந்து போய் கறுப்பாக இருத்தல் முதலியன உண்டாகும்.

எல்லா அச்சரங்களுக்கும் பொது மருந்து:-

கருஞ்சீரகம், கடுகு ரோகிணி, கடுக்காய்த் தோல், காட்டு மல்லிகை வேர் முதலியன வகைக்கு நான்கு கிராம் வீதம் எடுத்து தூளாக்கவும்.

எழுபது கிராம் சிற்றாமணக்கெண்ணெய், முப்பத்தைந்து மில்லி லிட்டர் தாய்ப்பால் கலந்து கொண்டு முன் செய்துள்ள பொடியையும் சேர்த்துக் காய்ச்சவும். இறக்கியவுடன் எட்டு கிராம் கோரோசனைப் பொடியைத் தூவி புட்டியில் பத்திரப் படுத்தவும்.

காலையில் மட்டும் (தினம் ஒரு வேளை) கரண்டியளவு ஆறு நாள் மட்டும் சாப்பிட்டால் போதும் எல்லா வேக்காடும் சுரமும் நீங்கிவிடும்.

நாக்கு நாற்றத்திற்கு:- பழம்பாசி, வல்லாரை இலை வெங்காயம் ஆகிய மூன்றையும் சமமாக எடுத்து இடித்து சாறு பிழியவும். அந்தச் சாற்றின் அளவிற்கு சம அளவு வெள்ளாட்டுப் பால் சேர்க்கவும். ஒரு கிராம் சீரகப் பொடியை அதில் கலக்கவும்.

காலை மாலை இரண்டு வேளை வீதம் மூன்று நாட்கள் கொடுத்து வந்தால் குணமாகி விடும்.

குண்டியச்சரத்திற்கு:- 1) சுண்டைக்காய்ச் செடியின் வேர்த்தோலை சிறு எலுமிச்சங்காய் அளவு அரைத்துக் கொண்டு பசுவெண்ணெய் சேர்த்துக் கூட்டி மூன்று அல்லது ஐந்து வேளை உண்டால் குணமாகும்.

2) கரிசிலாங்கண்ணி இலை கொட்டைப் பாக்களவு அரைத்து முப்பத்தைந்து மி.லி பசும்பால் சேர்த்து காலை மாலை மூன்று நாட்கள் கொடுத்து வந்தால் குணமாகும்.

பத்தியம் : பச்சரிசிச் சோறு பசும்பால் சேர்த்து சாப்பிட வேண்டும். வேறு ஆகாரம் கூடாது.

உள் அச்சரத்திற்கு : - நான்கு கிராம் அதிமதுரம், நான்கு கிராம் மணிபுங்கன் பழம் இரண்டையும் தாய்ப்பால் விட்டு அரைத்துக் கொள்ளவும்.

முன்னூற்றி ஐம்பது மில்லி லிட்டர் தாய்ப்பால், அதே அளவு பசு நெய் சேர்த்து முன் அரைத்ததையும் கலந்து அடுப்பேற்றிக் காய்ச்சவும்.

காலை மாலை இரண்டு வேளை வீதம் ஆறு நாட்கள் கொடுத்தால் உள் காய்ச்சல் கணைக்காய்ச்சல் தீரும் ஒரு வேளைக் கான அளவு நான்கு கிராம்.

வலிப்பு

இழுப்பு, இசிவு, இசிப்பு என்ற வேறு பெயர்களும் இதற்கு உண்டு.

குழந்தைப் பருவமாகிய பதினெட்டு ஆண்டுகளுக்குள் இந்நோய் உண்டாகலாம் தாயார் உண்ணும் உணவு வேற்றுமையாலும் செயல்பாடுகளினாலும் உடல் சூட்டினாலும் இந்நோய் உண்டாகும். மூளைக்காய்ச்சல், மலேரியா தலையில் காயம் விஷப்புகை, விஷப் பொருட்களின் உபயோகம் முதலான காரணங்களாலும் வலிப்பு உண்டாகலாம்.

சிலேத்துமம் என்னும் கபம் உடலில் சேருவதால் மார்பு மூச்சுக்குழல் அடைபட்டு விடுகிறது. அதனால் தொடு உணர்ச்சி, ருசி உணர்ச்சி, கேட்கும் உணர்ச்சி, முகரும் உணர்ச்சி முதலியன யாவும் மங்கும்போது இந்நோய் உண்டாகின்றது. வலிப்பு நின்றவுடன் உணர்ச்சிகள் செயல்படுகின்றன.

இந்த வலிப்பு நோய் பதினெட்டு வகையான பிரிவுகள் உள்ளதாகச் சொல்லப்படுகின்றது. முக்கியமானதும் எல்லோருக்கும் வருவதாக உள்ளது நான்கு மட்டுமே. மாந்த வலிப்பு, அள்ளு வலிப்பு, காக்கை வலிப்பு, புறவலிப்பு.

மாந்த வலிப்பு அடையாளம் : வயிறு பல நிறமாக இருக்கும் பல நிறமாக பேதியாகும். மார்பில் வலி எடுக்கும். வாய் திறக்க முடியாதபடி பல்கிட்டிக் கொள்ளும். நற நறவென்று பல்லைக் கடிப்பதோடு கை கால்கள் முறுக்கி வலிக்கும் பல் திறக்க முடியாது உணவோ நீரோ வாயில் உள்ளே செல்லாது.

காக்கை வலிப்பு அறிகுறி : இந்த வலிப்பு உண்டாகினால் நினைவு சற்று நேரத்திற்கு தப்பிப் போய் விடுகிறது. தரையில் குழந்தை விழுந்து விடும். தசைகள் சுருங்கி விடும். நாக்கை கடித்துக் கொள்ளும். கண்கள் இரண்டும் உள்ளே சொருகிக் கொள்வதும் உண்டு. இவ்வளவு நடந்தாலும் சில நிமிட நேரத்திற்குள் சுய நினைவு வந்து விடும். எழுந்து விடுவான். சிலமணி நேரம் தூங்குவான். சரியாகி நல்ல நிலைமை உண்டாகிவிடும்.

வாயில் இருந்து நுரை நுரையாக சளி வெளியாகும் கண்பார்வை தெளிவாகத் தெரியாது. கைகளும், கால்களும் முன்னும் பின்னுமாக வலித்துக் கொள்ளும் யார் பிடித்தாலும் தரையில் விழுந்து உடல்வலிப்பு எடுக்கும் சிறிது நேரம் சென்றபின் தானாக நின்றுவிடும்.

ஆயிரத்தில் ஒருவனுக்குத்தான் பலமணி நேரம் வலிப்பு உணர்வு இருக்கும். சாதாரணமாக வலிப்பு வரப்போகின்ற அறிகுறி குழந்தைக்கு தெரிந்துவிடும். அப்போதே அமைதியாக தூங்கி விட்டால் இசிவு தடுக்கப்பட்டு விடும்.

திடீரென வலிப்பு வந்து விட்டால் டாக்டரிடம் போக முடியாத போது நோயாளியைக் கீழே படுக்க வைக்க வேண்டும் போர்வையால் போர்த்த வேண்டும். மரக்கட்டை ஒன்றை எடுத்து வந்து நாக்கு கடிபடாமல் இருப்பதற்காக பற்களுக்கு இடையில் கொடுத்து விட வேண்டும். உடல் தாங்கக்கூடிய அளவான சூட்டில் உள்ள வெந்நீரில் குளிப்பாட்டலாம் அல்லது துணியில் நனைத்து துடைத்து விடலாம் வலிப்பு நின்றதும் படுத்துத் தூங்கச் செய்ய வேண்டும்.

அள்ளு வலிப்பு அறிகுறி - உடலின் இரண்டு பக்க விலாக்களிலும் சளி சேர்ந்து அதனால் அடிக்கடி மூச்சு வாங்கும் மூச்சுத் திணறல் எடுத்த உடனே வலிப்பு வந்து சங்கட முண்டாகும்.

புற இசிவு:- பற்பல காரணங்களால் தலையில் கபம் சேர்ந்து சிறிது சிறிதாக உறைந்து விடும் அத்துடன் வாய்வும் சேர்ந்து விடுவதுண்டு. அதனால் தலையையும் முகத்தையும் பின்பக்கமாக இழுத்து திடீர் திடீரென்று கழுத்தை வலித்து இழுக்கும் கழுத்து முகம் தலை முதலியவற்றில் அதிக வியர்வை உண்டாகும்.

பத்தியம் : - இந்நோய் வந்த குழந்தைக்கு புளி, கருவாடு, மீன், மாமிசம், கரப்பான் பதார்த்தங்கள் நீக்க வேண்டும்.

மாந்த வலிப்புக்கு புகை : - குதிரைக் குளம்புச் சீவல் மயிலிறகு, மிளகு, வசம்பு, சுக்கு, கடுகு, பேயத்திவேர்ப்பட்டை, அழிஞ்சல் பட்டை, கறுப்புக்கம்பளம், செம்மறியாட்டுக் கொம்புச் சீவல் முதலிய பத்தையும் வகைக்கு முப்பத்தைந்து கிராம் வீதம் எடுத்து பொடியாக்கிக் கொள்ளவும். முன்னூற்று ஐம்பது கிராம் வேப்பெண்ணெயில் அந்தப் பொடியை கலந்து கொள்ளவும். அதில் சிறிதளவு எடுத்து நெருப்பி லிட்டால் புகை கிளம்பும் இந்தப் புகையை குழந்தைக்குப் படும் படியாகக் காட்டினால் மாந்த வலி தீர்ந்து விடும்.

காக்கை வலிப்புக்கு எண்ணெய் : காக்கைப் பிச்சி (மலம்) காக்கை கொழுப்பு காக்கை முட்டைக்கரு, வசம்பு, திப்பிலிக்கட்டை, கொழுஞ்சி, தழுதாழை, நிலவேம்பு, மிளகரணை ஆகியவைகளின் பொடி வகைக்கு நான்கு கிராம் வீதம் எடுத்துக் கொள்ளவும். அதை முன்னூற்றி ஐம்பது கிராம் விளக்கெண்ணெய் போட்டு கொதிக்க வைக்க வேண்டும்.

வறுத்த ஓமம், வெண்காரம், வெள்ளை வெங்காயம் முதலியன வகைக்கு நான்கு கிராம் எடுத்து எண்ணெயில் போட்டு காய்ச்ச வேண்டும்.

இந்த எண்ணெயை காக்கை வலி வந்தபோது (வந்து நின்ற பிறகு) ஒரு கரண்டி வீதம் கொடுக்கவும். இப்படி ஆறு தடவைகள் கொடுத்தால் காக்கை வலி தீரும்.

மாந்தத்திற்கும் காக்கைக்கும் நீர் :- கொடி வேலி வேர்ப்பட்டை, சங்கம்வேர்ப்பட்டை, எருக்கன்வேர்ப்பட்டை, ஆகிய மூன்றையும் வகைக்கு நான்கு கிராம் வீதம் எடுத்துப் பொடியாக்கி வெந்நீர் விட்டு அரைக்கவும். அதைக் கலக்கித் தெளிய வைக்கவும். நன்றாக

தெளிந்த பிறகு மேலேயுள்ள தெளிநீரை மட்டும் வடித்து எடுத்துக் கொள்ளவும்.

அந்த நீரில் நான்கு கிராம் குங்குமப்பூவை அரைத்து சேர்த்து குழந்தைக்கு கொடுத்தால் மாந்த வலிப்பு காக்கை வலி முதலியன தீரும்.

அள்ளு வலிப்புக்கு மாத்திரை : சாதிக்காய், கிராம்பு, ஓமம், கருஞ்சீரகம், சுக்கு, திப்பிலி, கஸ்தூரி மஞ்சள், வசம்பு, பெருங்காயம் முதலிய எட்டு சரக்குகளும் வகைக்கு நான்கு கிராம் வீதமும் வெள்ளை காக்கணம் வேர்ப்பட்டை முப்பத்தி ஆறு கிராம் சேர்த்து வெந்நீர் விட்டு அரைக்கவும். மெழுகு பதமாக வந்தவுடன் சுண்டைக் காய் அளவு மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

காலையில் மட்டும் ஒரு மாத்திரையை எடுத்து தண்ணீரில் அல்லது தாய்ப்பாலில் உரசிக் கொடுக்கவும். இப்படி ஏழு நாட்கள் கொடுத்து வந்தால் சளி, இருமல், கக்குதல், அள்ளுவலி விஷ சுரங்கள் மந்தம் வயிற்றுப் பொருமல் இரைச்சல் முதலியன நீங்கும் (பேதி அதிமாகி விட்டால் வசம்பைச் சுட்டு தேனில் குழைத்துக் கொடுக்கவும்).

புற இசிவுக்கு சுரசம்;- தும்பை இலை, துளசி இலை, இஞ்சி இலை முதலியவைகளை வகைக்கு நான்கு கிராம் வெள்ளைப் பூண்டு (தோலுரித்தது) இருபத்தி நான்கு கிராம் எடுத்து எல்லாவற்றையும் நன்றாக அரைத்து சிற்றாமணக்கு இலையில் வைத்துச் சுருட்டவும் அதை நெருப்பில் வாட்டிக் கொண்டு சாறு பிழியவும்.

அந்தச் சாறு நான்கு கிராம் வீதம் கொடுத்து வந்தால் புற இசிவு நீங்கும்.

ஈரல் நோய்கள்

சோகை; குழந்தைக்கு பித்த நீர் அதிகமாகி உடல் ஊதும் கண்கள் வெளுக்கும் இரண்டு வயதாகும் போது உடம்பு இளைத்து வரண்டு போகும் உடல் ஊதவும் செய்யும் வயிறுகுடம் போல் பெருகும் கை கால் வற்றும் தயிர் போல அடிக்கடி பேதியாகும். மிகவும் துன்பமும் அசதியும் உண்டாக்கும் சிறு பயிறு போல் புண்கள் உண்டாகும்.

ஊது காமாலை; முகம், கால் முதலியன ஊதிக்கொள்ளும் நடு இரவில் நல்லபசி எடுக்கும் சாப்பிட்டாலும் மந்த முண்டாகும் கொஞ்சம், கொஞ்சமாக சீதமாகக் கழியும் மயக்கம் உண்டாகும் காது, உடம்பு, கண் இவ்விடங்களில் வீங்கி வீங்கி வற்றும் நாக்கு புண்ணாகும் சுரம் காயும் உணவில் வெறுப்புண்டாக்கும்.

மஞ்சள் காமாலை; கண், சிறுநீர், நாக்கு முதலியன மஞ்சள் நிறமாகும். சுரம் அடிக்கும், மூக்கில் நீர் வடியும் வயிறு வலிக்கும் மயக்கமும் வாந்தியும் உண்டாகும். (குண்டி அச்சுர நோய் இருந்தாலும் அந்த அடையாளம் இருக்கும் அதில் ரத்தம் வற்றி விடும்).

சிலருக்கு மஞ்சளுக்குப் பதிலாக பச்சை நிறம் ஏற்படுவதும் உண்டு.

வயிற்றில் உள்ள கல்லீரல் மண்ணீரல் பகுதிகளில் உண்டாகின்ற இந்த நோய்கள் மற்ற நோய்க் கூட்டத்துடன் சேர்ந்து உண்டாவதுண்டு. பெரியவர்களுக்கு உண்டாகின்ற ஈரல் நோய்கள் அவர்களது நடத்தையும் உணவு முறை ஆகியவைகளின் காரணமாக உண்டாகின்றன.

ஆனால் குழந்தைகளுக்கு அதிலும் சரியாக உணவு உட்கொள்ளாத பருவத்தில் இந்த நோய்கள் உண்டாகாது. பெருமளவு பெற்றோர்களே காரணமாகும். மசக்கையான நேரத்தில் தாய் அதிக மாக சாம்பல் சுண்ணாம்பு போன்றவைகளை உண்பதால் சோகை உண்டாகின்றது. அகால நேரங்களிலும் பட்டினி இருக்கும் போதும் பசி உள்ளபோதும் நாவரட்சி அதிகம் உள்ளபோதும் நோய்வாய்ப் பட்டிருக்கும்போது உடல் உறவு கொள்வதால் அப்போது உருவாகின்ற கருவில் பிறந்த குழந்தைகளுக்கு இந்நோய் வரும் தவிர தாயின் கருப்பையில் உண்டாகும் அண்டம் சரியான வளர்ச்சி பெறாமலோ அல்லது பலவீனமானதாகவோ இருந்தாலும் இந்த நோய் உண்டாகும். இந்த நோய்களை சரிவர கவனிக்காமல் விட்டால் ஈரல் குலைக்கட்டி நோய் வில்வாதம் முதலிய கஷ்டமான நோய்கள் உண்டாகிவிடும்.

கஷாய மருந்துகள்; 1) கரிசாலைக் கஷாயம் கரிசிலாங் கண்ணி என்ற கையாந்தகரை நீர்முள்ளி நாயுருவி வேர், சுக்கு, மிளகு, சீரகம் ஆகிய ஆறு பொருட்களை வகைக்கு ஒன்பது கிராம்

வீதம் எடுத்துத் தூளாக்கி அறுநூறு மில்லி தண்ணீர் விட்டுக் காய்ச்சவும். எட்டி ஒரு பங்காக சுண்டிய பிறகு இறக்கிக் கொண்டு தினசரி காலை மாலை இரண்டு வேளை கொடுத்து வரவும்.

2) முடக்கற்றான் கியாழம்: முடக்கற்றான் வேர் பிரமிய வழுக்கை நீர்ச்சுண்டி சுக்கு சங்கங்குப்பி வேர் சிறுகண்டங்கத்திரி முதலியவைகளை வகைக்கு ஐந்து கிராம் வீதம் எடுத்து முன்னூற்றி இருபது மி.லி. தண்ணீர் விட்டு கியாழமாகக் காய்ச்சவும் எண்பது மி.லி. யாக சுண்டிய பின்னர் காலை மாலை கொடுக்கவும்.

3) கீழாநெல்லிக் கஷாயம்: கீழாநெல்லிச்சமூலம் மஞ்சள் கரிசாலை வெள்ளாட்டுப் புழுக்கை ஆமணக்கு வேர் முடக்கற்றான் வேர் சுக்கு முதலியவைகளை வகைக்கு 5 கிராம் வீதம் எடுத்து 8 மடங்கு தண்ணீர் விட்டுக் காய்ச்சவும். நான்கில் ஒரு பங்காக சுண்ட வைத்த பின்னர் காலை மாலை இருவேளையும் கொடுத்து வரவும்.

தயிர்ப் பக்குவம்; முன்னூறு மி.லி. எருமைத் தயிரில் ஏழு மிளகின்தூள் மூன்றுதுளி எருமைச் சாணியின் பால் விட்டு கலந்து கொண்டு காலை மாலை இருவேளை கொடுக்கவும்.

தினசரி இப்படிப் புது தயிர் செய்து மூன்று நாட்கள் (உப்பு புளி நீக்கி) கஞ்சி மட்டும் சாப்பிடும் பத்தியத்துடன் கொடுக்கவும் பிறகு ஒரு நாள் இடைவெளி விட்டு மீண்டும் மூன்று நாட்கள் இப்படியே தயிர் செய்து கொடுக்கவும். ஏழாம் நாள் தலைக்கு தண்ணீர் விடவும்.

வெளுப்பு, காமாலை, ஊதல், உடம்புவீக்கம், நீர்க்கோவை முதலியன தீரும்.

கற்கம் :-

1) அதிமதுரக்கற்கம்; அதிமதுரம் சங்கம்வேர் முதலியன வகைக்கு ஒன்பது கிராம் எடுத்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்துக் கொள்ளவும். அதை இரண்டு பங்காக ஆக்கி காலை, மாலை இருவேளை கொடுக்கவும். ஐந்து நாட்கள் கொடுத்தால் போதுமானது.

2) கீழாநெல்லி கற்கம்; மணித்தக்காளி இலை கீழாநெல்லி சமூலம் வகைக்கு ஐந்து கிராம் சேர்த்து பசுவின் தயிர் விட்டு அரைத்து தினசரி காலையில் மட்டும் உண்டு. வந்தால் போதும்.

மூன்று முதல் ஆறு நாட்களில் குணம் உண்டாகும். தேவையானால் ஆறு நாட்கள் ஆனபின்னர் 2 நாள் இடைவெளி விட்டு மீண்டும் உண்ணக் கொடுக்கலாம்.

3) மணித்தக்காளி கற்கம் ; மணித்தக்காளி கீழாநெல்லி இலைகளை சமஅளவு எடுத்து எலுமிச்சங்காய் அளவு அரைத்துக் கொள்ளவும் அதை எருமைத் தயிரில் கலந்து கொடுக்கவும். எருமைத் தயிர் எருமைப்பால் எருமைநெய் ஆகாரத்தில் சேர்த்து வரவும். நான்கே நாட்களில் நலமாகும்.

ஈரல் குலைக்கட்டி நோய் :

சிறு குழந்தை சாம்பல், விபூதி அல்லது மண்ணைத் தின்பதால் ஈரல் பெருத்து கட்டியாகி விடலாம். சில குடும்பங்களில் வரிசையாகப் பிறக்கும் குழந்தைக்கெல்லாம் ஒன்று ஒன்றரை வயதில் இந்த நோய் காணும் காரணம் தாயின் கருப்பையில் உண்டாகும் அண்டம் பலவீனமாக இருப்பதே.

குழந்தையின் வலது பக்கம் விலாவின் கீழே இலேசாக அழுத்திப் பார்த்தால் கட்டி இருப்பது தெரியும். இந்த நோய்க்குப் பொறுமையாக நீண்ட கால சிகிச்சை செய்யவேண்டும். இல்லாவிட்டால் குழந்தையை இழந்து விடநேரிடும்.

இந்த நோய் வந்து குழந்தைக்கு ஐம்மி நிறுவனத்தார் கொடுக்கும் சிகிச்சை நம்பகமாக இருக்கிறது. குழந்தைக்கு இலேசான உணவு கொடுப்பது மிக முக்கியம் தாய்ப்பால் அருந்தும் குழந்தையாக இருந்தால் தாய் எண்ணெய்ப் பதார்த்தங்களைத் தவிர்த்து சுலபமாக ஜீரணமாகும் இலேசான உணவுகளையே மிதமாக உட்கொள்ளவேண்டும்.

கரப்பான்

குழந்தைகளின் தாலப்பருவமுதல் வருகைப்பருவம் வரையிலான நான்கு பருவங்களிலும் கரப்பான் நோய் வரக்கூடும்.

சோளம், கம்பு, வரகு, கார் அரிசி, வாழைக்காய், பாகற்காய், கெளுத்தி மீன் முதலியவைகளை தாயார் அதிகமாக சாப்பிடுவதினாலும் அல்லது குழந்தைகள் உண்பதனாலும் கரப்பான் நோய் உண்டாகும்.

கரப்பான் என்பது ஒருவகைப்புண் முதலில் தோல் கறுத்து அந்நோய் மிகுதியாகும் புண், தடிப்பு, வெடிப்பு, நீர்க்கசிவு போன்றவை யோடு தோல் கருமையும் அடையும் பொதுவாக கரப்பான் என்றாலே சொரி சிரங்கு நமைச்சல் எனப்படும்.

இவை பதினெட்டு வகை என்றும் பதினைந்து வகை எனவும் சொல்லப்படுகிறது. அதில் மிக மிக முக்கியமானது பன்னிரண்டு ஆகும்.

வாதக் கரப்பான் ; உடம்பிலுள்ள சில நரம்புகளில் வலி, உடம்பு வீக்கம், கடுப்பு வலி தாங்காமல் அழுதல் உடம்பு முழுவதும் நெற் பொரியைப் போன்ற புண்கள் தோன்றும் சிறிது நாள் சென்றதும் அந்தப் புண்கள் பழுத்து உடையும் காய்ச்சல் அடிக்கும்.

பித்தக் கரப்பான்; கடுமையான தலைவலியுடன் உடம்பில் சொறி உண்டாகும் சுரம், வாந்தி முதலியவைகளுடன் உடம்பு சிவப்பு நிறமாக ஆகும் கண்கள் பச்சை நிறமாக மாறும் குரல் கம்மும் மலச்சிக்கல் உண்டாகும்.

சிலேத்தும கரப்பான்; குரல் கம்மிப் போகும் நெஞ்சு புண்ணாகும் தலைவலி, வாய் வேக்காளம் கடுப்புவலி உண்டாகும் புண்கள் நீரால் திரண்டு நிற்கும்.

அரி கரப்பான்; தொடை இடுக்குகளில் புண் உண்டாகி அதில் இருந்து அதிகமான நீர்வடியும் புண்ணில் தசை கரைந்து வலி உண்டாகும் நாட்கள் செல்லச் செல்ல உடம்பு இளைக்கும்.

பொரி கரப்பான்; கன்னத்தில் அடிப்பட்டது போன்ற வீக்கம் உண்டாகும். உடம்பு முழுவதும் சிவப்பு நிறமான தடிப்புகள் உண்டாகும் அவை சிறிது நாட்கள் சென்றதும் உடைந்து தாங்க முடியாத வலியுண்டாகும் பிறகு குளிர்ச்சி அடையும் நாவரட்சி நிலை தடுமாற்றம் முதலியன உண்டாகும்.

வாலக் கரப்பான்; கால், கை, தொடை இடுக்கு முதலிய இடங்களில் வலி உண்டாகும். விஷக்கடியைப் போல் உடம்பு முழுவதும் பரவலாகத் தடிக்கும் அவை புண்களாக மாறும் நாக்கு தொண்டை முதலிய இடங்களிலும் புண்கள் உண்டாகும் காய்ச்சல் உண்டாகும்.

செங்கரப்பான்; உடம்புக்கடுப்பு வீக்கம் கதகதப்பு உடம்பில் அரிப்பு காய்ச்சல் முதலியன உண்டாகும். உடம்பு முழுவதும் வேர்வைக்குரு போல் உண்டாகும். முகம் கருப்பாகவும் உடம்பு சிவப்பாகவும் நிறமாறுதல் அடையும்.

மண்டைக் கரப்பான் ; மண்டையில் நமைச்சல் உண்டாகி அதைச் சொறிவதால் புண்கள் உண்டாகும் காதில் சீழ் வடிந்து வடிந்து ஆறிப்போகும். தலைவலியுடன் மூக்கில் நீர் வடியும் உடம்பு இளைக்கும். குரல் வளையில் தினவு இருக்கும் காய்ச்சலும் இருக்கும்.

ஒடு கரப்பான்; கீல்களில் வலி உண்டாகி நீட்டவும் மடக்கவும் முடியாமல் போகும். நரம்புகளில் வலிப்பு போன்ற வலியும் குத்தலும் உண்டாகும் மலச்சிக்கல் உடம்பெல்லாம் அரிப்பு, தடிப்பு உண்டாகும்.

சட்டைக் கரப்பான்; கீல்களில் வலி உண்டாகும் மலச்சிக்கல் தலைவலி லேசான காய்ச்சல் உணவில் வெறுப்பு முதலியன உண்டாகும் உடம்பு முழுதும் கள்ளிப் பூவைப் போல் சிரங்குகள் உண்டாகும்.

வெடி கரப்பான்; உடம்பெங்கும் வீக்கம் உண்டாகும் கீல்களில் வீக்கம் உண்டாகி பழுத்து உடையும் காய்ச்சல் தலைவலி உடம்பெங்கும் அரிப்பு முதலியன உண்டாகும்.

கிரந்தி கரப்பான்; நெஞ்சு அடைப்பு உண்டாகும் உடம்பு விங்கும் மேல் மூச்சு வாங்கும் உடம்பு பற்பல நிறங்களை அடையும் தொண்டைக்கட்டு உண்டாகி உடலெங்கும் வலிக்கும் இருமல் கீச்சுக்குரலால் அழுதல் குரல் கம்மல் முதலியன உண்டாகும்.

கரப்பான் நோய்களுக்கு மருத்துவம் :

கரப்பான் நோய் வந்தவர்கள் மருந்துண்ணுவதை விடமிக முக்கியமானது பத்தியம் சில பொருள்கள் காய் கறிகள் கரப்பான் நோயை அதிகப்படுத்தி விடும். அவை கத்திரிக்காய் தக்காளி காராமணி வேர்க்கடலை பொட்டுக்கடலை உப்பு மிளகாய், நல்லெண்ணெய் மீன், கருவாடு முதலியவைகளாகும். கரப்பான் நோய் இருக்கும் போது காரமில்லாத உணவை அரை உப்புப்போட்டுக்

கொண்டு சாப்பிடவேண்டும். எண்ணெயில் பொறித்த காய்கறிகள் வெந்த பலகாரங்களை உண்ணாமல் இருப்பது நல்லது மலச்சிக்கல் ஏற்படாமலும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

எல்லாக் கரப்பானுக்கும் எண்ணெய் :

1) நாய்வேளை, தைவேளை, செம்பருத்தி, மணித்தக்காளி பொன்னாங்காணி நத்தைச்சூரி அம்மான் பச்சரிசி தகரை பழம்பாசி குட்டி விளாம்பட்டை பாகல் கருந்துளசி செம்முள்ளி இரண்டு பாவட்டை கருங்காலி சிறுபுள்ளடி துவரை கொன்றைப்பட்டை தவசு முருங்கைப்பட்டை கோடகசாலை அகத்தி குமரிச்சாறு சிறுசின்னி ஈருள்ளி பூண்டு ஆகியவைகளின் சாறு வகைக்கு கால்படி எடுத்து மண்பாத்திரத்தில் இடவும் சரி எடை ஆமணக்கு எண்ணெய் விட்டு சூரிய வெப்பத்தில் இரண்டு நாள் வைக்கவும்.

ஓமம் சாதிக்காய் சாதிப்பத்திரி வசம்பு கோஷ்டம், கொத்த மல்லி காட்டுச்சீரகம் திப்பிலி இஞ்சி முதலிய பொருட்களை வகைக்கு பத்துகிராம் எடுத்து அரைத்துக் கலக்கிக் கொண்டு அடுப்பிலேற்றி எரித்து பதத்தில் வடித்துக் குழந்தைகளுக்கு கொடுத்து வர எல்லாக் கரப்பானும் தீரும்.

பதினாறு வயது வரை உண்டாகும் கரப்பான் ரோகங்களுக்கு கொடுக்கலாம்.

2) சின்னி இலை சிவனார் வேம்பு சாறணை, தூதுவளை, மணித்தக்காளி கருநொச்சி கற்பூரவல்லி சிறுகீரை சோம்பு செருப்படி பருத்தி பொன்னாங்காணி, பருத்தி, நீர்முள்ளி, சங்கன்இலை சங்கங்குப்பி, மெருகங்கிழங்கு கண்டங்கத்திரி இலை முதலியவை களை நன்றாக இடித்துப் பிழிந்தசாறு ஒருபடி,

வெங்காயச் சாறு ஒருபடி ஆமணக்கெண்ணெய் ஒருபடி முதலியன சேர்த்துக் காய்ச்சவும்.

அதிமதுரம் சீரகம் கருஞ்சீரகம் கடுக்காய்த்தோல் ஏலம் மிளகு பறங்கிப்பட்டை சதகுப்பை மரமஞ்சள் ஓமம் திப்பிலி முதலிய சரக்குகளை வகைக்கு இரண்டு காசு எடை வீதம் எடுத்து சூரணம்

செய்து காய்ச்சும் எண்ணெயில் கலக்கவும்.

ஒரு கரண்டி எண்ணெயைக் கொடுக்க வயிறு கழியும் இதனால் கரப்பானின் தொந்திரவுகள் நீங்கி சுகம் ஆகும்.

பத்தியம் : பாசிப்பயறும் அரிசியும் சேர்த்துக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும் வேறு ஆகாரம் கூடாது.

3) காட்டு மல்லிகை இலை இரண்டு பிடி கொண்டு வந்து சம்பா நெல்லரிசியோடு நன்றாக சேர்த்து இடித்துப் புடைத்து அரைக்கவும். அதை வெள்ளாட்டுப்பால் விட்டுக் களிகிண்டி அதன் ஆவியை கரப்பான் நோயுள்ள குழந்தையின் முகத்தில் காட்டவும். அதே களியை வெல்லத்துடன் கூட்டி சாப்பிடச் செய்யவும்.

4) கருஞ்சீரகம், ஏலக்காய், கிராம்பு, பூதக்கரப்பான் பட்டை வசம்பு ஜாதிப்பத்திரி கூகைநீர் அமுக்கிராக்கிழங்கு முதலியவை களை வகைக்கு ஒரு பலம் எடுத்து நன்றாக உலர்த்திக் கொள்ளவும் அதைச் சூரணம் செய்து தேனில் குழைத்து தினம் மூன்று வேளை சாப்பிடக் கொடுக்கவும்.

5) கஞ்சாங்கோரை தண்ணீர் விட்டான் கிழங்கு செருப்படி புங்கம்பட்டை முதலியவைகளை இடித்து வகைக்கு சம அளவு எடுத்து அதற்கு சரி எடை பசும்பால் சேர்த்துக் காய்ச்சி வடிக்கவும். காலை மாலை வெறும் வயிற்றில் சாப்பிடக் கொடுக்கவும்.

பசும் பாலுக்குப் பதிலாக நல்லெண்ணெய் கலந்து அடுப்பின் மேலேற்றி காய்ச்சி உடம்பில் தேய்க்கவும்.

6) குருந்து பெருமருந்து சிறுகுறிஞ்சான்வேர் தூதுவேளை வேர் முருங்கை இண்டு (புலிதுடக்கி) கொடிப்பாலை சிறுகத்திரி பொன்முசுட்டைவேர் ஆதொண்டை மிளகறணை சங்கன்வேர் கருணைக் கிழங்கு பீநாறிப்பட்டை செங்கதாரி வேர் எருக்குவேர் அவுரிவேர் நன்னாரி வேர் வெள்ளைப்பூண்டு வசம்பு முதலிய சரக்குகளை சம எடை (ஒரு தோலா) எடுத்து சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.

நல்லெண்ணெய் விளக்கெண்ணெய் வேப்பெண்ணெய் முதலியன(மூன்றும் சேர்ந்து) இரண்டு படி சேர்த்து பக்குவமாக எரித்து இறக்கவும்.

இந்தத் தைலத்தை கரப்பான் உள்ள குழந்தையின் தலை மார்பு முதலிய இடங்களில் தடவி வரவும்.

7) காகோலி என்னும் கருஞ்சூரை நிலவாகை சிவனார் வேம்பு காட்டுமல்லிகை மிளகறணைவேர் கிரந்தி நாயகம் கழல்கொடிவேர் முதலியவைகளை வெயிலில் நன்றாக உலர்த்தி இடித்து தூளாக்கி துணியில் சலித்துக் கொள்ளவும் திரிகடிப் பிரமாணம் (மூவிரல் கொள்ளும் அளவு) சூரணத்தை வெந்நீருடன் தினசரி இருவேளை வீதம் சாப்பிடவும். பத்து நாட்கள் சாப்பிட்ட பின்பு பத்து நாட்கள் இடைவெளி விட்டு மீண்டும் பத்து நாட்கள் பத்தியத்துடன் உண்ணவும்.

பத்தியம்; புளியை நீக்கவும் இளங்கீரை முருங்கைப் பிஞ்சு முதலியவைகளைக் கூட்டவும்.

8) சத்திச் சாறணைக்கிழங்கு சிறு அவரைக் கிழங்கு செங்கதாரிவேர் வேலிப்பருத்தி வேர் அப்பக்கோவைக்கிழங்கு முதலியவைகளை வகைக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு அரைத்துக் கொள்ளவும்.

உள்ளிப்பூண்டு வசம்பு கம்பிப்பிசின் கார்போக அரிசி கருஞ்சீரகம் கடுகுரோகிணி பூதக்கரப்பான் பட்டை முதலியவைகள் வகைக்கு இரண்டு கிராம் எடுத்து தண்ணீர் விட்டு அரைத்துக் கொள்ளவும். மணித்தக்காளி கீரை பத்து எடை சேர்த்துக் கொள்ளவும்.

சிற்றாமணக்கெண்ணெய் இரண்டு லிட்டரில் முன் சொன்ன (அரைத்த)வைகளைக் கலந்து அடுப்பிலேற்றிக் காய்ச்சி இறக்கவும்.

ஒரு காசெடை உள்ளுக்கு சாப்பிட்டு மேலுக்கும் பூச பலவித கிரந்தி கரப்பான் ரோகங்கள் தீரும்.

9) கருநொச்சி இலை அரைத்த விழுது நாரத்தங்காய் அளவு வெள்ளைப்பூண்டு வசம்பு கருஞ்சீரகம் கடுக்காய் முதலியன அரைத்த விழுது வகைக்கு எலுமிச்சங்காய் அளவு ஆமணக் கெண்ணெய் ஒரு படி

எல்லாவற்றையும் ஒன்றாக்கிக் கலந்து மூன்று நாட்கள்

வெயிலில் வைக்கவும். நான்காம் நாள் அடுப்பில் ஏற்றிக் காய்ச்சி பதத்தில் வடிக்கவும்.

இந்த எண்ணெயில் காசெடை எடுத்து உள்ளுக்கு கொடுத்து வரக் கரப்பான் கிரந்தி முதலியன தீரும்.

அக்கி

அம்மையைப் போல் பெரிய கொப்பளங்கள் இல்லாமல் பருக்கள் போல அதிக எழுச்சி இல்லாமலும் குறுணை போல் வேர்க்குரு மாதிரி உடல் முழுதும் உண்டாகின்ற ஒரு வித சர்ம நோய். எந்த மருத்துவம் செய்யாவிட்டாலும் தானாகவே போய் விடுவதும் உண்டு. ஆனால் அழுக்கான காற்று சுற்றுப் புறக்கெடுதல்களால் அதிகம் ஆகி வேறு பல சர்ம நோயாகி விடுவதும் உண்டு.

இள வெதுப்பான நீர் விட்டுக் குளிப்பாட்ட வேண்டும் அல்லது துணியை நனைத்துப் பிழிந்து துடைக்க வேண்டும் செங்காவி மண்ணைத் தண்ணீர் விட்டுக் கலக்கி மேலேயுள்ள (வண்டல் நீக்கிய) தெளிவை அக்கிப்புண் உள்ள இடங்களில் பூச வேண்டும்.

மண்பானை முதலியன செய்யும் குயவர்களிடம் அந்த மாதிரி காவிமண் இருக்கும். ஆகையால் அங்கு சென்று பெரியவர்களிடம் பூசி வருவது கிராமப்புறங்களில் உள்ள வழக்கமாகும். குழந்தைகள் நலனில் அக்கரையுள்ள மூத்தவர் குலதெய்வத்தை வணங்கி விட்டு நலமாக வேண்டிப் பிரார்த்தித்து மண் குழம்பைப் பூசுவார். அனேகமாக ஒரு தடவை பூசி மூன்று நாட்கள் கழித்து மீண்டும் பூசுவது வழக்கம். அநேகமாக ஒரு தடவை பூசுவதிலேயே குணம் கிடைத்து விடும்.

பன்னீரும் சந்தனமும் கலந்து பூசி வரலாம் மழை காலமாக இருந்தால் சில குழந்தைகளுக்கு ஜலதோஷம் பிடிக்கும்.

குப்பைமேனி இலையையும் வேப்பிலையைம் சேர்த்து அரைத்து திப்பியைப் பிழிந்து விட்டு சாறு மட்டும் பூசலாம்.

உரம் விழுதல்

உயரத்தில் இருந்து குதித்தல், தாவுதல், உருளுதல், எதிர் பாராத அதிர்ச்சிகள் முதலிய காரணங்களால் நரம்புகள் சுளுக்கிக் கொள்வது உண்டு. குழந்தைகள் விளையாடும் போதும் வேகமாக

நடக்கும்போதும் விழுவதாலும் உண்டாவதுண்டு. பெரிய நரம்புகள் சுளுக்கிக் கொள்ளுமானால் நன்றாக வெளியே தெரியும்.

சிறிய நரம்புகளாக இருப்பதாலும் இலேசாகப் பிடித்துக் கொள்வதாலும் இவை சரியாகத் தெரியாது. நரம்பு அல்லது சதை கெட்டியாகி விட்டது. உரத்து விட்டது என்பதை உரம் விழுந்து விட்டது என்கின்றனர் அனுபவம் உள்ள பெண்கள் உரம் எடுத்து விடுகிறார்கள். ஒவ்வொருவர் ஒரு வழியைப் பின்பற்றுவார்கள் கீழே சில முறைகள் கூறப்பட்டுள்ளன.

முழங்காலின் உட்பகுதி முழங்கையின் உட்பகுதி முதலியவை களில் கட்டை விரலால் மேல் இருந்து கீழே நீவி விடுவது நல்லது. நீவி விடும் போது நரம்பு கெட்டியாக இருக்கும் சாதாரணமாக இருந்தால் கெட்டியாக இருக்காது.

முகவாயின் பகுதி (தாவாய்க்கட்டை) மேலும் இம்மாதிரி நீவி விடுவது உண்டு.

படுக்க வைத்து முதுகில் இடுப்புப் பகுதிக்கு சற்று மேலே நீவி விட்டு சதையை இழுத்து தூக்கி விடுவதும் உண்டு.

பொது நரம்புகள் இணைகின்ற இடங்களில் இதைச் செய்வது உண்டு. வெறும் கையால் நீவி விடுவதை விட ஆமணக்கெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் அல்லது விபூதி தடவி நீவி விடுவது வழக்கம்.

சிறு குழந்தையாக இருந்தால் இரண்டு தாய்மார்கள் தொட்டில் கட்டும் கெட்டியான துணியில் குழந்தையைப் போட்டு இரண்டு முனைகளையும் பிடித்து இலேசாக உருட்டுவார்கள் குழந்தை அங்குமிங்கும் உருட்டப்படுவதால் சுளுக்கு குணமாகி விடும்.

பெரியவர்களானால் அம்மிக்கல் அல்லது கனமான பொருட் களையும் சுளுக்கு உள்ள பகுதியில் வைத்து உருட்டுவதுண்டு.

குழந்தையை தலை கீழாக தொங்க விட்டு காலைப் பிடித்து தட்டாமாலை சுற்றுவதும் உண்டு.

வாத நோய்க்கான தைலங்களைத் தடவி வெந்நீர்ப் புட்டியை வைத்து உருட்டி விடலாம்.

சாம்பல் நவதானியம் உமி முதலியவைகளை இலேசாக அனலில் காட்டி துணியில் முடிந்து கொண்டு வீக்கமுள்ள இடங்களில் ஒத்தடம் கொடுக்கலாம்.

குடல் ஏற்றம்

பேதியாகும் போது பீச்சாங்குழலில் பீச்சுவது போல் பீச்சி அடிக்கும் வயிற்றைத் தட்டிப்பார்த்தால் டப் டப் என்ற சத்தம் உண்டாகும் என்ன மருந்து கொடுத்தாலும் பேதி நிற்காத சமயத்தில் குடல் ஏற்றம் ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் உண்டாகும்.

அனுபவம் மிகுந்த தாய்மார்கள் தொட்டுப் பார்த்தவுடன் தெரிந்து கொள்வார்கள் மருந்தை விட கைப்பக்குவமே சிறந்தது.

குழந்தை துள்ளி விழுவது, தலைகீழாகச் சாய்வது, தொட்டி லில் இருந்து கீழே விழுவது போன்ற காரணங்களால் குடலேற்றம் உண்டாகக் கூடும். குடல் இருக்க வேண்டிய இடத்தி லிருந்து நெகிழ்ந்து விடுவது - விலகி விடுவது இதைத்தான் குடல் ஏற்றம் என்கின்றனர்.

உணவு சீரணமாகி உடலெங்கும் பரப்புகின்ற குடல்கள் இடம் மாறுவதால் சீரணசக்தி குறைந்து விடுகிறது. உடல் பலவீனமாகி விடுகின்றது. சில குழந்தைகளுக்கு இரத்தமும் ஆசனவாய் வழியாகக் கசியும்.

எந்த இடத்தில் குடல் விலகி இருக்கின்றதோ அதை சில குழந்தைகளுக்கு நன்றாகக் காண முடியும். சில குழந்தைகளின் வயிற்றின் மேலாகத்தடவி வந்தால் இடம் மாறி இருப்பதை உணர முடியும். முடிச்சுப் போன்ற அடையாளம் இருக்கும். குழந்தை வலியுடன் அழும்.

விளக்கெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் தொட்டுக் கொண்டு குடல் ஏறி இருக்கின்ற பகுதிகளில் நீவி விட வேண்டும். இப்படி நீவி விடுவதால் சாதாரண நிலைமைக்கு வந்து விடும். பேதியாவது நின்று விடும். குழந்தை அமைதியாகத் தூங்கும்.

நீவி விடும் போது வலியால் குழந்தை வீரிட்டு அழும். பொறுமையாகச் செய்ய வேண்டும் அனுபவம் உடையவர்கள் செய்வதே நல்லது.

தொற்று நோய்கள்

நாடாப்புழு; நன்றாக - சரியாக சமைக்காத மாமிச உணவுகள் உண்பதால் நாடாப் புழுக்கள் உடம்புக்குள் சென்று விடுகின்றன. உப்பாலும் உரைப்பாலும் புகை மூட்டத்தாலும் இந்தப்புழு சாவதில்லை. நன்றாக வேக வைக்கும் போதுதான் சாகிறது.

அசுத்தமான நிலத்தில் மேய்வதால் பிராணிகளுக்கு இந்தப் புழு தொற்றிக் கொள்கிறது. அசுத்த நீரில் உள்ள மீனுக்கும் இந்த நோய் தொற்றும் புழுவின் முட்டைகள் உள்ள நீரைக் குடிப்பதாலும் புழு உள்ள பிராணிகளின் மாமிசத்தை உண்பதாலும் உள்ளே முட்டை சென்று குடலில் வசிக்கத் தொடங்குகிறது.

இலேசான வயிற்றுவலி, அஜீரணம், விட்டு விட்டு வரும் மலச் சிக்கல், வயிற்றுப்போக்கு, இரத்தசோகை முதலியன உண்டாகும்.

குவினாக்ரைன் (அடாபிரைன்) சிறந்த மருந்து. பத்து நிமிடத்திற்கு ஒருமுறை இரண்டு மாத்திரைகள் வீதம் பத்து தடவை கொடுக்கவும். வாந்தி எடுப்பது போல் 'சோடா பைகார்பனெட்' கொடுக்கலாம். இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு முப்பதுகிராம் சோடியம் சல்பேட் தரவும்.

மலத்தை வாளியில் கழிக்கச் செய்யவும். நாடாபோல் உள்ள நீண்ட வால் பகுதி வெளியாவது முக்கியமல்ல. தலைப்பகுதி வெளியே வந்து விட வேண்டும். அதுவரையில் நோய் தொற்றித் தான் இருக்கும்.

கொக்கிப்புழு : உஷ்ணமான, குறைந்த உஷ்ணமுள்ள பகுதிகளில் இந்தப் புழு உண்டாகும். சுமார் கால் அங்குல நீளம் வரை இருக்கும். ஆண் புழுவை விட பெண் புழு நீளமாக இருக்கும்.

மலத்துடன் வெளிவரும் இந்தப் புழுவின் முட்டை கதகதப் பான ஈரமான நிலத்தில் விழுகிறது. முட்டைகள் பூச்சிகள் ஆனதும் நடக்கின்றவர் கால்களின் தோலைப் பொத்துக் கொண்டு உள்ளே நுழைகின்றன. குழந்தைகள் எல்லா இடங்களிலும் சகஜமாக நடந்து செல்வதாலும் மென்மையான கால்கள் - பாதங்கள் ஆவதால் சீக்கிரம் உள்ளே புகுந்து விடுகிறது. உள்ளே புகுந்த பூச்சி இரத்தத்தில் கலந்து

நுரையீரலை அடையும். நுரையீரலில் உள்ள காற்றுப் பைக்குள் புகுந்து மூச்சுக்குழாய் வழியாக தொண்டைக்குள் செல்லும். தொண்டைக்குச் சென்ற பூச்சி உள்ளே சென்று குடலில் தங்கி இரத்தத்தை சாப்பிட்டு வசிக்கும். அப்போது அது முட்டையிடும் அந்த முட்டைகள் மலத் தோடு வெளிவந்து இன்னொருவர் காலைப் பிடித்துக் கொள்ளும். ஒருவர் உடம்பில் புகுந்து இரத்தம் குடித்து வாழ்ந்து புதிய முட்டை வர சுமார் பத்து நாட்கள் ஆகலாம் எனக் கருதப்படுகிறது.

அடையாளம் :- இந்தப் பூச்சி தோலைத் துளைத்து உள்ளே போனதும் அரிப்பு எடுக்கும். இந்த அரிப்பு எந்தப் பரிகாரம் செய்யாவிட்டாலும் பத்து நாளில் தானே நின்று விடும்.

இந்தப் பூச்சியால் உண்டாவது இரத்தம் தான் நஷ்டமாகிறது. பல பூச்சிகள் சேர்ந்து இரத்தத்தைக் குடித்து விடுவதால் இந்த நஷ்டம் உண்டாகிறது. இது கொஞ்சம் கொஞ்சமாக உண்டாகிறது. ஆகையால் இதைத் தெரிந்து கொள்ள முடியவதில்லை.

இதன் காரணமாக குழந்தைகளுக்கு மூச்சுத் திணறல் உண்டாகலாம். இருதய நோய் உண்டாகி விட்டதோ என்று பயப்படு கின்ற அளவுக்கு கூட அதிகமாகலாம். உடம்பு வெளுத்து பலவீனப் பட்டு விடும்.

பத்து நாட்கள் சென்ற பிறகு பூச்சி முட்டை போட்ட பிறகு வயிற்றில் அதிக பூச்சிகள் இல்லாத போது தானாகவே மூச்சுத் திணறல் குணமாகி விடலாம். ஆனால் இரத்தம் குறைவதால் சோகை போன்ற உடல் வெளுப்பு குறைந்து விடாது.

பூச்சியைக் கொல்ல பல புதிய புதிய மருந்துகள் உள்ளன. இந்தப் பூச்சிதானா என்பதை ஆய்வுக் கூடத்தில் மலம் சோதித்துப் பார்த்த பின் கொடுப்பதே சிறந்தது.

தடுப்பு முறை : காலில் காலணி அணிந்து நடப்பது நல்லது. அழுக்கு மண்ணில் குழந்தைகள் நடமாடாமல் இருப்பது நல்லது.

கக்கூஸ் தரைகளிலும் அசுத்தம் இல்லாமல் வைத்துக் கொள்ள வேண்டும்.

பன்றிப் பூச்சி : உருண்டையாக சின்னதாக உள்ள பூச்சி. இது

பன்றி, நாய், எலி, பூனை போன்ற வீட்டுக்கு அருகில் உள்ள பிராணிகள் மூலம் இது பரவுகின்றது.

பல நோய்களுக்கு நல்லது என்று இப்போது நம்நாட்டில் பன்றி மாமிசம் சாப்பிடும் வழக்கம் சில இடங்களில் ஏற்படுகின்றது. அவர்களுக்கு மட்டும் இப்பகுதி.

நோயுள்ள பன்றியின் மாமிசத்தை சாப்பிடும் மானிதர்களின் குடலில் முட்டைகள் புகுந்து பெரிய பூச்சி ஆகிறது. குடலின் சுவர் பகுதி மூலம் இரத்தத்தில் கலந்து உடம்பில் நடமாடும். பத்து வருடம் முதல் முப்பத்தியொரு வருஷம் வரை கூட சதையில் தங்கி இருக்கும் சக்தி கொண்டது.

உள்ளே போன பூச்சிகள் முட்டைகள் போடும்போது வயிற்றில் தொந்திரவு இருக்கும். ஒரு வாரம் அல்லது பத்து நாட்களில் இந்தப் பூச்சி தசையை அடைந்து தசை வலி உண்டாக்கும். கடுமையான விஷக் காய்ச்சல் உண்டாகலாம். இந்தக் காய்ச்சல் எவ்வளவு சிகிச்சை செய்தாலும் குறையாமல் ஆறு வாரங்கள் இருக்கலாம்.

குடல்களின் சுவர்களில் இந்தப் பூச்சி ஒட்டிக் கொண்டு இருப்பதால் சிகிச்சை செய்வது கஷ்டமானது. ஆரம்ப நிலையில் கவனித்தால் மட்டும் குணமாக்க முடியும். பத்து நாட்களில் பூச்சிகள் புதிய முட்டைகள் போட்டு மடிந்து விடும். எனவே உள்ளே சென்ற பூச்சி பலமடைவதற்குள் பரிகாரம் செய்ய வேண்டும்.

குடலை விட்டுத் தசைக்கு சென்று விட்டால் போக்குவதற்கு சரியான மருந்துகள் இல்லை.

நாக்குப்பூச்சி : நோயை உண்டாக்கும் புழுக்களில் நாக்குப் புழுதான் மிகப் பெரியது. ஆண்புழு நீளமாக பதினைந்து முதல் இருபத்தைந்து சென்டிமீட்டர் இருக்கும். பெண்புழு இருபத்தைந்து முதல் நாற்பது சென்டிமீட்டர் நீளமும் உருண்டையாகவும் அழுத்த மாகவும் இருக்கும்.

இதன் முட்டைகள் மலத்தோடு விழுந்து நிலத்தை அசுத்தப் படுத்தும். மல எருவில் வளரும். காய்கறிகளை உண்ணும் போது இரைப்பைக்குள் சென்று விடுகின்றது. முட்டைகளாக விழுங்கப்

பட்டால் இந்த முட்டைகள் குடலுக்குள் பொரிந்து குடல் சுவர் மூலம் இரத்தத்தில் கலந்து கல்லீரலில் சென்று விடும். நான்கு நாட்களில் இரத்த ஓட்டத்தில் கலந்து நுரையீரலை அடைந்து அங்கே வாழத் தொடங்கும் மூச்சுக் குழாய்கள் மூலமாக தொண்டைக்குள் வந்து வயிற்றுக்குள் போகின்றன. குடலில் இவ்வாறு முதிர்ச்சி அடைய சுமார் எழுபது நாட்கள் ஆகும் என மதிப்பிடப்படுகிறது.

நுரையீரலில் இந்தப் புழுக்கள் இருந்தால் அதிகமாக இருக்கும்போது நிமோனியாக் காய்ச்சலுக்கு உள்ளது போன்ற குளிர்சுரம் உண்டாகும். அரிப்பு, கண்வலி, மூச்சுக்குழல் வீக்கம் முதலியவை போலவும், அடையாளம் உண்டாகும் எப்படி என்பது தெரியாமலேயே வாந்தி உண்டாகும்.

பைப்பராசைன் மாத்திரைகள் குடலில் உள்ள புழுக்களை அழித்துக் கொல்லக் கூடியது. பல புதிய மருந்துகளும் இப்போது வந்துள்ளன.

தடுப்பு முறை, காய்கறிகளை நன்றாக கழுவிச் சமைக்க வேண்டும். இலைகளை பச்சையாகத் தின்னக் கூடாது. கிணற்று நீரை கொதிக்க வைக்காமல் உபயோகிக்கக் கூடாது.

கைகளை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். விரலை வாய்க்குள் போடாமல் இருக்கக் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும்.

கீரிப்பூச்சி : மலச்சிக்கல் உண்டாகி இலைக்கறி வகைகளை தினசரி சேர்த்துக் கொண்டு உண்பதால் தாயார் அல்லது குழந்தைக்கு கீரிப்பூச்சி உடலில் சேர்கின்றது.

அடிக்கடி கண்களில் பீளைகட்டும் கையினால் தலையை தடவும். காதுகளைப் பிடித்து இழுத்துக் கொள்ளும் குரல் கம்மிப் போய் குழந்தையும் இளைத்து வரும்.

அடிக்கடி வயிறு வலித்துப் பேதி ஆகும். உணவில் வெறுப்பு, வாந்தி, காய்ச்சல் நெஞ்சு மார்பு கட்டி போன்ற மேடு ஆகுதல். சூம்பிய வயிறு போலாகுதல் முதலியன இந்நோயின் அடையாளமாகும்.

கீரிப்பூச்சி அதிகம் இருந்தால் இனிப்பை குறைக்க வேண்டும். கீரை மைதாமாவு கடலை பட்டாணி உருளைக்கிழங்கு சேப்பங்கிழங்கு உளுந்து இலந்தைப்பழம் ஐஸ் கலந்த பானம் முதலியன குறைக்கலாம்.

புதினா கொத்துமல்லி (தனியா) கறிவேப்பிலை இஞ்சி, சீரகம், மிளகு, கண்டந்திப்பிலி பெருங்காயம் ஓமம் முதலியவற்றை அதிகம் சேர்க்கலாம்.

ஓமமும் வேப்பிலையும் அல்லது ஓமமும் சப்ஜா இலையும் சேர்த்து அரைத்து காலையில் சாப்பிட்டு வரலாம். முதல் நாள் இரவு வெந்தயத்தை ஊறவைத்து மறுநாள் காலையில் அரைத்து தயிரில் கலக்கிச் சாப்பிடலாம்.

மருந்துகள்; 1) சீரகம் வெள்ளைப் பூண்டு சம எடை எடுத்து கொதிக்கின்ற கஞ்சியில் அரைத்துக் கொடுக்கவும்.

2) புகைப்படாத மண் சீவின பாக்கு பச்சைப் பாளை ஆகிய மூன்றையும் சமமாக எடுத்து நறுக்கிக் கால்படி தண்ணீர் விட்டுப் பாதியாக வற்றும் வரை காய்ச்சிக் கொள்ளவும். கொஞ்சம் கொஞ்சமாக குழந்தைக்கு கொடுக்க கீரிப் புழுக்கள் எல்லாம் குடலிலேயே செத்து மலத்துடன் வெளி வந்து விடும்.

3) இலுப்பை இலை வெள்ளைப் பூண்டு வசம்பு முதலியன இடித்துச் சாறு பிழிந்து உள்ளுக்கு கொடுக்கவும். இதைத் தலையில் பிழிந்தாலும் தீரும்.

4) குப்பைமேனி இலை உத்தாமணி இலை இவை இரண்டையும் தண்ணீர் விட்டுப் பிசைந்து குழந்தை தலையிலும் தாயார் தலையிலும் பூசக் கீரி பூச்சி நோய் நீங்கும்.

5) சாறணை இலை வேளை இலை இவை இரண்டையும் வகைக்கு ஒரு பிடி எடுத்து நறுக்கி ஆழாக்கு கள்ளிப்பால் விட்டு ஆமணக்கெண்ணெய் (சம எடை) சேர்த்துக் காய்ச்சவும்.

ஒரு வேளைக்கு ஐம்பது மி.லி. சாப்பிட வயிறு நன்றாகக் கழியும். நாக்குப் பூச்சி கீரிப்பூச்சி திமிர்ப்புழு யாவும் தீரும்.

அம்மை நோய்கள்

சின்னம்மை; அம்மைகளில் சின்னம்மை எனப்படுவது தான் மிக வேகமாகப் பரவுவது. அம்மை வந்த குழந்தை உள்ள அறைக்கு இன்னொரு குழந்தை வந்தால் கூட சில நாட்களில் தொற்றி விடுகிறது.

சளி மூக்கு ஒழுகுதல் கண் சிவந்து விடுதல் உடம்பில் கதகதப்பு தொடர்ந்து உண்டாகும். வறட்டு இருமல் முதலிய அறிகுறிகள் ஏற்பட்டால் இரண்டு மூன்று நாட்களில் அம்மை உண்டாகி விடும்.

பூச்சி கடித்தது மாதிரி முகத்தில் சிவப்புப் புள்ளிகள் தெரியும் இரண்டொரு நாட்களில் உடம்பு முழுவதும் அடையாளம் தெரியும்.

குழந்தையைப் படுக்க வைத்து குளிர்காற்றுப் படாமல் பாதுகாக்க வேண்டும். இல்லாவிட்டால் நிமோனியா போன்ற குளிர்சுரம் உண்டாகி விடும். அது முற்றி விட்டால் மூளைக்கு பாதிப்பும் உண்டாகலாம்.

இந்த நோய்க்கு என்று தனியான சிகிச்சை எதுவும் இல்லையென்றே சொல்லலாம் குழந்தையைப் படுக்கவைத்து கதகதப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். அதிகமான வெளிச்சம் கண்களில் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சாதாரண சூரிய வெளிச்சம் கெடுதல் செய்யாது. குறைந்த ஆகாரம் கொடுப்பதுடன் மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மிகவும் அவசியமானால் மட்டுமே கண்ணில் மருந்து போடலாம். காது வலிக்கு மருந்து ஊற்றுவதும் நல்லது. உடம்புக்கு ஒத்தடம் கொடுப்பதும் கூடாது.

மஞ்சளையும் வேப்ப இலையையும் நன்றாக அரைத்து உடம்பின் மேல் தடவலாம். இளநீர் பனங்கற்கண்டு குளிர்ச்சியூட்டும் பானங்கள் கொடுக்கலாம்.

மணல் வாரி அம்மை; சில நாட்கள் மட்டுமே இருக்கக் கூடிய அம்மை. கொப்புளமும் காய்ச்சலும் இருக்கும் வேறு பெரிய கஷ்டம் இருக்காது. கழுத்தின் பின் பக்கத்திலும் கட்டிகள் வீக்கத்தோடு உண்டாகும்.

கருவுற்ற காலங்களில் தாய்மார்களுக்கும் இந்த அம்மை வந்தால் கருவில் உள்ள குழந்தைக்கும் நோய் உண்டாகி குழந்தை உடல் ஊனத்தோடு பிறக்கும்.

விளையாட்டு அம்மை; இதுவும் ஒரு தொற்று நோய் ஆனால் கடுமையானது அல்ல. பெரியம்மைக் கொப்புளங்கள் போல் சருமத்தில் கொப்புளங்கள் உண்டாகும்.

இந்தக் கொப்புளங்கள் முதலில் நடு உடல் பகுதி உச்சந்தலை மணிக்கட்டு முதலிய இடங்களில் உண்டாகும்.

புட்டாலம்மை; கூகை வீக்கம் கூகைக்கட்டு சன்னக்கட்டு பொன்னுக்கு வீங்கி என்ற பல பெயர்களும் இதற்கு வழக்கத்தில் உள்ளன.

காதில் சீழ், வலியோடு இது ஆரம்பமாகலாம். இலேசான காய்ச்சல் அடிக்கும் காதுவலி இருக்கும் எதையாவது மெல்லும் போதோ அல்லது விழுங்கும் போதோ அதிகமாகும்.

காதுகளின் பக்கத்திலும் கழுத்துப் பகுதியிலும் வீக்கம் உண்டாகும். முதலில் ஒரு பக்கம் வீங்கி வடிந்த பிறகு இன்னொரு பக்கம் வீங்குவதும் உண்டு. பெரும்பாலும் பனிக் காலங்களில் இது வரும் என்பர்.

உலோகச்சத்து குறைவால் இது உண்டாவதால் பொன் வெள்ளி முதலிய நகைகளை அணிவிப்பர்.

சில இடங்களில் வீக்கம் வடியத்தொடங்கி சுமார் ஒரு வாரத்தில் குணமாகி விடும். எலுமிச்சை போன்ற புளிப்பு பொருட்கள் காதில் வலியை உண்டாக்கும் அல்லது அதிகமாக்கும்.

ஆண் குழந்தைகளில் சிலருக்கு விதை வீங்கிக் கொள்வதுமுண்டு.

வைசூரி; மக்களைப் பயமுறுத்தும் நோய்களில் மிகக் கொடியது ஆண், பெண் குழந்தை பெரியவர் என்று பார்க்காமல் எல்லோரையும் தாக்கக் கூடியது வேகமாகப் பரவக் கூடியது.

சௌகரியமான சூழ்நிலையில் மாதக் கணக்கில் உயிர் வாழக் கூடிய வைரஸ் போன்ற விஷக் கிருமிகளால் இந்நோய் உண்டாகிறது.

ஈரம் வற்றிக் காய்ந்து உலர்ந்திருக்கும் நிலைமையில் இந்த வைரஸ் நீண்ட ஆயுளுடன் வாழும். வீட்டின் தரையிலும் சுவர்களிலும் மாதக் கணக்காய் இருந்து கொாண்டு உள்ளே வருபவர்களை பிடித்துக் கொள்ளும்.

வைசூரி கண்டவர் உடம்பிலிருந்து உதிரும் பொருக்குகளில் இருந்தும் அசடு (கழிவு) களில் இருந்தும் நோய் தொற்றுதல் உண்டாக்குகின்றது.

வைசூரி உண்டாவதற்கு முன்னர் அமைதி குலைந்து போகும் சிடுசிடுப்பு உண்டாகும். தலைவலி ஏற்படும் முதுகு வலி பிளக்கும் மனத் தளர்ச்சி அதிகமாகும் வாந்தியும் இருக்கும். காய்ச்சல் 103 - 104 டிகிரி வரை இருக்கும். நாடித் துடிப்பும் மூச்சின் ஓட்டமும் வேகமாக இருக்கும்.

முகத்திலும் உள்ளங்கையிலும் பாதத்திலும் அம்மை முத்துக்கள் தெரியும் ஒரே நேரத்தில் இந்த அடையாளம் தெரியும். இந்த நோயின் கடுமை சிலருக்கு வேகமாக இருக்கும். சிலருக்கு லேசாக இருக்கும் இன்னும் சிலருக்கு அப்படியும் இல்லாமல் இப்படியும் இல்லாமல் நடுத்தரமாக இருக்கும்.

இந்நோய் வந்தால் சாவுதான் முடிவு என்று சொல்லப்பட்டிருந்தது. இப்போது தடுப்பு ஊசிகள் வந்தபிறகு மாறிவிட்டது.

நோய் நீங்கிய பிறகு பெரும்பாலும் அம்மை வடுக்கள் முகத்தில் இருக்கும் சிலருக்கு அவலட்சணமாகவும் இருக்கும். ஒரு சிலருக்கு ஒரு கண்ணோ அல்லது இரண்டு கண்களுமோ போய் விடும்.

இதற்கென தனியான சிகிச்சை இல்லை. நோயாளியை கூடியவரை சௌகரியமான நிலையில் வைத்து பராமரிக்க வேண்டும். இந்த நோயாளிக்கு அருகில் எல்லோரும் வரக்கூடாது. வாய்க்கொப்பளிக்க கிருமி நாசினி மருந்து கலந்த தண்ணீரையே பயன்படுத்த வேண்டும் வலி குறைக்க வலிபோக்கி மருந்துகள் கொடுக்கலாம்.

அம்மைப் கொப்புளங்கள் உண்டாகும் போது நோயை முற்ற விடாமல் இருக்க ஊசி போட்டுக் கொள்ளலாம். கொப்புளத்தில் நச்சுத்

தன்மை உண்டாகாமல் இருக்க களிம்பு தடவலாம்.

தடுப்பு ஊசி; குழந்தைக்கு ஒரு வயது முடிவதற்கு முன்னமேயே தடுப்பு ஊசி போட்டுக் கொள்ள வேண்டும். பிறகு பன்னிரண்டாம் வயதில் இன்னொரு முறை அம்மை ஊசி குத்திக் கொள்ளவேண்டும்.

அம்மை நோய்க்குப் பொதுமருத்துவம் :-

தாழம்பூவின் விழுதைத் தட்டிக் கால்படி சாறு எடுத்துக் கொள்ளவும். நான்கு கரண்டி அளவு சர்க்கரை கலந்து காய்ச்சி இரண்டு அல்லது மூன்று வேளை சாப்பிடவும்.

சிகப்பு பூ பூக்கின்ற அகத்தி வேரின் பட்டையை பன்னீர் விட்டு அரைத்துக் கடலை அளவு சாப்பிடவும்.

சிறந்த கிருமி நாசினியான வேப்பிலையை படுக்கையை சுற்றி வைக்க வேண்டும். காற்று வருவதற்கு விசிறியாக்கிக் கொள்ளலாம். தினசரி அரைத்து கொப்புளங்களில் பூசிவர வேண்டும் மறுநாள் வெந்நீரால் நன்கு துடைத்து விட்டு கொஞ்சம் உலர்ந்த பிறகு மீண்டும் புதிய பூச்சைப் பற்றிடலாம்.

மஞ்சள் கிழங்கை துண்டு துண்டாக வெட்டிக் கஷாயம் வைத்து வடிகட்டி உள்ளுக்கு குடிக்க கொடுக்கவும்.

மலச்சிக்கல் இல்லாமல் கவனித்துக் கொள்ள வேண்டும். தாகத்திற்கு தாராளமாக தண்ணீர் அல்லது மோர் குடிக்கச் செய்யலாம். இளநீர் அதிகம் குடிக்கக் கொடுக்கலாம். நமைச்சல் உண்டானால் சொரிந்து கொண்டு கொப்புளம் ரணமாகி விடாமல் இருக்க வேப்பிலையால் மெதுவாகத் தடவி வரவேண்டும்.

அம்மை மாத்திரை: வெள்ளைக் குங்கிலியம் பத்து கிராம் அவுரி இலைச்சாறு கொஞ்சம் எடுத்துக் கொள்ளவும். முதலில் இலைச் சாற்றில் குங்கிலியத்தை அரைக்கவும்.

புழுங்கலரிசி சாதம் நூறுமில்லி சேர்த்து மறுபடியும் நன்றாக அரைத்துக் கடலை அளவு மாத்திரைகளாக்கிக் கொள்ளவும்.

இந்த மாத்திரை இரண்டு வீதம் தினசரி இரண்டு வேளை தேனில் சாப்பிட குணம் உண்டாகும்.

அம்மை நீங்கிய பின்னர் முகம் கை கால்களில் ஏற்படும் சிவப்பு கறுப்பு புள்ளிகள் மறைவதற்கு :

தாழம்பூ இரண்டை சிறிய துண்டுகளாக நறுக்கிக் கொண்டு நூறுகிராம் நல்லெண்ணெயில் போட்டு காய்ச்சவும். இதை மேலே பூசி வந்தால் மறைந்து விடும்.

சாதாரண வியாதிகளுக்கு மருத்துவம் : -

பால் எதிர் எடுத்தால்: கொஞ்சம் சீரகத்தை எடுத்துக் கொண்டு சுத்தமான துண்டுத் துணியில் முடிந்து பாலில் ஊற வைக்கவும். நன்றாக ஊறிய பிறகு துணி முடிச்சை எடுத்துப் பிழிந்து விட்டுப் பாலை மட்டும் குழந்தைக்கு ஊட்டவும்.

வாந்திக்கு : தோல் நீக்கிய வேப்பம் ஈர்க்கு (ஏலக்காய் ஒன்றில் உள்ள) ஏலரிசி ஆகிய இரண்டையும் முடிச்சுப்பண்ணி பால் அல்லது வெந்நீரில் ஊறவைக்கவும். ஒரு வேளை உண்ணக்கூடிய அளவு இருந்தால் போதும்.

ஊறிய பின் அந்த முடிச்சைப் பிழிந்து எடுத்து விடவும். அந்தப் பால் அல்லது வெந்நீரைக் கொடுக்கவும். ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு வேளை மட்டும் கொடுத்தால் போதுமானது.

பேதியானால் : சுக்கைத் தோல் சீவி சுட்டுப் பொடித்து இரண்டு சிட்டிகை அளவு கரண்டி வெந்நீரில் கலக்கவும். அதை வடிகட்டி குடிக்கச் செய்யவும்.

வயிற்று வலிக்கு : விளக்கெண்ணெயை வெற்றிலையில் தடவி அனலில் வதக்கவும். இலேசான சூட்டில் அதை வயிற்றில் போட காற்றுப் பிரிந்து வயிற்றுவலி குறைந்து விடும் மலமும் கழியும்.

கடுகு ரோகிணி வாய்விளங்கம் வசம்பு வெள்ளரி விதை முதலியவற்றை வெந்நீரில் அரைத்து வயிற்றின் மேல் பற்றுப் போடவும். மலம், நீர். காற்று முதலியன பிரியும்.

மார்ச்சளிக்கு ; 1) கம்மாறு வெற்றிலையை வதக்கிப் பிழிந்த சாறு ஐந்து துளியில் கோரோசனையை இரண்டு முறை மட்டும் இழைக்கவும். கோரோசனையை எடுத்து விட்டு ஐந்து துளி தேன் சேர்க்கவும். இதை தாய்ப்பாலில் கலந்து புகட்டவும் மார்ச்சளியும் தொண்டைக் கட்டும் தீரும்.

2) முசுமுசுக்கை ஆடாதோடை கருந்துளசி இம்மூன்றையும் சம அளவில் எடுத்து பிட்டவியல் செய்து சுரசம் எடுக்கவும். ஐந்து முதல் பத்து துளி சுரசத்தில் கடுகு அளவு கோரோசனத்தை பொடி செய்து புகட்டினால் சளி சுரமும் இருமலும் தீரும்.

3) அதிமதுரம் அரிசித் திப்பிலி இரண்டையும் மைபோல் அரைத்துச் சட்டியிலிட்டுத் தண்ணீர் ஊற்றிக் கொதிக்க வைக்கவும். அதை வடிகட்டி ஒரு சங்கு அளவு எடுத்து நான்கு சொட்டு தேன் கலந்து குடிக்கச் செய்தால் மார்புச்சளி தீரும்.

4) கோரோசனம் குங்குமப்பூ முதலிய இரண்டையும் தாய்ப் பாலில் இழைக்கவும் மார்பு, தொண்டை, மூக்குத் தண்டு நெற்றி முதலிய இடங்களில் பற்றுப் போடவும். மார்புச் சளி தொண்டைக்கட்டு மூக்குச்சளி தலைப்பாரம் முதலியன நீங்கும்.

அசீரணப் பேதிக்கு : உத்தாமணி இலைச்சாற்றில் சிறிது உப்புத்தூள் போட்டுக் கொதிக்க வைக்கவும். நன்றாக சாறு சுண்டி வரண்ட பின்னர்க் கிடைக்கின்ற உப்பைப் பொடியாக்கவும் அந்தப் பொடியை ஒரு சிட்டிகை எடுத்து வெந்நீரில் கலந்து குழந்தைகளுக்கு கொடுக்க அசீரணம் நீங்கும்.

மலச்சிக்கலுக்கு : 1) ரோசா மொக்கு கடுகு ரோகிணி வாய்விளங்கம் சூரத்து நிலாவரை வெள்ளை சிவதை முதலியவை களைச் சம அளவு எடுத்து கக்ஷாயமிட்டுக் கொடுக்கவும்.

2. கடுக்காய்த் தோல் நிலாவரை வாய்விளங்கம் சீந்திக் கொடி முதலியவைகளை சம அளவு எடுத்துக் கொள்ளவும். அதற்குச் சரி எடை சுக்கு சேர்த்துக் கஷாயமிட்டுக் கொடுக்கவும்.

3. சுக்கு மிளகு திப்பிலி ஏல அரிசி சீரகம் முதலிய ஐந்தின் பொடியை வெந்நீரில் கலந்து கொடுக்கவும்.

கக்குவானுக்கு: 1 கண்டங்கத்திரி ஆடாதோடை கருந்துளசி திப்பிலி அதிமதுரம் தாளிசப் பத்திரி முதலியவைகளை தேன் விட்டு வதக்கிக் கொள்ளவும். பின்னர் அதைக் கஷாயமிட்டுக் கொடுக்க நோய் தீரும்.

2. முதலை (காய்ந்த) இறைச்சியை வறுத்து தின்னக் கொடுக்கலாம்.

3 புங்கங்கொட்டையை தோலில் வைத்து தைத்து குழந்தையின் கழுத்தில் அணியச் செய்யலாம்.

சிரங்கு குணமாக : 1 வெங்காரத்தைப் பொடி செய்து தேங்காய் எண்ணெயில் குழைத்துப் போடலாம்.

2. மிருதார் சிங்கியையும் இரசகற்பூரத்தையும் தேங்காய் எண்ணெயில் குழைத்துப் போடலாம்.

3. வசம்பு ஒரு பங்கு பூவரசம்பருப்பு மூன்று பங்கு தேங்காய் எண்ணெய் ஐந்து பங்கு மூன்றும் கலந்து பத்து நாட்கள் வெயிலில் வைத்து வரவும் பின்பு அந்த நெய்யை உடம்பில் பூசி சிறிதுநேரம் ஊறவைத்து குளிக்கவும்.

4. கார்போக அரிசி நீரடிமுத்து கசகசா கொப்பரைத் தேங்காய் காட்டுச்சீரகம் முதலியவைகளை சம உடை எடுத்துக் காடி நீர் விட்டு அரைத்து உடலில் பூசி சிறிது நேரம் ஊறிய பின் வெந்நீரில் குளிக்கச் செய்யவும்.

5. குப்பைமேனி கருஞ்சீரகம் இரண்டையும் அரைத்துப் பூசி குளிக்கச் செய்யலாம்.

படைப்பூச்சிகளுக்கு : பூவரசங்காயை இரண்டாகப் பிளந்து அதிலிருந்து ஒழுகும் பாலைத் தடவ படை நீங்கும்.

2 சீமை அகத்தி (வண்டுகொல்லி) இலையைக் கசக்கி படையின் மேல் தேய்த்துக் குளிக்கச் செய்யவும்.

3 எலுமிச்சம் பழத்தை இரண்டாக அறுத்துப் பழுப்பு சர்க்கரையில் அரிந்த பாகத்தை அப்பவும் அதைப் படையுள்ள இடங்களில் தேய்த்து ஊறவைத்து குளிப்பாட்டவும்.

கசகசா கொப்பரைத் தேங்காய் காட்டுச் சீரகம் நீரடிமுத்துப் பருப்பு கார்போக அரிசி கந்தகம் பேன் கொட்டை முதலியவைகளை சம அளவு எடுத்துப் பொடியாக்கிக் கொள்ளவும்.

அந்தப் பொடியை குப்பைமேனிச்சாறு அல்லது புளித்த காடிநீரில் குழப்பி படை சிரங்கு நமைச்சல் உள்ள இடங்களில் பூசி ஊறவைக்கவும். வெந்நீரில் சீக்காய் பொடி தேய்த்து குளிக்க குணமாகும்.

தலைப்பொடுகு : பொடுதலைச் சாற்றில் மிளகுப் பொடியைக் கலந்து சம அளவு எண்ணெய் சேர்த்து வெயிலில் இருபது நாட்கள் வைக்கவும் அதன் பிறகு தலையில் பூசிக் குளிக்கப் பொடுகு தீரும்.

வெள்ளை மிளகு கசகசா வாதுமைப்பருப்பு முதலியன சம அளவு எடுத்து பசும்பால் விட்டு அரைத்த கொதிக்க வைத்து தலையில் பூசிக் குளிக்க பொடுகும் பேனும் நீங்கும்.

பொடுதலைச் செடியை மட்டும் அரைத்துத் தலையில் தடவிக் குளித்தாலும் குணமாகும்.

கண் நோய்கள்

முப்பத்தைந்து கிராம் கடுக்காய்த் தோலின் பொடியை எண்பது கிராம் சிற்றாமணக்கு எண்ணெயில் போட்டு குழப்பிக் கொள்ளவும். ஒரு துணியில் சிறிதளவு எடுத்து முடிச்சுப் போல் செய்து கொள்ளவும். இரண்டு கண்களிலும் அந்த முடிச்சைப் பிழிந்து இரண்டு சொட்டுச் சாறு விடவும். தினசரி மாலை நேரத்தில் மட்டும் சில நாட்கள் செய்து வந்தால் கண் வெளுப்பு சதை வளர்ச்சி நீங்கும்.

புளிப்பு மாதுளம் பழச்சாறில் சிறிதளவு கற்கண்டுப் பொடி சேர்த்துக் கண்களில் பிழியக் கண் நோய்கள் குறையும்.

தும்பை இலைச்சாற்றைப் பிழிந்து கண் இமைகளில் மை பூசுவது போல் தடவவும். காலை மாலை இரண்டு வேளை வீதம் ஏழு நாட்கள் செய்தால் மாலைக்கண் நோய் விலகிவிடும்.

நந்தியாவட்டைப் பூவைப் பறித்து ஒரு புட்டியில் முழுவதுமாக அடைக்கவும். கால்புட்டி அளவு சீனாக்கற்கண்டைப் பொடியாக்கி அதில் போடவும். சில நாட்கள் அப்புட்டியை மூடிவைக்க நீராகி விடும். அந்த நீரை (திரவத்தை) துளிக்கணக்கில் கண்ணிலிட்டு வர கண்நோய்கள் நீங்கும்.

நேத்திரப் பூண்டுச் செடியின் சமூலத்தை நன்றாகக் கழுவி அதற்கு எட்டு மடங்கு நல்லெண்ணெய் விட்டு வெயிலில் வைக்கவும். சுமார் பத்து நாட்கள் வெயிலில் வைத்து எடுத்தால் நன்றாக எண்ணெய் கலந்து விடும். இந்த எண்ணெயை துளிக் கணக்கில் கண்ணில் இடவும் கண் மறைப்பு கண்களில் நீர் வடிதல் எரிச்சல்

முதலியன குணமாகும். சிறு குழந்தைகளுக்கு கண் இரைப்பையின் மீது தடவலாம்.

கண்வலி; கண்வலியை உண்டாக்குகின்ற கிருமிகள் அழுக்கு தூசிமூலம் தான் உள்ளே நுழைகின்றன. கண்வலியும் ஒரு தொற்று வியாதியாகும். ஒருவருக்கு கண்வலி என்றால் அவர் உபயோகித்த துண்டு, சோப்பு போன்றவற்றை மற்றவர் உபயோகிக்கக் கூடாது.

கண்வலி உள்ள நேரங்களில் அல்லது உடல் சூடான நேரங்களில் கண்கள் பீளைநிரம்பி காலையில் கண்திறக்க முடியாமல் செய்துவிடும் வெதுவெதுப்பான தண்ணீரில் துணி அல்லது பஞ்சை நனைத்து கண் இரைப்பைகளின் மீது நனைக்க வேண்டும் ஈரமாகினால் பீளை அகன்றுவிடும். நன்றாகத் துடைத்த பின்னர் சோப்பு முதலியன போடாமல் இருக்கவேண்டும்.

சாம்பலோ தூசியோ கண்ணில் விழுந்து விட்டால் கண்களை விரலால் கசக்கக்கூடாது. கைக்குட்டையால் துடைத்து எடுக்க முயலவும் கூடாது. படுக்க வைத்து கண் இமையைக் கட்டை விரலாலும் சுட்டு விரலாலும் திறந்து விலக்கிக் கொண்டு சாதாரண உப்புக்கரைத்த தண்ணீரை கண்ணுக்குள் விடவும் சாம்பலும் தூசியும் அந்தத் தண்ணீரோடு வெளிவந்து விடும்.

கண்களில் சுண்ணாம்பு சோடா உப்பு போன்ற காரப் பொருட்கள் பட்டால் உறுத்தும் உடனே போக்காவிட்டால் கண் பார்வையே போய் விடலாம். தாமதம் செய்யாமல் கீழ் இமையை கீழே இழுத்து நிறைய தண்ணீர் விட்டால் அந்தப் பொருள் தண்ணீரில் கரைந்து கூடுமானவரை வெளியேறி விடும். அதன் பிறகு கிருமி நாசினி மருந்து கலந்த தண்ணீர் விட்டு கழுவவும்.

காது நோய்கள்

காதுகளில் குறும்பி சேர்ந்து கொண்டு காது கேட்காமல் ஆகி விடுவதுண்டு. வெதுவெதுப்பான தண்ணீரை பீச்சாங்குழல் மூலம் (இங்க்பில்லர்) மூலமும் காதில் விட்டு தலையை சாய்த்தால் குறும்பி வெளியே வந்து விடும். காது நன்றாகக் கேட்கும். முதல் நாள் இரவு தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் சிறிது ஊற்றி பஞ்சு வைத்து விடவும் மறுநாள் காலையில் தண்ணீர் விட்டால் சுலபமாக வந்து விடும்.

காதில் பூச்சி அல்லது எறும்பு நுழைந்து விட்டால் சில சொட்டு தேங்காய் எண்ணெயோ அல்லது நல்லெண்ணெயோ காதில் விடவும். பூச்சி கண்ணுக்குத் தெரிந்தால் சாமணத்தால் எடுத்து விடலாம் சில நேரங்களில் விளக்கு வெளிச்சத்தை காதுக்கு அருகில் காட்டினாலேயே பூச்சி தானாகவே வெளியே வந்துவிடும். இல்லையெனில் தண்ணீர் விட்டுச் சாய்ந்தால் தண்ணீருடன் வெளியே வந்து விடும்.

காது வலிக்கு ஏதாவது தாவர எண்ணெயை இலேசாகக் காய்ச்சி காதில் விட்டு பஞ்சை வைத்து அடைத்து விடவேண்டும்.

வெந்நீர்ப்புட்டியை காதுகளின் ஓரங்களில் ஒத்தடம் கொடுக்கலாம்.

காதுகளில் சீழ் வடியும்போது தினசரி காலையும் மாலையும் ஒரு குச்சியில் பஞ்சையோ அல்லது துணியையோ சுற்றிக் கொண்டு நன்றாகத் துடைக்கவும். அதன் பிறகு மருந்து ஊற்றுவதுதான் குணமாக்கும்.

காதுவலிக்கு: சீதேவியார் செங்கழுநீர்ச்சாறு வெங்காயம் வசம்பு ஆகிய மூன்றையும் வகைக்கு நான்கு கிராம் வீதம் எடுத்து இடித்து முப்பத்தைந்து கிராம் வேப்பெண்ணெய்விட்டு கொதிக்க வைக்கவும். அந்த எண்ணெய் மூன்று சொட்டு காதில் விட்டுப் பஞ்சு வைத்து அடைக்கவும்.

சதுரக் கள்ளியை அனலில் காட்டி அதில் பிழிந்து (இரண்டு சொட்டு) பஞ்சு வைத்து அடைக்கவும். (பத்தியம்) புளி நீக்கவேண்டும்.

சீழ்வடிதலுக்கு : எருக்கிலைச்சாறு முன்னூறு கிராம் நல்லெண்ணெய் முன்னூறு கிராம் சுக்கு திப்பிலி கோஷ்டம் இந்துப்பு கோரைக்கிழங்கு வசம்பு பேரீச்சங்காய் ஆகிய எட்டும் வகைக்கு ஐந்து கிராம் வீதம் சேர்த்து எண்ணெயில் காய்ச்சவும். இதை காதில் மூன்று துளி வீதம் விட்டு வர சீழ் நிற்கும்.

காதுகிருமி பூச்சிக்கு : குப்பைமேனிச்சாறும் குழந்தையின் சிறுநீரும் கலந்து வேளைக்கு மூன்று துளிவிட்டு வர கிருமிகள் சாகும்.

கோழியவரைச்சாறு குப்பைமேனிச்சாறு இரண்டையும் கலந்து மூன்று துளி வீதம் காதில் விட்டு வந்தால் கிருமிகள் சாகும்.

பெருங்காயம் இந்துப்பு சுக்கு முதலிய மூன்றும் வகைக்கு ஐந்துகிராம் வீதம் பொடியாக்கி நூறுகிராம் நல்லெண்ணெயில் போட்டு காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். தினசரி இரண்டுதுளி வீதம் காதில் விட்டு வரவும் பத்து நாட்கள் தொடர்ந்து விட்டு வந்தால் குணமாகும்.

பிரமதண்டுச்செடியின் நுனிக்காம்பு (கொழுந்து) களை எடுத்து நசுக்கி நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சவும். அதை மூன்று துளிக்கணக்கில் காதிலிட்டு பஞ்சிலடைத்து வரக்காது வலி சீழ்வடிதல் முதலியன குணமாகும்.

சிறுதுண்டு சுக்கை தோல் சீவி எண்ணெயில் இட்டு காய்ச்சி ஆறவைத்துக் காதில் விடவும்.

பேன்

தலையில் உள்ள பேனால் நோய்கள் தொற்றக்கூடும். எனவே அசட்டையாக இருந்து விடக் கூடாது. மண்ணெண்ணையும் ஆலிவ் எண்ணெயும் சம அளவு கலந்து கொண்டு இரவில் தலைமயிரிலும் மண்டையிலும் நன்றாகத் தேய்த்து விடவேண்டும். மேலே கைக்குட்டையைக் கட்டி தூங்கி விடவும். மறுநாள் காலையில் ஷாம்பு அல்லது சீயக்காய்த் தூள் போட்டு தலையைக் கழுவ வேண்டும். இப்படிச் சில நாட்கள் செய்தால் முற்றிலும் நீங்கி விடும். எண்ணெய் தேய்த்து தலைக்கு குளிக்கும்போது அரப்புப்பொடி அல்லது உசிலம் பொடி போட்டுத் தேய்த்தாலும் குறைந்துவிடும்.

மருந்து செய்யும்போதும் கொடுக்கும்போதும் கவனிக்க வேண்டியவை :-

பச்சிலைகளைப் பசுமையாகக் கொண்டு வந்து உபயோகிப் பதே சிறந்தது. அப்படி முடியாத போது முதல் நாள் கிடைத்ததை ஈரத் துணியில் சுருட்டி வைத்து உலராமல் செய்ய வேண்டும்.

வேர், இலை, காய், பழம், பட்டை முதலிய எல்லாம் சேர்ந்தது சமூலம் எனப்படும். எந்தச் செடியின் எந்தப் பகுதி மருந்துக்கு என்று தெரியாத போது சமூலத்தைச் சேர்க்கலாம்.

உலர்ந்த வேர், பழங்கள், விதைகள் முதலியவைகளை முதல் நாள் மாலையில் ஆறிய வெந்நீரில் ஊற வைத்துக் கொள்ள வேண்டும். மறுநாள் காலையில் மருந்து செய்ய எடுத்துக் கொள்ளலாம்.

அம்மியில் அரைப்பதாக இருந்தால் காரமான சமையல் பொருட்கள் அரைத்திருக்கக் கூடாது. நன்றாக அலம்பி விட்டு நன்கு காய்ந்த பின்னரே மருந்துக்குரியவைகளை அரைக்கவேண்டும்.

கஷாயம் சாறு முதலியவைகளைச் செய்த அன்றே உபயோகித்து விடவேண்டும் பொடிவகைகளைச் சுத்தமான துணியில் சலித்துப் புட்டியில் பத்திரப்படுத்திக் கொள்ளவேண்டும்.

எண்ணெய் காய்ச்சும்போது சாறுகளில் உள்ள ஈரப்பசை போகும் வரை காய்ச்ச வேண்டும். தீய்ந்து போய்விடாமல் இருக்க இலேசான சூட்டில் காய்ச்ச வேண்டும்.

சாறு எடுத்துக் கொடுப்பதாக இருந்தால் அளவு தெரியாத போது சங்கு (பாலாடை) அளவு கொடுக்கலாம். சுமார் இருபது மிலி.

கஷாயமாக இருந்தால் நூறு மி.லி. வரை கொடுக்கலாம்.

பொடிவகைகளை வெருகடி (பூனைக்கால் அளவு) அல்லது திரிகடி (மூவிரல் கொள்ளும் அளவு) கொடுப்பது வழக்கம் சுமார் ஐந்து மி.லி. கிராம் பொதுவான அளவாகும். பொடியை எதாவது சாறில் தான் கொடுப்பது வழக்கம். அப்படி இல்லாத நேரத்தில் தேன் தாய்ப்பால் அல்லது வெந்நீரில் கலந்து கொடுக்கலாம்.

லேகியம் குழந்தைகளுக்கு சுண்டைக்காய் அளவு எடுத்து கொடுக்கலாம். விழுங்க முடியாத குழந்தையாக இருந்தால் சிறிது தேன் விட்டுக் குழப்பிக் கொடுக்கலாம். சாதத்துடன் அல்லது ரொட்டியுடன் கலந்து கொடுக்கலாம்.

மருந்துகளுக்கு பத்தியம் சொல்லவில்லை என்றால் பொதுவாக நோய் அதிகமாக்கிடாத உணவுகளை மட்டுமே உண்ணச் செய்ய வேண்டும் குழந்தை வைத்தியத்தில் தாய்க்கு பத்தியம் அவசியமானது குழந்தை பத்தியம் இருக்கமுடியாமல் போனாலும் தாய் பத்தியம் தவறக்கூடாது.

தாய்ப்பால் உண்ணாத குழந்தையாக இருந்தாலும் பராமரிக்

கின்ற தாய் பத்தியமாக இருப்பது தான் நோய் குணமாக்க உதவும்.

முத்தடுப்பு :-

நவீனமான முறைப்படி இப்போது அரசாங்கத்தின் மூலம் நோய்கள் உண்டாகாதபடி பற்பல தடுப்பு மருந்துகள் கொடுக்கப்படு கின்றன.

அம்மை நோய்க்கு தடுப்பு ஊசியாக அம்மைப்பால் குழந்தை பிறந்த ஆறுமாதத்திற்குள் போடவேண்டும். பக்கத்து பகுதிகளில் இந்நோய் உண்டான காலத்திலும் சுகாதார அதிகாரிகள் இந்த தடுப்பு ஊசியைப் போடவருவார்கள். தயங்காமல் போட்டுக் கொள்வதுடன் அவசியம் வளரும் குழந்தைகளுக்கு போடச் செய்ய வேண்டும்.

இளம்பிள்ளை வாதத்திற்கு தடுப்பு ஊசி ஒருவருடத்தில் போட வேண்டும். ஒரு மாத இடைவெளி விட்டு இரண்டு தடவை ஊசி போடவேண்டும். அதற்குப் பிறகு ஏழு முதல் பன்னிரண்டு மாதத்திற் குள் மூன்றாம் முறையாக ஒரு தடவை தடுப்பூசி போட வேண்டும்.

தொண்டை அடைப்பான் கக்குவான் இருமல் வாய்ப்பூட்டு நோய் முதலியவற்றிற்கான முத்தடுப்பு ஊசியை மொத்தம் மூன்று தடவை போடவேண்டும். இரண்டு மாதமோ அல்லது இரண்டு வருடமோ ஒரு ஊசி போட்டதற்கும் இன்னொரு ஊசி போட்டதற்கும் இடைவெளி இருக்கலாம். இந்தத் தடுப்பு ஊசியில் இளம்பிள்ளை வாதத்திற்கும் மருந்து கலந்து இருந்தாலும் வாதத் தடுப்பு ஊசியையும் தனியாகப் போடத்தான் வேண்டும்.

சுற்றுப்புறத்தில் நோய் டைபாய்டு காய்ச்சல் என்ற விஷக் காய்ச்சல் உண்டாகி இருந்தால் ஒரு வயதுக்கு மேற்பட்ட குழந்தை களுக்கு அவசியம் ஊசிபோடச் செய்யவேண்டும் காலரா என்னும் வாந்தி பேதி வந்த காலத்திலும் தடுப்பு ஊசி போடச் செய்யவேண்டும்.

பொது மருந்துகள்

கஸ்தூரி குளிகை: குங்குமப்பூ இரண்டு கழஞ்சு, கோரோசனை மூன்று கழஞ்சு முதலியவைகளை முலைப்பால் விட்டு மூன்று மணிநேரம் அரைத்து குன்றிமணி அளவு உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

மாத்திரை எடைக்குத் தாய்ப்பால் விட்டுக் குழைத்து முன் நாக்கில் தடவவும் விஷசன்னி மற்ற சன்னி வகைகள் எல்லாம் விலகும்.

சஞ்சீவி மாத்திரை : கல்நார் கிராம்பு இலவங்கப்பத்திரி செவ்வியம் திப்பிலி, அதிவிடையம், தான்றிக்காய், கருஞ்சீரகம் அக்கரகாரம் கடுகுரோகிணி சாதிக்காய் கற்கடகம் கோரோசனை குங்குமப்பூ முதலியவைகளை சமஎடை எடுத்து இஞ்சிச் சாற்றில் மூன்று மணி நேரம் அரைக்கவும்.

பிறகு கையாந்தகரை (கரிசாலை) சாற்றில் மூன்று மணி நேரமும் நாரத்தம் பழச்சாற்றில் மூன்று மணி நேரமும் அரைத்து பயிறு அளவில் உருண்டை செய்து உலர்த்தவும். இதைக் கொடுத்தால் தோஷ வகைகள், மாந்தம், சுரம், இருமல், ஈளை, காசம் முதலிய எல்லா நோய்களும் நீங்கும்.

சஞ்சீவி லேகியம் : சஞ்சீவிக்கொடி எனப்படும் சீந்தில் வேரின் மேல் தோலைச் சீவி சின்னச் சின்ன துண்டுகளாக நறுக்கி உலர்த்திக் கொள்ளவும் பிறகு அதை தூளாக்கி சலித்துக் கொள்ளவும்.

சாதிக்காய் சாதிப்பத்திரி மல்லி சண்பகப்பூ கற்கடகம் குங்குமப்பூ சந்தனத்தூள் இலவங்கம் சுக்கு ஏலம் முதலியன வகைக்கு கால்பலம் சேர்த்து சூரணம் செய்து கொள்ளவும்.

இரண்டு வகைச் சூரணமும் சம அளவில் எடுத்துக் கொண்டு ஐந்து பலம் கற்கண்டு போட்டு பசுவெண்ணெயில் அரைத்து எடுக்கச் சிறந்த லேகியமாகும்.

பின்கண்ட லேகியங்களையும் உபயோகிக்கலாம்.

கல்யாணி லேகியம் : கலியாணப்பூசணி, கரும்பு, தண்ணீர் விட்டான் கிழங்கு நிலப்பனை கொட்டிக்கிழங்கு அல்லி ஓரிதழ் தாமரை சிட்டி தாமரைக்கிழங்கு பசுந்தோன்றி முசுமுசுக்கை குறாஇலை சீரவள்ளி புளியாரை வல்லாரை கீழ்க்காய்நெல்லி சிறுகீரை அகத்தி ஆடாதோடை வெள்ளரிக்காய் யானைவணங்கி செவ்விளநீர் நெருஞ்சி புளித்தமாதுளை கொடிமாதுளை முதலியவற்றின் சாறும் பன்னீரும் வகைக்கு கால்படி.

சோம்பு சீரகம் கொத்துமல்லி அதிமதுரம் தக்கோலம் நாட்டுப்புடல் பேய்ப்புடல் பேரரத்தை மகாதிரிசாதம் சடாமாஞ்சில்

நன்னாரிவேர் வெட்டிவேர் கூகைநீர் அறுகம்வேர் பெருந்துத்தி நெற்பொரி சந்தனத்தூள் பருத்தி முத்தக்காசு தாளிசபத்திரி கல்நார் கல்மதம் பூரம் செங்கீரை சண்பகப்பூ பிரண்டை நேர்வாளம் சங்கு பற்பம் முதலியன வகைக்கு அரைப்பலம் தூளாக்கிக் கொள்ளவும்.

முதலில் சொன்ன சாறு வகைகளுடன் சர்க்கரை பசுவின் நெய் அரை வீசை சேர்க்கவும். இவற்றைக் காய்ச்சி நன்றாகக் கொதிக்கும்போது தூள் வகைகளைக் கொட்டிக் கிளறி லேகிய பதத்தில் இறக்கவும்.

இந்த லேகியத்தால் தாபசுரம் சன்னிசுரம் சன்னவாதம் பித்தசுரம் வயிற்று எரிவு வெண்பாண்டு க்ஷயம் நீரிழிவு காமாலை மேகம் சோகை வாந்தி மண்டை குத்தல் பீனிசம் முதலியனயாவும் நீங்கும் வேளை ஒன்றுக்கு சுண்டைக்காய் அளவு வீதம், தினம் இருவேளை கொடுக்கவும்.

குங்குமப்பூ லேகியம் : குங்குமப்பூ, வெள்ளரி விதை, சாதிக் காய், இலவங்கப்பூ, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலக்காய், நீருள்ளி, நிலப்பனைவேர், குமரிவேர், நெருஞ்சில், மாதுளம் வித்து, யானை வணங்கி, நெல்முள்ளி, திப்பிலி, அதிவிடையம், கடுக்காய், சுக்கு, தானிக்காய், கூகைக்கிழங்கு, மிளகு, வாதுமை பருப்பு, சப்ஜர விதை, அதிமதுரம், ரோகிணி, சடாமஞ்சில் முதலியன வகைக்கு ஒரு பலம் எடுத்து சூரணிக்கவும்.

கால்படி நெய்யும் ஐந்து பலம் கற்கண்டும் சேர்த்துக் காய்ச்சி அதில் சூரணத்தைக் கொட்டி மெழுகு பதத்தில் இறக்கவும்.

காலை மாலை இருவேளை சுண்டைக்காய் அளவு உண்ணவும் வேட்டை மேகநீர் நீரடைப்பு நீர்ச்சுருக்கு இரத்தப்பிரிமியம் பாண்டு வாதகுஷ்டம் கிரந்தி பதினெட்டுவித சூலை கிறுகிறுப்பு வாய்நீர் ஊறல், கைகால் எரிச்சல், கண் எரிவு, வாந்தி, ஓக்காளம், விக்கல் குன்மம் எலும்புருக்கி மேகம் யாவும் தீரும்.

****

தாமரை
நூலகம்